

# சமூக தொழில்முயற்சி கையேடு


Funded by the European Union

care

Chrysalis
Catalyzing change

BRITISH COUNCIL

Lanka Social Ventures

# சமூக தொழில்முயற்சி கையேடு

நாம் உலகத்தை மாற்றுவதன்
மூலம் அதனை மிகவும் சிறந்த
இடமாக மாற்றலாம்.
அந்த மாற்றத்தை நீங்களே செய்ய
வேண்டும்.



நெல்சன் மண்டேலா

ஐரோப்பிய ஒன்றிய
ஒருங்கிணைந்த கிராமிய அபிவிருத்தி திட்டத்தின் என்டர்பிரைஸஸ்
செயற்திட்டத்தின் அனுசரணையுடன் பிரிட்டிஷ் கவுன்சிலால் வெளியிடப்பட்டது.
லங்கா சோஷல் வென்சர்ஸ் கம்பனியால் தயாரிக்கப்பட்டது.

Funded by the European Union

In collaboration with the Government of Sri Lanka




பிரிட்டிஷ் கவுன்சில்

பிரிட்டிஷ் கவுன்சில்
49, அல்பிரட் ஹவுஸ் காடின்ஸ்,
கொழும்பு 03

முதற்பதிப்பு 2022



© 2022 by British Council

All rights reserved



ISBN : 978-624-5548-11-8



நாம் அனைவரும் வாழ்வதற்கான
மிகவும் சிறந்த இலங்கையை
உருவாக்குவதற்காக அர்ப்பணிப்புடன்
முயற்சிக்கும் அனைத்து சமூக
தொழில்முனைவோர்களுக்கும்
இந்த வெளியீட்டை
சமர்ப்பணம் செய்கிறோம்.

# பொருளடக்கம்

முன்னுரை ........ vii

ஆர்ப்பணம் ........ viii

இந்த கையேடு யாருக்கானது? ........ 1

அத்தியாயம் 01 – சமூக தொழில்முயற்சியாளர்களை அடையாளம் காணுதல் ........ 3

அத்தியாயம் 02 – சமூக தொழில்முயற்சியின் பிரதான பண்புகள் ........ 8

அத்தியாயம் 03 – பல்வேறு சமூக தொழில்முயற்சி வியாபார மாதிரிகள் ........ 18

அத்தியாயம் 04 – சமூக தொழில்முயற்சியை எவ்வாறு ஆரம்பிப்பது? ........ 22

அத்தியாயம் 05 – சமூக தொழில்முயற்சியை ஆரம்பிக்கும் கட்டங்கள் ........ 26

அத்தியாயம் 06 – சமூக தொழில்முயற்சி கருத்துக்களை உருவாக்குதல், தெரிவு செய்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் ........ 39

அத்தியாயம் 07 – சமூக தொழில்முயற்சியை நிறுவுவதற்கு திட்டமிடுதல் ........ 57

அத்தியாயம் 08 – சமூக தாக்கம் என்றால் என்ன, நீங்கள் நினைக்கும் தாக்கங்கள், நிங்கள் வெற்றி பெற இயலுமா என்பதனை எவ்வாறு தெரிந்து கொள்வது? ........ 69

சமூக தொழில்முயற்சிகளுக்கான மேலதிக தகவல்கள் மற்றும் கற்றல் மூலாதாரங்கள் ........ 71


WELCOME to the 2012 SOCIAL ENTERPRISE CONFERENCE
SHARED value
where FINANCIAL RETURN & SOCIAL IMPACT INTERSECT
NEVER DOUBT that a SMALL GROUP of THOUGHTFUL COMMITTED CITIZENS can CHANGE the WORLD
TEST NEW IDEAS
PARTNERSHIPS
COLLABORATION
INTERSECTIONS
LOOK FOR OPPORTUNITY in the INBETWEEN
LEADERSHIP
WHAT'S WORKING?
HELP YOUR FRIENDS BE AS COURAGEOUS AS YOU
TRANSPARENCY
SUCCESSFUL SOCIAL ENTREPRENEURS
IT IS POSSIBLE to SCALE with PHILANTHROPIC DOLLARS
SCALE
BE VULNERABLE
BE POWERFUL
THINK SIMPLE
PARTNERSHIP
PASSION
FAIL FAST & ITERATE LEARN TRY AGAIN
INNOVATION
FERTILE TERRITORY for SOCIAL ENTERPRISE
INCLUSION
EXPAND the BOUNDARIES of ECONOMIC MARKETS TO INCLUDE MARGINALIZED POPULATIONS
IMPACT
PROVIDING GRAPHICS, PROCESS DESIGN & FACILITATION
WHEN EVERYONE IS A CHANGEMAKER WE ALL BENEFIT/ WE NEED TO PROMISE OURSELVES THAT WE WILL HELP EVERYONE GET THERE
"Go out into the world and do well. But, more importantly, GO INTO the WORLD & DO GOOD"
WELL+GOOD

# முன்னுரை

இலங்கையில் சமூக தொழில்முயற்சி எண்ணக்கருவை பிரபலப்படுத்தவதற்காக பிரிட்டிஷ் கவுன்சில் 2013 ஆண்டு தொடக்கம் பல்வேறு செயற்திட்டங்களை அமுல்படுத்தியது. 2017 ஆண்டில் ஐரோப்பிய ஒன்றியத்தின் உதவியுடன் அமுல்படுத்த ஆரம்பித்த (என்டர்பிரைஸஸ்) திட்டத்தை அதன் ஒரு மைல் கல்லாக குறிப்பிடலாம். இந்த திட்டம் கெயார் ஜேர்மன் (Care Germany) நிறுவனம், கிறிசிலிஸ் (Chrysalis) மற்றும் பிரிட்டிஷ் கவுன்சில் (British Council) ஆகியவை இணைந்து அமுல்படுத்தியருந்தன.

இந்த திட்டத்தின் கீழ் பிரிட்டிஷ் கவுன்சில் சமூக தொழில்முயற்சி தொடர்பான செயற்திட்டம் மாத்தளை, நுவரெலியா, பதுளை மற்றும் மொனராகல ஆகிய மாவட்டங்களில் முன்னெடுத்த சமூக தொழில்முயற்சி எண்ணக்கருவை தொழில்முனைவோருக்கு அறிமுகம் செய்தல், சமூக தொழில்முயற்சியை ஆரம்பிப்பதற்கான ஊக்கிவிப்பு மற்றும் சமூக தொழில்முயற்சியின் முன்னேற்றத்துக்கு தேவையான சூழமைவை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

செயற்திட்ட அமுல்படுத்துதலில் தொழிற்முயற்சியாளர்கள், சமூக தொழில்முயற்சியாளர்கள், தொழில்முயற்சியை ஆரம்பிக்க எதிர்பார்ப்போர், அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பல அலுவலர்கள் பங்குபற்றினார்கள்.

இந்த "சமூக தொழில்முயற்சி கையேடு" சமூக தொழில்முயற்சி எண்ணக்கரு தொடர்பான அறிவை மேலும் பெற எதிர்பார்ககும் வாசகர்களை இலக்காக கொண்டு வெளியிடப்படுகிறது. இந்த கையேட்டில் உள்ளடங்கியுள்ள சமூக தொழில்முயற்சி கோட்பாடு, எண்ணக்கரு மற்றும் ஏனைய தகவல்கள் இலங்கையில் சமூக தொழில்முயற்சியாளர்களை உருவாக்குவதல் மற்றும் வலுவூட்டலுக்கு ஏதுவாகும் என்பது நிச்சயமானது.

**சஞ்ஜீவனி முனசிங்ஹ**

நிகழ்ச்சித்திட்ட பிரதானி – பிரிட்டிஷ் கவுன்சில

# சமர்ப்பணம்

இந்த சமூக தொழில்முயற்சி கையேட்டை தயாரிக்கும் பொறுப்பை எம்மிடம் ஒப்படைத்தற்காகவும், அதற்காக வழங்கிய ஒத்துழைப்பு தொடர்பாகவும் பிரிட்டிஷ் கவுன்சில் மற்றும் அதன் நிகழ்ச்சித்திட்ட பிரதானி திருமதி சஞ்ஜீவனி முனசிங்ஹ உள்ளிட்ட சமூக தொழில்முயற்சி அணிக்கு எமது நன்றியை தெரிவிக்கிறோம்.

கடந்த ஏழு ஆண்டுகளில் இலங்கை சமூக தொழில்முயற்சியாளர்களுடன் செயற்பட்ட போது நாம் பெற்ற அறிவு மற்றும் அனுபவம் இந்த கையேட்டை தயாரிப்பதற்கு பெரும் பயனாக அமைந்தது.

இந்த கையேடு அனைத்து தொழில்முயற்சியாளர்களும் தமது சமூக தொழில்முயற்சியை ஆரம்பிக்கும் போதும், அதனை தொடர்ச்சியாக இயக்கும் போதும் ஆற்ற வேண்டிய விடயங்கள் தொடர்பாக மிகவும் எளிமையாக விபரிக்கிறது.
இது அனைத்து தொழில்முயற்சியாளர்களுக்கும் பயனுள்ளதாக அமையும் என நம்பகிறோம்.

**கலாநிதி லலித் வெலமெதஹே**
முகாமைத்துவ பணிப்பாளர் மற்றும்
பிரதம நிறைவேற்று அலுவலர்
சோஷல் வென்சர்ஸ் கம்பனி

Lanka Social Ventures
Supporting entrepreneurship & innovation for social change



## இந்த கையேடு யாருக்காக?

இந்த கையேடு நீங்கள் அல்லது உங்களது அமைப்பு புதிய சமூக தொழில்முயற்சியை ஆரம்பிப்பதற்கு அல்லது அபிவிருத்தி செய்வதற்கு உதவியாக அமையும். புதிய சமூக தொழில்முயற்சியை மேம்படுத்த உதவி வழங்குதல் தொடர்பாக இந்த கையேட்டில் கவனம் செலுத்தப்பட்டுள்ள போதிலும், இது விஷே டமாக :

---

சமூக அல்லது சுற்றாடல் நோக்கங்களுக்கான தொழில்முயற்சியை ஆரம்பிக்க எதிர்பார்க்கும் நபர்கள் அல்லது குழுக்கள்,

---

சமூக தொழில்முயற்சியாக மாற எதிர்பார்க்கும் தன்னார்வ அமைப்புகள், சமுதாய அமைப்புகள் மற்றும் உற்பத்தி குழுக்கள்,

---

சமூக தொழில்முயற்சியை மீள உருவாக்குவதற்கு அல்லது தமது சமுதாயத்துக்கான தொழில் வாய்ப்பை உருவாக்குவதற்கு உகந்த முறையை ஆய்வு செய்யும் சமுதாய குழுக்கள் அல்லது அமைப்புகள்,

---

தமது சமுதாயத்தின் சமூக மற்றும் பொருளாதார நன்மையை ஏற்படுத்துவதற்கு பொருத்தமான முறைமைகளை ஆய்வு செய்யும் சமுதாய குழுக்கள் அல்லது அமைப்புகள்,

---

சமூக தொழில்முயற்சிக்கான ஆலோசனைகள் அல்லது வழிகாட்டல்களை வழங்கும் போதனாசிரியர்க

---

போன்ற தரப்பினருக்கு பயனுள்ளதாக அமையும்.

இந்த கையேடு உங்களது சமூக தொழில்முயற்சியை ஆரம்பிப்பதற்காக அடுத்தடுத்து மேற்கொள்ள வேண்டிய செயன்முறைகள் தொடர்பாக மிகவும் எளிமையாக விபரிக்கும் அதேவேளை, தொழில்முயற்சியை திட்டமிடுதல் தொடர்பான அடிப்படை அறிவை வழங்க முயற்சிக்கிறது. இந்த கையேடு எந்தவொரு தொழில்முயற்சியாளர், சமுதாய குழு அல்லது தன்னார்வ அமைப்புக்கும் சிறந்த முகாமைத்துவ கருவியாக பாவிப்பதற்கு உகந்ததாகும்.







# 1 தொழில்முயற்சியாளர்களை அடையாளம் காணுதல்

## சமூக தொழில்முயற்சி என்றால் என்ன ?

சமூக தொழில்முயற்சி என்பது உலகத்தை நல்ல முறையில் மாற்றுவதற்கு முயற்சிக்கும் வணிக நிறுவனங்கள் ஆகும். சம்பிரதாய ரீதியான வணிகங்களைப் போன்று அவர்கள் இலாபத்தை உழைக்கும் குறிக்கோள் இருந்த போதிலும், அவர்கள் இலாபத்தை பாவித்து மேற்கொள்ளும் விடயங்களில் அவர்கள் தெளிவாக வேறுபடுகிறார்கள். அதாவது நன்நோக்குடைய சமூக மாற்றத்தை உருவாக்குவதற்காக தமக்கு கிடைக்கும் இலாபத்தின் மிகை அல்லது இலாபத்தின் ஒரு பகுதியை அல்லது முழுமையாக தமது சமூக அல்லது சுற்றாடல் குறைக்கோளை அடைவதற்காக மீள முதலீடு செய்கின்றனர். அவ்வாறு இல்லாவிட்டால் நன்கொடையாக வழங்குகிறார்கள். சமூக தொழில்முயற்சியை எந்தவொரு சமுதாயத்திலும், அதாவது கிராமிய அல்லது நகர்ப்புற சமுதாயத்திலும் செயற்படுத்தலாம்.

திறந்த சந்தையில் பொருட்கள் மற்றும் சேவைகளை விற்பனை செய்வதன் மூலம் சமூக தொழில்முயற்சி, தொழில் வாய்ப்புகளை உருவாக்குவதுடன், அவர்களது இலாபம் அவர்களது வர்த்தகத்தில் அல்லது பிரதேசத்தின் சமுதாயத்தில் மீள முதலீடு செய்யப்படுகிறது. அது அவர்கள் சமூக பிரச்சினைகளை தீர்த்து வைத்தல், மனிதர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல், சந்தையிலிருந்து விலகி இருப்போருக்கு பயிற்சி மற்றும் தொழில் வாய்ப்புகளை வழங்குதல், சமுதாயத்துக்கு உதவுதல், சுற்றாடலைப் பாதுகாத்தல் போன்ற செயற்பாடுகளுக்கான வாய்ப்புகளை வழங்குகிறது.

ஐக்கிய இராச்சியத்தில் 1970 ஆண்டுகளின் இறுதிக் காலத்தில் சம்பிரதாய ரீதியான வர்த்தக நிறுவனங்களுக்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்காக சமூக தொழில்முயற்சி எண்ணக்கரு வளர்ச்சியடைத் தொடங்கியது. தனியார் மற்றும் தன்னார்வ துறைகளின் கலப்பாக சமூக தொழில்முயற்சியை கருதலாம். குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு வீடு அல்லது தொழிற் பயிற்சி போன்ற சமூக இலக்குகளுடன் நிதி நன்மையையும் வழங்கும் செயற்பாடுகளில் சமநிலையை ஏற்படுத்தவதற்கு அவர்கள் முயற்சிக்கிறார்கள்.

சமூக தொழில்முயற்சி பல்வேறு துறைகளில் செயற்படுகிறது. அந்த துறைகளில் சமூக சேவை, கமத்தொழில் மற்றும் மீன்பிடித் துறை, பொருள் உற்பத்தி, சுகாதார சேவைகள், அறக்கொடை நிறுவனங்கள், சுற்றாடல் பாதுகாப்பு, மீள் சுழற்சி மற்றும் மிகை அழுத்தம், மாற்று சக்திவலு உற்பத்தி, கலாச்சார பன்மைத்துவம் மற்றும் மரபுரிமைகள், கல்வி, வேலை ஒருங்கிணைப்பு செய்தல், உளவளத்துணை, தகவல் மற்றும் தொடர்பாடல் போன்றவை உள்ளடங்கும். அதற்கு இணையாக சமூக தொழில்முயற்சியில் சிரேஷ்ட பிரஜைகள், சிறுவர்கள் மற்றும் இளைஞர் யுவதிகள், பெற்றோர் மற்றும் ஆசிரியர்கள், மாற்றுத் திறனாளிகள், இயக்க அல்லது கட்புல குறைபாடுகள் உள்ள நபர்கள், தனித் தாய்மார், செய்றபாட்டு ஆற்றல் குறைந்த நபர்கள், முன்னாள் தடுத்து வைக்கப்பட்டோர் மற்றும் அவர்களது குடும்பங்கள் போன்ற பல்வேறு சமூக ரீதியில் அச்சுறுத்தலுக்கு உள்ளாகக்கூடிய பல குழுக்களுடன் செயற்படுகிறது.

சமூக தொழில்முயற்சி என்பது உலகத்தை சிறந்ததாக மாற்றும் ஓர் இயக்கமாகும். சம்பிரதாய வியாபாரத்தைப் போன்று அவர்கள் இலாபம் பெறுதலை நோக்கமாக கொண்டுள்ள போதிலும், அவர்களது இலாபத்தை பயன்படுத்தும் பாங்கில் அவர்கள் வேறுபடுகிறார்கள். அதாவது, நன்நோக்கான சமூக மாற்றத்தை உருவாக்குவதற்காக மீள முதலீடு செய்கிறார்கள் அல்லது நன்கொடையாக வழங்குகிறார்கள்.

**Social Enterprise UK**

## சமூக புத்தாக்கம் **(Social Innovations)**

சமூக புத்தாக்கம் என்பது சமூக ரிதியான தேவைகள் அல்லது சமூக மாற்றத்துக்காக புதிய உற்பத்திகள், சேவைகள் மற்றும் முன்மாதிரி கருத்துக்களை உருவாக்குதலாகும்.

இந்த புதிய எண்ணக்கரு எமது சமூகம் மற்றும் சுற்றாடலுக்கு முதலிடம் வழங்கும், ஏற்கனவே உள்ள சமூக, கலாச்சார, பொருளாதார மற்றும் சுற்றாடல் சவால்களை முகங்கொடுக்க உதவுகிறது.

சில சமூக புத்தாக்கங்கள் ஏதாவது அமுலில் உள்ள கட்மைப்புகள் மற்றும் முறைமைகளைப் புதுப்பிக்கிறது. – அல்லது உறுதியாக மாற்றம் செய்கிறது.

# இலங்கையில் சமூக தொழில்முயற்சி

இலங்கையில் சமூக தொழில்முயற்சிகளுக்கு நீண்ட வரலாறு உள்ளது. அந்த வரலாறு கண்டி மாவட்டத்தில் முதலாவது கூட்டுறவுச் சங்கம் உருவான 1904 ஆம் ஆண்டு வரை நீண்டு செல்கிறது. கால மாற்றத்தில் பல்வேறு பெயர்களால் அழைக்கப்பட்ட போதிலும், வர்த்தக செயற்பாடுகளை மேற்கொள்ளும் சமூக அமைப்புகள் நாட்டின் சமூக – பொருளாதார அபிவிருத்திக்கு பாரிய பங்களிப்பை வழங்கியுள்ளன. இந்த துறையின் முன்னேற்றத்துக்காக பதலீட்டான அரசின் சமூக நலன்புரிக் கொள்கை மிகவும் முக்கியமான பணிப்பொறுப்பை ஆற்றியுள்ளது.

2018 ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் கவன்சில் மேற்கொண்ட இலங்கையின் சமூக தொழில்முயற்சி தொடர்பான ஆய்வுக்கு அமைய சமூக தொழில்முயற்சி பண்புகளைக் கொண்டுள்ள 11,000 வரையான அமைப்புகள் கணக்கிடப்பட்டுள்ளன. சமூக தொழில்முயற்சிகள் ஏனைய வர்த்தகங்களைப் போன்று தமக்கான விஷேடமான சவால்களுக்கு முகங்கொடுக்கலாம். கடந்த ஐந்து ஆண்டுகளில் நாட்டில் ஜனரஞ்சகமான புதிய வியாபாரங்களாக மாறி சமூக தொழில்முயற்சி குறிப்பிடத்துக்க முன்னேற்றத்தை காட்டியுள்ளது. இருப்பினும், கொள்கை வகுப்பாளர்கள், தொழில்முயற்சி சுற்றாடல் கட்டமைப்பு செயற்பாட்டாளர்கள் மற்றும் தனியார் தொழில்முயற்சியாளர்கள் ஆகியவற்றில் சமூக தொழில்முயற்சிக்கு குறைவான கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

**இலங்கையில் சமூக தொழில்முயற்சி பிரிவுகள் பிரதானமாக பின்வரும் அமைப்புகள் மற்றும் நபர்களைக் உள்ளடக்கியதாகும்.**

- சிவில் சமூக அமைப்புகள்
- உற்பத்தி அமைப்புகள்
- கூட்டுறவுச் சங்கங்கள்
- உள்நாட்டு அரச சார்பற்ற நிறுவனங்கள்
- தொழில்வாண்மை அமைப்புகள்
- முதலாவது மற்றும் இரண்டாவது தலைமுறை குடும்ப வர்த்தகங்கள்
- சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முயற்சிகள்
- புதிய தலைமுறை தொழில்முயற்சியாளர்கள் மற்றும் புத்தாக்குனர்கள்

## இலங்கையின் முன்னணி சமூக தொழில்முயற்சியாளர்கள்



## 2 சமூக தொழில்முயற்சியின் பிரதான பண்புகள்

சமூக தொழில்முயற்சிகளில் பொதுவான மற்றும் விஷேடமான சில பண்புகள் உள்ளன. உறுப்பனர்களின் குறிக்கோள் தொழில்முயற்சியின் உயிர்நாடியுடன் இணைந்திருத்தல் சமூக தொழில்முயற்சியின் முக்கியமான சிறப்பம்சமாகும். சம்பிரதாய வணிகங்களைப் போலன்றி, சமூக தொழில்முயற்சிகள் உரிமையாளர்கள் மற்றும் பங்கு வைத்திருப்பவர்களுக்கு இலாபத்தைப் பெற்று வழங்குவதனை விடவும் சமூக அழுத்தங்களை அடைதலே சமூக தொழில்முயற்சியின் குறிக்கோளாகும். மேலும் இலாபத்தை உழைக்கலாம் என்ற போதிலும், சமூகத் தாக்கம் இலாபத்தை விடவும் முக்கியமானது என அவை கருதுகின்றன.

சமூக தொழில்முயற்சியில் பொதுவான மற்றும் விஷேடமான சில பண்புகள் உள்ளன.

சமூக தொழில்முயற்சியின் பிரதான பண்புகளாவன :

- பொருளாதார தாக்கங்களை விடவும் சமூகத் தாக்கம் முக்கியமானதாகும்.
- இலாபத்தின் பெருமளவு தொகை தொழில்முயற்சியின் சமூக இலக்குகளுக்காக மீள முதலீடு செய்யப்படுகிறது.
- சமூக மற்றும் சுற்றாடல் பிரச்சினைகளை கையாள்கிறது, அதாவது, அவர்கள் சமுதாயத்தின் அல்லது மனிதர்களின் வாழ்வியல் அல்லது சுற்றாடலை மேம்படுத்தவதனை நோகக்காக கொண்டுள்ளன.

**சமூக தொழில்முயற்சியின் பின்வரும் பண்புகளும் உள்ளன**

- தெளிவான சமூக குறிக்கோள் - Explicit social objectives
- நிதி கட்டமைப்பு - Funding composition
- இடர் தவிர்ப்பு - Risk aversion
- பருமன் - Scale
- சமூக தொழில்முயற்சி - Social entrepreneurship
- தொடர்புடைய நபர்கள் மற்றும் நிறுவனங்கள் - Stakeholders
- ஊழிய முதலீடு - Sweat equity



## சமூக தொழில்முயற்சி வெற்றியடைவதற்கு தாக்கம் செலுத்தும் காரணிகள்

- வெற்றிகரமான தொழில்முயற்சி பண்புகள் இருத்தல்
- தெளிவான சமூக மற்றும் வர்த்தக குறிக்கோளை கொண்டிருத்தல்
- பலமான மற்றும் உற்சாகமான தலைமைத்துவம் இருத்தல்
- இலக்கு குழு மற்றும் சந்தைக்கு பொருத்தமான வியாபாரத்தை உருவாக்குதல்
- உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் அல்லது சேவைகள் பிறருக்கு பயனுள்ளதாக இருத்தல்
- சிறந்த வியாபார மற்றும் சமூக ங்களுக்கு இடையிலான தொடர்புகளை பேணுதல்.
- பலமான வியாபார கட்டமைப்பு மற்றும் முகாமைத்துவ முறைமை இருத்தல்
- நிதி செயற்பாடுகள் தொடர்பாக கடுமையான பின்பற்றுதல் மற்றும் நிதி ஒழுக்கம் இருத்தல்.
- இலாபமாகவும், பேண்தகு தன்மையிலும் இருத்தல்.
- புதிய விடங்களை கற்றுக்கொள்வதற்கான விருப்பு
- திறந்த மற்றும் வெளிப்படையான தன்மை
- புத்தாக்க கலாச்சாரம் இருத்தல்

## சமூக தொழில்முயற்சி என்றால் என்ன?



சமூக அல்லது சுற்றாடல் பிரச்சினைகளுக்கு தீர்வு தேடுகிறது.



தொழில் வாய்ப்புகள் மற்றும் வருமானத்தை உருவாக்குகிறது.



உழைத்த வருமானத்தை சமூக நோக்கங்களுக்காக மீண்டும் முதலீடு செய்கிறது.



மனிதர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துகிறது

## சமூக தொழில்முயற்சியாளர் மற்றும் சம்பிரதாய தொழில்முயற்சியாளர் ஆகியோருக்கு இடையிலான வேறுபாடுகள்




### சம்பிரதாய தொழில்முயற்சியாளர்

இலாபத்தை ஈட்டும் எதிர்பார்ப்புடன், இடரை எதிர்நோக்கி ஏதாவது வர்த்தக கருமத்துக்காக நிதி முதலீட்டை செய்யும் நபர்.



### சமூக தொழில்முயற்சியாளர்கள்

சுற்றாடல் அல்லது சமூக பிரச்சினைகளை கையாளும் நோக்கத்துடன், இடரை எதிர்நோக்கி ஏதாவது வர்த்தக கருமத்துக்காக நிதி முதலீட்டை செய்யும் நபர்.



# சமூக வியாபார உலகில் சமூக தொழில்முயற்சி நிலைப்படுத்தப்பட்டுள்ள பாங்கு

சமூக தொழில்முயற்சியாளர்கள் மற்றும் சமூக தொழில்முயற்சியின் நிறுவனர்கள் என்ற ரீதியில், நீங்கள் வியாபார உலகில் முக்கியமான பகுதி என்பதனை புரிந்து கொள்வது முக்கியமானதாகும். அதன் காரணமாக வர்த்தக உலகில் உங்களுக்குரிய இடம் எது என்பதனை அடையாளம் காண வேண்டும். வர்த்தக உலகில் சில வகையான பிரதான அமைப்புகள் உள்ளன. அவை இலாபத்தை நோக்கமாக கொண்ட அமைப்புகள் (profit – oriented organisations), இலாபத்தை நோக்கமாக கொண்ட நிறுவன சமூக பொறுப்புடனான அமைப்புகள் (corporate social responsiblility), வர்த்தக செயற்பாடுகள் மூலம் வருமானத்தை ஈட்டும் இலாபம் பெறாத நிறுவனங்கள் (income generating non-profit) மற்றும் இலாபம் ஈட்டாத அமைப்புகள் (non-profit) போன்ற பல வகையான அமைப்புகள் உள்ளன. அதன் காரணமாக சமூக தொழில்முயற்சிகள் கலப்பு அமைப்புகளாக கருதப்படுகின்றன. இலாபம் பெறும் மற்றும் இலாபம் பெறாத ஆகிய இரண்டு நிறுவனங்களினதும் பண்புகள் அவற்றில் உள்ளன. பின்வரும் உரு ஊடாக சமூக தொழில்முயற்சி வர்த்தக உலகில் எந்த இடத்தில் இடத்தில் இருக்கிறது என்பதனை காட்டுகிறது.



## பிரபல சமூக தொழில்முயற்சியாளர்கள் மற்றும் அவற்றின் உருவாக்குனர்கள் தொடர்பான சில உதாரணங்கள்

# பயோலைற் எனர்ஜி, நியூயோர்க், ஐக்கிய அமெரிக்கா
# Bio-Lite Energy, New York, United State of America



### சமூக புத்தாக்குனர்கள்

எலெக் பிறமன்ட் மற்றும் ஜொனதன் சிடர் ஆகிய இரண்டு பொறியிலாளர்கள் 2006 ஆம் ஆண்டில் ஆரம்பித்த இந்த சமூக தொழில்முனைவின் மூலம் குறைந்தளவு சக்திவலுவில் இயங்கும் ஒழியூட்டல் மற்றும் சமையல் உபகரணங்களை உற்பத்தி செய்து விற்பனை செய்கிறார்கள்.

### அடையாளம் காணப்பட்ட சமூகப் பிரச்சினைகள்

விலை அதிகமான மண்ணெண்ணை மூலம் ஒளியூட்டல் மற்றும் செல்லிட தொலைபேசிக்கு வலு ஏற்றுவதற்காக உலகிலுள்ள வறிய மக்கள் 27 பில்லியன் டொலர்களை மொத்தமாக செலவு செய்கின்றனர். உலகில் 3 பில்லியன் அளவான மக்கள் உணவை சமைப்பதற்காக இன்றும் விறகைப் பாவிக்கிறார்கள். வீட்டுக்கான உணவு சமைப்பதனால் ஏற்படும் புகையால் 4 மில்லியன் மக்கள் சுவாச மற்றும் இதயம் சார்ந்த நோய்களால் பாதிக்கப்படுகின்றனர். 2.5 பில்லியன் மக்கள் இதுவரையும் வீட்டுக்கான மின்சார வசதி அற்றவர்களாக உள்ளனர்.

### சமூக தீர்வு மற்றும் தாக்கங்கள

BioLite நவீன எரிபொருளைப் போன்று விறகை பாவித்து உணவு சமைத்தலை சுத்தமான, பாதுகாப்பான மற்றும் உயர்தரமான சக்திவலு உற்பத்திகளை அபிவிருத்தி செய்து, உற்பத்தி செய்வதுடன் செல்லிட தொலைபேசி மற்றும் LED லைற்றுகளுக்கு மின்சாரத்தையும் வழங்குகிறது. 50,000 வரையான BioLite உற்பத்திகள் 23 நாடுகளில் விற்பனை செய்யப்பட்டுள்ளன. 1,785,509 நபர்கள் தற்போது BioLite உற்பத்திகள் ஊடாக தூய்மையான சக்திவலுவை உருவாக்கி பாவிக்கிறார்கள்.

# ஏர்த்பவுன்ட் கிரியேசன்ஸ், போவல, கண்டி
# Earth Bound Creations, Bowala, Kandy



### சமூக புத்தாக்குனர்கள்

Earth Bound என்பது கண்டி பிரதேச இளைஞரான சாஹர லியனகே அவர்களால் 2013 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட சமூக தொழில்முயற்சியாகும் என்பதுடன், அது மீள் சுழற்சி செய்யப்பட்ட பழைய பத்திரிகை காகிதங்களை பாவித்து கைளால் உருவாக்கப்பட்ட கைப்பணிப் பொருட்கள், காகிதப் பென்சில்கள், கடுதாசி கைவினைப் பொருட்கள், பாத்திரங்கள் மற்றும் கொள்கலன்கள், காகிதப் பைகள் மற்றும் மேலும் பல பொருட்கள் அங்கே உற்பத்தி செய்யப்படுகின்றன. வர்த்தக ரீதியான சமூக தொழில்முயற்சி மாதிரியாக இயங்குவதுடன், அதின் ஊழியர்கள் தமது வீட்டிலிருந்தே வேலை செய்வதுடன், பெண்களின் வருமான வழி பாதுகாக்கப்படுதல் மற்றும் கிராமிய யுவதிகளைப் பலப்படுத்தி, உருவாக்கப்பட்ட உற்பத்தி இயக்கத்தினால் சந்தைப்படுத்தப்படுகிறது.

### அடையாளம் காணப்பட்ட சமூகப் பிரச்சினைகள்

சுற்றாடல் மாசடைதல் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினையாக அடையாளம் காணப்பட்டுள்ளது. அதற்கு மேலதிகமாக தமது சமூகத்தில் வறிய மற்றும் குறைந்த வருமானம் பெறும் சில குடும்பங்கள் இருப்பதாகவும், பெரும்பாலான பெண்கள் தொழில் தேடி மத்திய கிழக்கு நாடுகளுக்கு புலம்பெயர்ந்து செல்வதாகவும் அவர்கள் அடையாளம் கண்டுள்ளதுடன், அவை அந்த சமூகத்தில் பாரிய சமூக பிரச்சினையாக காணப்படுகின்றன.

### சமூக தீர்வு மற்றும் தாக்கங்கள

ஆரம்பத்தில் 3 நபர்களுடன் ஆரம்பிக்கப்பட்ட இந்த தொழில்முயற்சி 2021 அண்டளவில் 700 வரையான கலைஞர்கள் பணியாற்றும் நிறுவனமாக மாறியுள்ளது. உற்பத்திகளுக்கு உரிய தனித்துவமான விஷேடமான இலங்கைப் படைப்புகளின் இரசனை, வெற்றிக்கான பிரதான காரணியாகும். வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் உற்பத்திகள் உற்பத்தி செய்யப்படுவதுடன், பயிற்சி பெறாதவர்கள் தொடக்கம் பகுதியளவான பயிற்சி பெற்றோர் மற்றும் திறமையான கலைஞர்கள் வரையான நபர்களின் சுதேச திறமைகளை பாவித்து கழிவுப்பொருட்கள் மூலம் செய்யப்படும் ஒட்டுமொத்த உற்பத்தி செயன்முறையும் சூழல் நேயம் மிக்கதாகும். உற்பத்திகளை இத்தாலி, ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா, அவுஸ்திரேலியா, கட்டார், ஜேர்மன், ஹொங்கொங், மாலைதீவு மற்றும் நெதர்லாந்து ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து அன்னியச் செலவாணி ஈட்டப்படுகிறது.

விலை குறைந்த சுகாதார நெப்கின்கள் - கோயம்புத்தூர், இந்தியா

# Low-cost Sanitary Pads, Coimbatore, India



## சமூக புத்தாக்குனர்கள்

அருணாச்சலம் முருகானந்தம் அவர்கள் பாடசாலையில் கல்வியை நிறைவு செய்யாமல் இடையில் விலகியவராவார். பின்னர் வெல்டிங் பட்டறையில் உதவியாளராக பணிபுரிந்தார். சமூக தொழில்முயற்சியாளரான அவர், குறைந்த செலவில் சுகாதார நெப்கின்களை உற்பத்தி செய்யும் இயந்திரத்தை கண்டுபிடித்தார். மாதவிலக்கு ஏற்படுதல் தொடர்பான தெளிவுபடுத்தலை இந்தியாவின் கிராமப் புறங்களில் மேற்கொள்வதற்கான அடிமட்ட பொறிமுறையை நவீனமயப்படுத்திய பெருமை அவரைச் சாரும். அவரது சிறிய இயந்திரங்கள் மூலம் சந்தை விலையை விடவும் மூன்றில் ஒரு மடங்கு செலவில் சுகாதார நெப்கின்களை உற்பத்தி செய்யலாம்.

## அடையாளம் காணப்பட்ட சமூகப் பிரச்சினைகள்

இந்தியாவில் 88% பெண்கள் தமது மாதவிலக்கு காலத்தில் சாம்பல், காகிதம், மணல், பட்டைகள் மற்றும் உலர்ந்த இலைகளைப் பாவிக்கின்றனர். இந்த அசுத்தமான வழிமுறைகள் காரணமாக 70% அதிகமான பெண்கள் இனப்பெருக்க தொகுதி தொற்றுநோய்களால் பாதிக்கப்படுகின்றனர். அது சார்ந்த புற்றுநோய் ஏற்படும் சாத்தியமும் அதகிகமாகும்.

## சமூக தீர்வு மற்றும் தாக்கங்கள்

அருணாச்சலம் முருகானந்தம் (முருகானந்தம்) பெண்களின் சுகாதார பாதுகாப்பு தொடர்பான புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளதுடன், பெரும்பாலும் இந்திய கிராமப்புற பெண்களின் சுகாதாரம் மற்றும் வாழ்வாதாரம் தொடர்பில் பேண்தகு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளார். அவர் முன்னோடியான மற்றும் காப்புரிமை பெற்றுள்ள குறைந்த செலவில் சுகாதார நெப்கின்களை தயாரிக்கும் இயந்திரங்களை நியாயமான விலையில் வழங்குகிறார். 23 மாநிலங்கள் மற்றும் 10 நாடுகளில் ஆயிரத்துக்கு மேற்பட்ட இயந்திரங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

# ஹவுஸ் ஒப் லொனாலி
# House of Lonali, Sri Lanka



## சமூக புத்தாக்குனர்கள்

இளம் ஆடை வடிவமைப்பாளர் மற்றும் பெண் சமூக தொழில்முயற்சியாளரான லொனாலி றொட்ரிக்கோ எப்போதும் சிறந்த உலகத்தை உருவாக்குவதற்கு தேவையான பங்களிப்பை செய்ய முயற்சிக்கிறார். லொனாலி வடிவமைப்பாளராக மாறிய பின்னர், சுற்றாடல் தொடர்பான சாதகமான தாக்கத்தை ஏற்படுத்துவதற்காக தனது திறமை மற்றும் படைப்பாற்றலை பாவிக்கக்கூடிய பல்வேறு முறைகள் தொடர்பாக வினைத்திறனாக ஆராய்ந்து பார்த்தார். ஹவுஸ் ஒப் லொனாலி என்பது மனிதர்கள் மற்றும் பூமி ஆகிய இரண்டையும் இதயமாக கொண்டு நிபந்தனைகள் அற்ற வடிவமைப்பு மற்றும் வடிவமைப்புகளை உரவாக்கும் மதிநுட்பமான வாழ்வியல் பாங்கின் அடையாளமாகும். ஆனைத்து தவறுகளிலும் அற்புதமான அலங்காரம் உள்ளதுடன் காலத்துடன் நாம் மேற்கொள்ளும் சிறிய தெரிவுகளை எதிர்கால நன்மைக்காக மாற்றுவதற்கு இயலுமை இருப்பதாக லொனாலி நம்புகிறார். ஹவுஸ் லொனாலி இலங்கையின் முன்னோடி மேல்சுழற்சி (upcycle) வர்த்தக பெயராக வீணாகப்போகும் துணிகளை பாவித்து உன்னதமான வடிவமைப்பு பொருட்கள் சிறந்த மனபபாங்குடன் மனிதர்கள் மற்றும் புவிக்கு சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தவதுடன், உற்பத்தி மற்றும் நுகர்வின் போது ஏற்படுத்தக்கூடிய எதிர்த் தாக்கத்தை குறைக்கிறது.

## அடையாளம் காணப்பட்ட சமூகப் பிரச்சினைகள்

இலங்கை அதன் வளர்ச்சியடையும் ஒழுக்கநெறி மிக்க ஆடைத்தொழில் துறைக்கு பிரபலமானதாகும். அது ஏற்றுமதி வருமானத்துக்கும், நாட்டின் தொழிலாளர் படைக்கும் பங்களிப்பு வழங்குகிறது. நுகர்வுக்கு முன்னர் தொழிற்சாலையிலிருந்து அகற்றப்படும் தேவையற்ற துணி கழிவுகளை மூலப்பொருட்களாக பாவித்தல் மற்றும் அதன் மூலம் சிறந்த எதிர்காலத்தை திட்டமிடுதல் லொகாலியின் முயற்சியாகும்.

## சமூக தீர்வு மற்றும் தாக்கங்களள

முன்னைய நுகர்வு கழிவுப்பொருள் (பிரதானமாக துணிகள்) தொழில்முயற்சின் பிரதான வளமாகும் என்பதுடன், குப்பை குவியல்களில் போடப்படக்கூடிய அல்லது எரித்து அழிக்கக்கூடிய அனைத்து துணிகளும் கழிவுகளாக கருதப்படுகின்றன. தற்போது 2,862 கிலோ கிராம் கழிவு துணிகள் பாவிக்கப்பட்டு 18,362 அலங்கார பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. 15,730 நபர்களுடன் கலந்துரையாடல், கருத்தரங்குகள் மற்றும் பயிற்சிகள் மூலம் அறிவு பகிரப்பட்டுள்ளது.

# கன்டலா கம்பனி, இலங்கை
# Kantala, Sri Lanka



## சமூக புத்தாக்குனர்கள்

விக்கும் ராஜபக்ஸ மற்றும் நதிஷான் சாந்திகுமார் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட கன்டலா கம்பனி 300 ஆண்டுகள் பழமையான தும்பர சணல் பாய் இழைக்கும் கலைஞர்களின் தாக்கத்திற்கு உட்பட்ட பேண்தகு மாமிச கலப்பற்ற (vegan) வடிவமைப்பு வர்த்தக பெயராகும். மீளுருவாக்கம் செய்யப்பட்ட சணல் தாவரங்கள், Fair Trade சான்றுபடுத்தப்பட்ட கைத்தறி மற்றும் Pinatex போன்ற மாமிச நார் அற்ற இயற்கை நார் உற்பத்திகள் மற்றும் பேண்தகு பொருட்களை மட்டுமே பாவித்து, கன்டலா பெண்கள் டோடி பேக், க்ளச் பேக், பேர்ஸ் மற்றும் பல உதிரிப்பாகங்கள் போன்றவற்றை தயாரிக்கிறது. கன்டலா தனது வர்த்தகப் பெயர் உற்பத்திகளை திட்டமிடுதல், மூலப்பொருட்களின் வழங்கல், வர்த்தக பெயரிடுதல், சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனையில் ஈடுபடுவதுடன், அனைத்து செயற்பாடுகளும் வெளிவாரி உற்பத்தி செயற்பாடுகளும் இலங்கையின் வீட்டு, நுண் மற்றும் சிறிய தொழில்முயற்சியாளர்களால் மேற்கொள்ளப்படுகிறது. அனைத்து கன்டலா உற்பத்திகளும் மனிதர்கள் மற்றும் பூமிக்கு சாதகமானவை என உறுதி செய்யப்படுகிறது.

## அடையாளம் காணப்பட்ட சமூகப் பிரச்சினைகள்

கிராமிய மற்றும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகக்கூடிய சமூகங்களுக்காக நியாயமான பொருளாதார வாய்ப்புகளை உருவாக்குவதற்கு உதவம் சம்பிரதாய மற்றும் உள்நாட்டு கலைத் துறைகளின் கட்புலனாகாத பல கலாச்சார சொத்துக்கள் இலங்கையில் உள்ளன. அவ்வாறே பல நூற்றாண்டுகள் பழமையான பெறுமதியான உள்நாட்டு அறிவையும் சேர்த்துக் கொண்டு இவ்வாறான பல கலைகள் அழிவடையும் நிலையை நெருங்கியுள்ளன. இந்த சம்பிரதாய மற்றும் உள்நாட்டு கைப்பணிகள் காலத்துக்கு ஏற்ற வகையில் உயர் தரமான மற்றும் சிறப்பான உற்பத்திகளுக்கு ஏற்புடையதாக அமைதலும், பெண்கள், இளைஞர் யுவதிகள் மற்றும் ஏனைய ஒதுக்கப்பட்ட சமூகங்களுக்கு பாதுகாப்பு மற்றும் கௌரவமான வாழ்வாதாரத்தை வழங்குதலும் கன்டலா கம்பனியின் குறிக்கோள் ஆகும். அவ்வாறே, கன்டலா நுகர்வோருக்கு பொறுப்புடைய, உயர்ந்த தரமான மற்றும் நன்றாக திட்டமிடப்பட்டுள்ள அலங்கார உதிரிப்பாகங்களுக்காக மனிதர்கள் மற்றும் பூமிக்கு பாதிப்பில்லாத மாற்றுத் தெரிவை வழங்குகிறது.

## சமூக தீர்வு மற்றும் தாக்கங்கள

தும்பர சணல் பாய் இழைக்கும் சம்பிரதாய கலைஞர்களின் நெருக்கமான ஒத்துழைப்புடன் செயற்படும் கன்டலா, சமகால வடிவமைப்பு மற்றும் உயர் தராரத்துக்கு ஏற்ற வகையில் உன்னதமான மாமிச கலப்பற்ற பொருட்களை உற்பத்தி செய்யக்கூடிய வழங்கல் சங்கிலியை உருவாக்கியுள்ளது. கைகளால் இழைக்கப்பட்ட தும்பர சணல் பாயுடன் ஒருங்கிணைந்த வழங்கல் சங்கிலியை உருவாக்கி, கன்டெலா சம்பிரதாய கலைஞர்களுக்கு சணல் பாய் பின்னுதல் தொடர்பான நிபுணத்துவ அறிவை வழங்கியுள்ளதுடன், அவர்கள் உயர் தரமான பாய்களை உற்பத்தி செய்வதற்கும், அதன் மூலம் உயர்ந்தளவு சம்பளத்தை பெறுவதற்கும் இயலுமை கிடைக்கும். அவற்றில் சாதாரண வயது மட்டத்தை சேர்ந்தவர்களும் உள்ளடக்கி, இள வயதினரின் திறமையையும் ஈர்த்தக் கொள்வதில் கன்டெலா வெற்றி பெற்றுள்ளது.



# 3 பல்வேறு தொழில்முயற்சி இயக்கங்களின் மாதிரிகள்


சமூக தொழில்முயற்சிகள் சமூக பிரச்சினைகளுக்கு பல்வேறு வர்த்தக ரீதியான தீர்வுகளை வழங்குகின்றன. கொடைகள் மற்றும் நன்கொடைகளில் மட்டும் தங்கியிருக்காமல் நவீன முறைகளில் நிதி ரீதியான பேண்தகு தன்மையை அடைதல் இறுதி இலக்காகும். இலாபம் ஈட்டாத அமைப்புகளில் பங்குதாரர்கள் இல்லை என்பதனால், குறித்த சமூக தொழில்முயற்சி மூலம் கிடைக்கும் இலாபம் முழுமையாக அல்லது அதன் ஒரு பகுதி அமைப்பின் குறிக்கோளை அடைவதற்காக மீள முதலிடு செய்யும் இயலுமை உள்ளது.

வியாபார மாதிரியில் இரண்டு பிரதான அங்கங்கள் உள்ளன :

1. அமைப்பிலிருந்து எதிர்பார்க்கும் தாக்கத்தை ஏற்படுத்துவதற்காக முக்கியமான உள்ளக கட்டமைப்பு மற்றும் வெளிவாரி பங்குபற்றுதல் அடங்கிய நடவடிக்கை மூலோபயம் மற்றும்

2. அமைப்பு தனது கருமத்துக்கு தேவையான வளங்களை (நிதி மற்றும் மனித) எங்கே, எவ்வாறு பெறுதல் மற்றும் என்ன நிபந்தனைகளின் அடிப்படையில் என்பதனை வரைவிலக்கணம் செய்யும் வள மூலோபாயம்.

சமூக தொழில்முயற்சி இயக்க மாதிரி என்பது சமூக தொழில்முயற்சியால் உள்ளீடுகளின் விளைவாக மாற்றம் செய்யப்படும் வழிமுறையாகும். சமூக விழுமியங்கள் (அளவிடக்கூடிய தாக்கங்கள்) மற்றும் பொருளாதார பெறுமானங்கள் (வருமானம்) ஆகிய இரண்டையும் உருவாக்கும் வகையிலான முறையை வெளிப்படுத்தும் மாதிரியாகும்.


INTRO TO BUSINESS MODEL THINKING AS A STRATEGY TOOL
Alex Osterwalder @business_design
Jan. 26 2012 San Francisco
#bmgen
Business Model Generation
The STORY of the BOOK
2004
Dissertation... got downloaded!
Let's write a book!
A best-seller!
BUT... There are LOTS of books already...
...with lots of TEXT.
Let's make it VISUAL!
We want to help write the book!
WORLDWIDE ADOPTION!
1958 INVENTION OF THE PHOTOCOPIER
There's NO Market.
We'll lease the machine... and charge for copies.
XEROX
WHAT DID THEY DO?
1. EMPOWER PRODUCT through BUSINESS MODEL
2. INVENT a NEW BUSINESS MODEL
3. TAKE a RISK - EXPERIMENT
Nespresso
Swiss spending on coffee is UP 600% (2 yrs)
... what is their business model?
1994
SEARCH ENGINES
Make money from FREE?
Buy the search term!
Experience = high end
More money from pods
Own distribution channel
Patented pods
Elegant customer experience
WHAT IS A BUSINESS MODEL?
ECOSYSTEM - ORGANISM
CONTINUAL PROCESS
FORMULA ONE CAR
FEATURES INTO ADVANTAGES
HOLISTIC LOOK @ BUSINESS
DELIVERS VALUE
Blah blah blah
TOWER OF BABEL
BACK STAGE
FRONT STAGE
BUSINESS MODEL CANVAS
BUSINESS MODEL ≠ ORG CHART
Business Model Portfolios
@ninmah | Rachel Smith

| வியாபார மாதிரி<br>Business Model | அது செயற்படும் முறை<br>How it works | உதாரணம்<br>Examples | வெற்றிக்கான பிரதான காரணிகள்<br>Key Success Factors |
|---|---|---|---|
| வருமானம் குறைந்த சேவை பெறுனர்கள்<br>Low-income client | சேவை பெறுனர்களுக்கு சேவை வழங்குவதற்கான கட்டணம் சமமானதாக இருந்த போதிலும், அதனை வேறு வழியில் செலவு செய்ய முடியாதவர்கள் அணுகும் வசதிகளை வழங்குதல் தொடர்பாக கவனம் செலுத்துகிறது. | சுகாதார பாதுகாப்பு (மருத்துகள், மூக்குக் கண்ணாடிகள்), பயன்பாட்டு செயற்திட்டங்கள் | ஆக்கபூர்வமான விநியோக கட்டமைப்பு, குறைவான உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் கிரயம், உச்ச செயற்பாட்டு வினைத்திறன். |
| கூட்டுறவு<br>Cooperative | கூட்டான சேவைகள் ஊடாக உறுப்பினர்களுக்கு நன்மைகள் வழங்க-ப்படுகின்றன. | மொத்த விலையில் கொள்வனவு செய்தல், கூட்டான பேரம் பேசல் முறை, (தொழிற் சங்கங்கள்) கமத்தொழில் கூட்டறவு, கடன் சங்கங்கள் | உறுப்பினர்களுக்கு பொதுவான தேவைகள் / தேவைப்பாடுகள் உள்ளன, பிரதான பங்குதாரர்கள் மற்றும் முதலீட்டாளர்கள் |
| சந்தை தொடர்புகள்<br>Market linkage | சேவை பெறுனர்கள் மற்றும் வெளிவாரி சந்தைகளில் சந்தை தொடர்புக்கான வசதிகளை வழங்குகிறது | சேவை பெறுனர்கள் மற்றும் வெளிவாரி சந்தைகளில் சந்தை தொடர்புக்கான வசதிகளை வழங்குகிறது | சேவை பெறுனர்களின் உற்பத்திகள் விற்பனை செய்யப்படுவதில்லை என்ற போதிலும், சேவை பெறு-னர்களை சந்தையுடன் தொடர்புபடுத்துகிறது. |
| சேவை மானியங்கள்<br>Service subsidization | ஏனைய சமூக செயற்திட்டங்களுக்கு வழங்குவதற்காக உற்பத்தி அல்லது சேவைகளை வழங்குவதற்காக உற்பத்தி அல்லது சேவைகள் வெளிச் சந்தைகளில் விற்பனை செய்கிறது. இந்த மாதிரி இலாபம் ஈட்டாத அமைப்புகளுடன் இணைந்துள்ளது. வியாபார செயற்பாடுகள் மற்றும் சமூக செயற்திட்டங்கள் இணைந்து மேற்கொள்ளப்படுகின்றன. | ஆலோசனை, தொழில் பயிற்சி, லீஸிங், அச்சக சேவைகள் போன்றவை | நிலையான சொத்துக்கள் (கட்டிடங்கள், காணி, ஊழியர்கள்) அல்லது கட்புலனாகாத (விஷேட தேவைப்பாடுகள், முறைமைகள் அல்லது தொடர்புகள்) ஊக்குவிக்கப்படலாம். |
| நிறுவன ஒத்துழைப்பு<br>Organizational support | சேவை மானியங்களுக்கு சமமான போதிலும், வெளிவாரி வியாபார செயற்பாடுகள் சமூக செயற்திட்டங்களில் இரந்து வேறுபடுகிறது. | சேவை மானியங்களுக்கு சமமானது )ஆதன் சொத்துக்களை விருத்தி செய்யும் எவ்விதமான அனைத்து செயற்பாடுகள் | சேவை மானியங்களுக்கு சமமானது |
| தோழில்முனைவோர் ஒத்துழைப்பு<br>Entrepreneur support | அதன் இலக்கு மக்களுக்கு வர்த்தக ஒத்துழைப்பை சந்தைப்படுத்துகிறது. | நுண்நிதி அமைப்புகள், ஆலோசனை அல்லது தொழில்நுட்ப உதவி | தொழில்முனைவோருக்கு பொருத்தமான பயிற்சி |
| சந்தைத் இடைத் தரகர்கள்<br>Market intermediary | வாடிக்கையாளர்கள் சந்தையில் சந்தையில் நுழைவதற்கு சேவை வழங்கல் | நியாயமான வர்த்தக, கமத்தொழில் மற்றும் கைத்தொழில் அமைப்புகள் போன்ற கூட்டுறவு | ஆரம்ப கிரயத்தை குறைத்தல், சேவை பெறுனர்கள் தமது சமூகத்தில் இருப்பதற்கும் வேலை செய்வதற்கும் இடமளிக்கிறது. |
| தொழில் வாய்ப்பு<br>Employment | சேவை பெறுனர்களுக்கு தொழில் வாய்ப்புகள் மற்றும் தொழிற் பயி-ற்சிகளை வழங்கி அதன் உற்பத்திகள் அல்லது சேவைகள் திறந்த சந்தையில் விற்பனை செய்யப்படுகின்றன. | புவியியல் காட்சிகள், உணவகம், அச்சு அல்லது ஏனைய திட்டங்களில் தொழில்வாய்ப்புகளை வழங்கும் மாற்றுத் திறனாளிகள் அல்லது இளையோர் அமைப்புகள் | தொழில் பயிற்சி தகைமை மற்றும் வர்த்தக ரீதியான சாத்தியம் |
| இலவச சேவைகள்<br>Free-for-service | சமூக சேவைகளை நேரடியாக வேவை பெறுனர்கள், மூன்றாம் தரப்பாக செலுத்துவோருக்கு விற்பனை செய்தல். | உறுப்பினர் அமைப்புகள், நூதனசாலை மற்றும் கிளினிக் | நன்மைகளுக்கு மிகவும் பொருத்தமான கட்டண முறையை நிறுவுதல் |

## உங்களது சமூக தொழில்முயற்சியை ஆரம்பிக்க முன்னர் சிந்தியுங்கள் - சமூக தொழில்முயற்சி உங்களுக்கு பொருத்தமானதா?

உங்களது சமூக தொழில்முயற்சியை ஆரம்பிக்க முன்னர், நீங்கள் சமூக தொழில்முயற்சியை ஆரம்பிப்பதற்கு தேவையானது என்ன என்பதனை சிந்திப்பது முக்கியமானது என்பதுடன், அதனை செயற்படுத்தவதற்கு தேவையானவை உங்களிடம் இருக்கிறதா என்பது தொடர்பாக நீங்கள் நேர்மையாக சிந்திக்க வேண்டும். நீங்கள் தொடர்ந்தும் முன்னேறிச் செல்ல முன்னர் யதார்த்தத்தை பரீட்சித்துப் பார்க்க வேண்டிய சில விடயங்கள் கீழே குறிப்பிடப்படுகிறது.

சமூக தொழில்முயற்சி உங்களுக்கு அல்லது உங்களது அமைப்புக்கு நிதியை ஈட்டித்தரும் வழியல்ல. அத்துடன், அது பெரும் இலாபத்தை ஈட்டித்தரவும் மாட்டாது.

சமூகத்தில் மாற்றம் ஏற்படுத்தக்கூடிய ஒரே வழி சமூக தொழில்முயற்சி அல்ல.

வியாபாரத்தை தொடர்ந்து நடத்துவதன் மூலம் நீங்கள் நேர்மையாக சமூக பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்குவதற்காக அர்ப்பணிப்புடன் இருக்கிறீர்களா என சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

சமூக தொழில்முயற்சியை நிறுவுவதற்கான மாற்று காரணிகள் உள்ளன. மாற்றத்தை ஏற்படுத்த தேவையான உங்களது பேரார்வங்கள் தொடர்பில் தெளிவாக இருங்கள்.

சமூக தொழில்முயற்சியை தொடர்ந்தும் முன்னெடுத்தல் கூடுதலான செலவு மற்றும் காலம் செலவாகும் கருமமாகும். சாதாரண தொழில்முயற்சியை விடவும் கூடுதலான கிரயம் தேவையாகும்.

சமூக தொழில்முயற்சியை திட்டமிடுதல் மற்றும் ஆரம்பிப்பதற்கு நீண்ட காலம் எடுக்கும். உங்களது சமூக தொழில்முயற்சி அதற்கான செலவை ஈடு செய்வதற்கு மேலும் மூன்று அல்லது நான்கு ஆண்டுகள் தேவையாகும். குறுக்குப் பாதை இல்லை. அந்த சிரமமான காலத்தை கடப்பதற்கு நீங்கள் தயாரா?

சிரமப்பட்டு வேலை செய்தல் ஒருபோதும் முடியடையாது.

வியாபாரம் விஷேடமாக சமூக தொழில்முயற்சியை முன்னெடுத்தல் காலத்துடன் பார்க்கும் பொது இலகுவான விடயமல்ல. போட்டித்தன்மை அதிகமானது. உற்பத்திக் கிரயம் அதிகரித்து வருகிறது. பிரதான ஆளணியினர் வேறு தொழில்களை நோக்கி செல்கின்றனர். வழங்குனர்கள் வேறு வியாபாரங்களுடன் இணைகின்றனர். அவர்களது உற்பத்திகளுக்கு சந்தை மாற்றம் தேவையாகும். அந்த நீண்ட பயணத்துக்கு நீங்கள் தயாரா?




# 4 சமூக தொழில்முயற்சியை எவ்வாறு ஆரம்பிப்பது?

சமூக தொழில்முயற்சியை ஆரம்பித்தல், ஏனைய தொழில்முயற்சிகளை ஆரம்பிப்பதனை விடவும் வித்தியாசமானதல்ல. அது சவால்மிக்க, பெறுபேறுகளை கொண்டது என்பதுடன், எந்தவொரு நபருக்கும் எந்தவொரு அமைப்புக்கும் தமது எதிர்காலம் மிகவும் முக்கியமானதாகும். அது எளிதான விடயம் அல்ல என்பதுடன், அதனை இலகுவான விடயமாக கருதலாகாது. அதற்காக நேரம், மூலதனம், சக்தி, இலட்சியம், பொறுமை மற்றும் பலமான நீண்டகால அர்ப்பணிப்பு தேவையாகும்.

நபர்கள் மற்றும் அமைப்புக்கள் சமூக தொழில்முயற்சியில் வெற்றி பெற வேண்டும் எனின், அவர்கள் இடர்களை தவிர்த்தும், கொடைகளை தேடாமல் சிக்கலான மாற்றத்துக்கான செயன்முறையைப் பின்பற்ற வேண்டும் என்பதுடன், வலுவான தொழில்முயற்சியாளருக்கான மனப்பாங்கை கொண்டிருக்க வேண்டும்.

சமூக தொழில்முயற்சியை ஆரம்பிக்க விரும்பும் எந்தவொரு நபரும் சமூக தொழில்முயற்சியை ஆரம்பித்தல் தொடர்பாக சிறந்த புரிதல் மற்றும் அறிவைப் பெற்றிருக்க வேண்டும். அதற்கு மேலதிகமாக சமூக தொழில்முயற்சி தொடர்பில் தீவிரமான விருப்பம் உள்ள மற்றும் வியாபார மற்றும் செயற்பாட்டு சமநிலையை ஏற்படுத்தக்கூடிய பலமான தலைமைத்தவம் தேவையாகும்.

சிறந்த வியாபார திட்டம், போதுமான ஆரம்ப நிதி, ஆலோசனைகள், உதவிகள் மற்றும் ஏனைய முக்கியமான முன் தேவைப்பாடுகள் உள்ளன. சமூக தொழில்முயற்சிகள் எந்தவொரு சிறிய தொழில்முயற்சிக்கும் சமமானது என்பதனை கவனத்தில் கொள்ளுதல் முக்கியமானதாகும். அவர்கள் உழைக்கும் வருமானம் அளவுக்கு ஏற்ப வேறுபடுவதுடன், முதல் மூன்று ஆண்டுகள் தொடக்கம் ஐந்து ஆண்டுகள் வரை இலாபத்தை பெறுதல் சிரமமானதாகும். ஆதனை மனதில் வைத்துக் கொண்டு சமூக தொழில்முயற்சியை ஆரம்பிக்க விரும்பும் எந்தவொரு நபரும் அவ்வாறான செயற்பாட்டை ஆரம்பிக்க முன்னர் தேவையான திட்டமிடலை தயாரிக்க வேண்டும்.

சமூக தொழில்முயற்சியை ஆரம்பிக்க முன்னர் அவரிடம் கேட்க வேண்டிய முதலாவது வினா "நீங்கள் சமூக தொழில்முயற்சியை எதற்காக ஆரம்பிக்கிறீர்கள்" என்பதாகும். இது முதலாவதும், முக்கியமானதுமான வினாவாகும். ஒன்றில் சமூகத்துக்கு ஏதாவது சேவை செய்யும் நோக்கத்துடனும், சமூகத்தில் சாதகமான மாற்றத்தை ஏற்படுத்துதல் அல்லது அதற்கு ஒழுக்கநெறியாகவும், சாதகமான தன்மையை உருவாக்குவதன் மூலமும் சமூக தொழில்முயற்சியாக மாற்றும் வியபார கருத்தைக் வெளிப்படுத்தும்.

எந்தவொரு முறையிலும் நன்மை புரிவதற்காகவும், சமூகத்துக்கு நன்மை புரிவதற்குமான விருப்பம் வியாபாரத்தின் அடிப்படை ஒழுக்கநெறியாக இருத்தல் வேண்டும். சாதாரணமாக அது தனிநபர் பட்டறிவு, ஆசைகள் அல்லது இதயத்துடன் மிகவும் நெருங்கிய காரணமாகவும் இருக்கலாம்.

நபர்கள் அல்லது அமைப்புகள் சமூக தொழில்முயற்சிகளை ஆரம்பித்தல் தொடர்பாக சிந்திப்பதற்கான காரணங்கள் உள்ளன. அவை முழுமையாக நிதி ரீதியானது தொடக்கம் அனைத்தும் செயற்பாட்டை அடிப்படையாக கொண்டதாகும். பெரும்பாலும், அவை இந்த இரண்டினதும் கலப்பாகும். ஏந்தவொரு வியாபாரத்தையும் ஆரம்பிப்பதற்கான மூன்று முறைகள் உள்ளன. உற்பத்தி அல்லது சேவையை கருத்தில் கொண்டிருத்தல், தேவை அல்லது மிகை வருமானம் உள்ள விஷேட நுகர்வுக் குழு அடையாளம் காணப்பட்டிருத்தல், அல்லது நிதி அல்லது முதலீட்டை செய்வதற்கான காலம் மற்றும் வாய்ப்பு இருத்தல்.

மேற்குறித்த மூன்று உள்ளடக்கங்களுக்கு மேலதிகமாக சமூக தொழில்முயற்சியை ஆரம்பிப்பதற்கு தூண்டும் பிரச்சினைக்கு தீர்வாகவும் அது இருத்தல் வேண்டும். சமூக தொழில்முயற்சிகள் சமூக நோக்கங்களுக்காக உதவுதல் அல்லது அறக்கொடை நிறுவனம் அல்லது அரச சார்பற்ற நிறுவனத்துக்கான வர்த்தக நிறுவனம் போன்ற அபிவிருத்தி உதவிகளுக்காக நிதி சேகரித்தல் ஆகிய விடயங்களுக்காக சமூக தொழில்முயற்சி வியாபாரமாகவும் ஆரம்பிக்கப்படுகிறது.

பொதுவாக பார்க்கும் போது, சமூக தொழில்முயற்சியை உருவாக்கக்கூடிய மூன்று பொதுவான அணுகுமுறைகள் உள்ளன. இந்த அணுகுமுறைகள் மாற்றத்துக்கு உட்படக்கூடியது என்ற போதிலும், அடிப்படை விடயங்கள் சமமானவையாகும்.

## பிரச்சினைகளை அடிப்படையாக கொண்ட அணுகுமுறை

இந்த அணுகுமுறையில் தொழில்முயற்சியாளர்கள் சமூக அல்லது சுற்றாடல் பிரச்சினைகள் மற்றும் அதற்கான அடிப்படைக் காரணங்கள் அடையாளம் காணப்படுகின்றன. அதன் பின்னர் அந்த பிரச்சினைகளைத் தீர்க்கக்கூடிய தீர்வுகள் அடையாளம் காணப்படுகின்றன. இறுதியாக அந்த தீர்வுகளில் தொழில்முயற்சி தீர்வுகளாக மாற்றக்கூடிய தீர்வுகள் எவையென ஆய்வு செய்யப்படுகிறது. அதன் பின்னர் உற்பத்தி அல்லது சேவையாக மாற்றக்கூடிய தீர்வுகளின் அடிப்படையில் தொழில்முயற்சி ஆரம்பிக்கப்படுகிறது.

## தற்போதுள்ள தொழில்முயற்சி மாற்றத்தை அடிப்படையாக கொண்ட அணுகுமுறை

இந்த அணுகுமுறை தொழில்முயற்சியாளர்கள் தமது வியாபார நடவடிக்கை ஊடாக சமூக அல்லது சுற்றாடல் பிரச்சினையை தீர்ப்பதற்கு அவர்களது வியாபார மாதிரியை மாற்றம் செய்கின்றனர் அல்லது பல்வகைப்படத்தலை மேற்கொள்கின்றனர். தமது உற்பத்திகள், சேவை அல்லது உற்பத்தி செயன்முறை அடையாளம் கண்டு பிரச்சினைகளுக்கு தீர்வாக பாவிக்கப்படுகிறது.

## நிறுவன ரீதியான மாற்றத்தின் அடிப்படையிலான அணுகுமுறை

இந்த அணுகுமுறை பெரும்பாலும் இலாபம் ஈட்டாத அமைப்புகள் அல்லது சமுதாயம் அல்லது சிவில் சமூக அமைப்புகளால் பெரிதும் பாவிக்கப்படுகிறது. அடையாளம் காணப்பட்டுள்ள சமூக அல்லது சுற்றாடல் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக அமைப்பினால் ஏற்கனவே பாவிக்கப்படும் தீர்வுகள் அல்லது தீர்வுகளை அடையாளம் கண்டு அவற்றை தொழில்முயற்சி தீர்வுகளாக மாற்றம் செய்தல் பொதுவாக இடம்பெறுகிறது. அதன் பின்னர் அவர்கள் சமூக தொழில்முயற்சியாக அமைப்பு மாதிரியில் மாற்றங்களை ஏற்படுத்துகிறது.

## சமூக தொழில்முயற்சிக்கான பொது அணுகுமுறைகள்

| சமூக அல்லது பொருளாதார பிரச்சினைகளை அடிப்படையாக கொண்ட அணுகுமுறை | ஏற்கனவே உள்ள தொழில்முயற்சியை மாற்றுவதனை அடிப்படையாக கொண்ட அணுகுமுறை | ஏற்கனவே உள்ள அமைப்பை மாற்றுவதனை அடிப்படையாக கொண்ட அணுகுமுறை |
|---|---|---|
| பிரச்சினை<br>↓<br>புரையோடிப்போயுள்ள காரணிகள்<br>↓<br>தீர்வுகள்<br>↓<br>தொழில்முயற்சி தீர்வுகள் | பிரச்சினை<br>↓<br>புரையோடிப்போயுள்ள காரணிகள்<br>↓<br>புரையோடிப்போயுள்ள காரணிகளை தீர்க்கக்கூடிய தீர்வுகள்<br>↓<br>தொழில்முயற்சி தீர்வுகள் | பிரச்சினை<br>↓<br>புரையோடிப்போயுள்ள காரணிகள்<br>↓<br>தீர்வுகள்<br>↓<br>சுய தீர்வுகள்<br>↓<br>தொழில்முயற்சி தீர்வுகள் |

## சமூக நோக்கம்

**“சமூக தொழில்முயற்சி ஏனைய பிரதான வியாபாரங்களை விடவும் மாற்றம் எற்படுத்தும் பிரதான விடயம் சமூக நோக்கமாகும்”**

சமூக நோக்கம் என்பது நீங்கள் நிறுவும் சமூக தொழில்முயற்சியின் பிரதான குறிக்கோளை சொல்லும் பிறிதொரு முறையாகும். அது சமூக தொழில்முயற்சியை திட்டமிடுவதற்கும், அவை அமுல்படுத்தப்படுவதனை உறுதி செய்வதற்கும், அவர்களுக்கு தேவையான விடயங்கள் அடையப்படுகிறதா என்பதனை தெரிந்து கொள்வதற்கும் உதவும் என்பதனால் அது முக்கியமானதாக அமைகிறது. இயன்றளவு பணத்தை உழைத்தலை பிரதான நோக்கமாக கொண்ட பிரதான வியாபாரங்கள் சமூக தொழில்முயற்சியாக மாற்றப்படுவதற்கும் அதுவே காரணமாகும்.

உணவுப் பொருட்கள் வீணாவதனை குறைத்தல் மற்றும் உணவு சுற்றாடல் கட்டமைப்பை நவீனமயப்படுத்துதல் எமது பணியாகும். பேண்தகு தன்மையை மக்களின் அன்றாட வாழ்க்கையின் பகுதியாக மாற்றுதல் எமது குறிக்கோளாகும். பழங்கள் மற்றும் மரக்கறி துறையில் உள்ள மிகையான உற்பத்தி அல்லது “உரு மாற்றமடைந்த உற்பத்திகளை” எமது வர்த்தகப் பெயரிட்டு உற்பத்தி மற்றும் பேண்தகு மூல பொருட்களை விற்பனை செய்கிறோம்.

UGLY FOOD
EAT SUSTAINABLY, FOR THE BETTER GOOD

*Ugly Food, Singapore*

THE BIG ISSUE

“சுய உதவி, சமூக வர்த்தகம் மற்றும் வியாபார தீர்வுகள் ஊடாக வாய்ப்புகளை உருவாக்குவதன் மூலம் வறுமையை ஒழித்தல்”

*Big Issue, UK*

“விவசாயிகள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தி அவர்களது தேவைகளுக்காக நாம் முன்நிற்கிறோம். அதன் போது நாம் ஒன்றிணைந்து பேண்தகு மற்றும் நியாயமான உலகத்தை உருவாக்குவோம். கோக்கோ விவசாயிகளின் இணை உரித்துள்ள ஒரோயொரு Fairtrade சொக்லட் கம்பனி நாம் ஆவோம்.”

Divine CHOCOLATE

*Divine Chocolate, Ghana, UK*



# 5 சமூக தொழில்முயற்சியை ஆரம்பிக்கும் செயன்முறைகள்

சமூக தொழில்முயற்சியை திட்டமிடுதல் என்பது எதிர்காலத்தில் எங்கே இருக்க வேண்டும் என்பது மற்றும் அது எவ்வாறானதாக இருக்கும் என்பதனை ஆராய்வதாகும். இந்த கையேட்டில் திட்டமிடல் செயன்முறை என்பது, நிதி ரீதியான சாத்தியம் மற்றும் சமூக, சுற்றாடல் ரீதியில் பொறுப்பு மிக்கதா என்பதனை ஆராய்ந்து பார்ப்பதற்காக பாவிக்கலாம். உங்களது கருத்துக்கள் அமுல்படுத்தப்படுகிறதா என்பதனையும் அதன் மூலம் ஆராய்ந்து பார்ப்பதற்கும் நீங்கள் பாவிக்கலாம். திட்டமிடலின் போது வியாபாரத்தை மேம்படுத்துதல் மற்றும் வியாபாரம் தொடர்பாக கற்றுக்கொள்வதற்கு ஆற்றலுள்ள உறுப்பினர்களை இணைப்பதற்கான வழியாகவும் பாவிக்கலாம். நல்ல முறையில் திட்டமிடுவதன் மூலம் முதலீடு மற்றும் ஏனைய உதவிகளை கண்டறிவதற்காக பாவிக்கக்கூடிய ஆவணத்தை தயாரிப்பதற்கும் இந்த தகவல்களை இறுதியில் பாவிக்கலாம்.

உங்களது சமூக தொழில்முயற்சி திட்டமிடல் அடிப்படைக் கருத்துக்கள் மற்றும் மிகவும் முழுமையான கருத்திட்ட எண்ணக்கரு தொடர்பாக சிந்திக்கும் போது, அது முழுமையான செயற்பாட்டு தொழில்முயற்சியாக கவனம் செலுத்தலாம். அதன் போது நீங்கள் உங்களது வியாபார மாதிரி தொடர்பாக சிந்திக்க வேண்டிய தேவை மேலும் கூடுதலான தேவையாக உள்ளது. உங்களது வியாபார மாதிரியில் பின்வரும் விடயங்கள் கட்டாயமாக உள்ளடங்கியிருத்தல் வேண்டும்.

- உங்களது பிரதான நோக்கம் (சமூக தாக்கம்) : நோக்கம் மற்றும் ஒழுக்கநெறி / ஒழுக்கநெறி கவனம் செலுத்துதல் - நோக்கு, பணிக்கூற்று மற்றும் விழுமியங்கள்
- உங்களது மூலோபாய வழி : நீங்கள் செய்யும் விடயங்களை ஒன்றாக பொருத்தும் பாங்கு : மற்றும் அது உங்களது குறிக்கோளை அடைவதற்கு உதவும் பாங்கு
- நீங்கள் வழங்குபவை : நீங்கள் உங்களது வாடிக்கையாளர்கள் மற்றும் / அல்லது பயனாளிகளுக்கு வழங்கும் உற்பத்தி / சேவை என்ன?

சமூக தொழில்முயற்சியை ஆரம்பித்தல் தொடர்பான திட்டமிடல் செயன்முறை பின்வரும் ஒழுங்குமுறையில் இடம்பெறுகிறது. அதனை படிப்படியான அணுகுமுறையாக கருதலாம்.

# சமூக தொழில்முயற்சியை ஆரம்பிக்கும் படிநிலைகள்



ஊக்குவித்தல்
**Motivation**

தயாராதல்
**Preparation**

கருத்து உருவாக்கம், தெரிவு செய்தல் மற்றும் மதிப்பீடு
**idea generation, screening and evaluation**

கருத்து பரிசோதனை, ஆய்வு செய்தல் மற்றும் நிறுவுதல்
**Idea testing, exploration and formation**

சாத்தியவள திட்டமிடல்
**Feasibility planning**

வியாபார திட்டமிடல்
**Business Plan**

ஆரம்பித்தல்
**Starting up**



## ஊக்கமளித்தல்

சமூக தொழில்முயற்சி வெற்றி பெறுவதற்காக ஊக்களித்தல் அத்தியாவசியமானது என கருதப்படுகிறது. வெளியிடப்பட்ட பல்வேறு ஆவணங்கள் மற்றும் சமூக தொழில்முயற்சியின் உதாரணங்களுக்கு அமைய, பெரும்பாலான சமூக தொழில்முயற்சிகள் தமக்கே உரிய அனுபவங்கள் ஊடாக ஊக்கமளித்தல் இடம்பெற்றுள்ளது. பெரும்பாலான சமூக தொழில்முயற்சியாளர்கள் தமது சமுதாயத்தில் முகங்கொடுக்கும் சமூக பிரச்சினைகள் மற்றும் நிறைவேற்ற முடியாமல் போன தேவைப்பாடுகள் தொடர்பான புரிதல் மற்றும் அனுபவங்கள் மூலம் ஊக்கமளித்தல் இடம்பெற்றுள்ளது.

நீங்கள் சமூக தொழில்முயற்சி வரை வளர்ச்சியடைய எதிர்பார்க்கும் நிறுவனம் எனின், ஊக்கமளிக்கும் சமூக தொழில்முயற்சியாளர் இருத்தல் வேண்டும். அவர்கள் செய்யும் விடயம் தொடர்பான விருப்பு மற்றும் ஆசை உள்ள நபர்களால் மட்டுமே வெற்றிகரமான சமூக தொழில்முயற்சி ஆரம்பிக்கப்படுகிறது.

ஊக்கமளிக்கும் சமூக தொழில்முயற்சியாளர்கள் தமது கனவுகளை தனித்தனியாக அடைய முடியாது என்பதனை அடையாளம் கண்டுள்ள போதிலும், அவர்களுடன் தொடர்பு கொள்வதற்கு ஏனையோரை தூ ண்டும் நோக்கு, குறிக்கோள், தேவையான வளங்கள் மற்றும் ஊக்கமளித்தல் அவர்களுக்கு இருத்தல் வேண்டும். அனைத்துக்கும் மேலாக அவர்கள் அதில் நீண்ட பயணத்துக்காக இருக்கிறார்களே அன்றி, விரைவான தீர்வுக்காக அல்ல.

சமூக தொழில்முயற்சியை ஆரம்பிக்கும் எண்ணத்துடன், தொடர்ந்தும் பயணிப்பதற்கு முன்னர், உங்கள் முன்னால் உள்ள அந்த சிரமமான பயணத்துக்கு நீங்கள் தயாராக வேண்டும் என்பதுடன், உண்மையிலேயே உங்கள் முன் உள்ள தவிர்க்க முடியாத தடைகள் மற்றும் சவால்களை வெற்றி கொள்வதற்கு நீங்கள் அர்ப்பணிப்புடன் இருத்தல் வேண்டும். அவ்வாறே, இந்த சந்தர்ப்பத்தில் உங்களது கருத்து ஆய்வு அவ்வாறு இருக்கவில்லை எனின் கருத்துக்களுக்கான ஊக்கமளித்தல் முக்கியமானது என்பதுடன், இது உங்களது பேரார்வத்தில் எவ்வளவு தூரம் தாக்கம் செலுத்தும் என்பதனை ஆராய்ந்து பார்த்தல் முக்கியமானதாகும். அதன்போது சமூக தொழில்முயற்சி தொடரபாக உங்களுக்கு தெரிந்த விடயங்களும் மிகவும் முக்கியமாகும்.

கீழே காட்டப்படும் விடயங்கள் உங்களது பேரார்வம், பண்புகள் மற்றும் பெறுமானங்கள் தொடர்பாக சிந்திப்பதற்கு உதவியாக அமையும் வினாக்கொத்தாகும். நீங்கள் சமூக தொழில்முயற்சியாளராக உங்களது பயணத்தை ஆரம்பிக்க முன்னர் நீங்களே உங்களிடம் கேட்டு, உங்களுக்குரிய பதில் உள்ளதா என ஆராய்ந்து பார்ப்பது கட்டாயமானதாகும்.

## நீங்கள் சமூக தொழில்முயற்சியை ஆரம்பிக்க தயாரா?

சமூக தொழில்முயற்சியை ஆரம்பிப்பதற்காக எதனால் தூண்டப்பட்டீர்கள்?

ஏன் நீங்கள் சமூக தொழில்முயற்சியை ஆரம்பிக்க வேண்டும்?

சமூக தொழில்முயற்சி தொடர்பான போதுமான அறிவு உங்களுக்கு இருக்கிறதா?

நீங்கள் அல்லது உங்களது அமைப்பு சமூக தொழில்முயற்சியை ஆரம்பிக்க நினைத்தால், அதற்கான மாற்று தெரிவுகள் உள்ளதா?

நீங்கள் எதனை அடைய வேண்டும்?

உங்களது பங்குதாரர்கள் உங்களுடன் இருப்பதாக நீங்கள் உறுதி செய்கிறீர்களா?

உங்களிடம் சிறந்த வியாபார கருத்து உள்ளதா?

சமூக தொழில்முயற்சியின் பயன் எவருக்கு கிடைக்கும்?

உண்மையிலேயே நீங்கள் வியாபாரம் செய்ய வேண்டுமா?


வெற்றியடைவதற்கு தேவையான பலம் மற்றும் குறிக்கோள் உங்களிடம் உள்ளதா?

தொழில்முயற்சியை விருத்தி செய்தல் மற்றும் அபிவிருத்தி செய்வதற்கு தேவையான நீண்டகால அர்ப்பணிப்புக்கு நீங்கள் தயாராக இருக்கிறீர்களா?

இடர்களை நீங்கள் முழுமையாக புரிந்து கொள்கிறீர்களா? இல்லாவிட்டால் நீங்கள் அல்லது உங்களது அமைப்புடன் நேரடியாக தொடர்பபடும் இடர்கள் எவை?

தெளிவான சமூக குறிக்கோள் உங்களிடம் உள்ளதா? இல்லாவிட்டால் நீங்கள் தீர்ப்பதற்கு எதிர்பார்க்கும் சமூக பிரச்சினைகளை நீங்கள் உண்மையிலேயே புரிந்து கொண்டுள்ளீர்களா?

# தொழில்முயற்சியின் வளர்ச்சி கட்டங்கள்



## வுெ நீங்கள் தீர்க்க எதிர்பார்க்கும் பிரச்சினைகளை நன்றாக அடையாளம் காணுதல், வரைவிலக்கணம் செய்தல் மற்றும் உங்களது தீர்வுகள்.

நீங்கள் சமூக தொழில்முயற்சியை ஆரம்பிக்க நினைத்தால், அதனை நீங்கள் தெளிவாக அடையாளம் கண்ட சமூக அல்லது சுற்றாடல் பிரச்சினையை தீர்ப்பதற்கு உங்களிடம் உள்ள ஆசையினால் நீங்கள் தூண்டப்பட்டுள்ளதாக கருதலாம். எனவே, உங்களது சமூக தொழில்முயற்சியை திட்டமிடுவதற்காக, அதனை எவ்வாறு அமுல்படுத்துவது என்பது தொடர்பாக உங்களிடம் தெளிவான கருத்து இருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்காக நீங்கள் தீர்க்க எதிர்பார்க்கும் பிரச்சினை, நீங்கள் கொண்டு வர வேண்டிய மாற்றம் மற்றும் தேவையான செயன்முறைகள் தொடர்பாக மேலும் ஆய்வு செய்ய வேண்டியுள்ளது. அதன்போது நீங்கள் ஆய்வு செய்ய வேண்டிய 3 அடிப்படை விடயங்கள் உள்ளன.

### 1. பிரச்சினையின் கோட்பாடு - Theory of Problem

- நீங்கள் தீர்த்து வைக்க முயற்சிக்கும் பிரச்சினை என்ன?
- இந்த பிரச்சினைக்கு முகங்கொடுப்பது யார் மற்றும் அவர்களது அனுபவம் என்ன?
- பிரச்சினையின் அளவு என்ன?
- ஏன் இந்த பிரச்சினை இருக்கிறது?
- நீங்கள் அடையாளம் கண்டுள்ள பிரச்சினையின் தற்போதைய நிலை என்ன?

### 2. ஏற்படுத்தும் மாற்றம் அல்லது மாற்த்துக்கான கோட்பாடு - Theory of Change

- மேலே பொருள்கோடல் செய்யப்பட்டுள்ள பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்கான உங்களது மூலோபாயம்
- நீங்கள் கையாள தயாராகும் பிரச்சினைகளின் அடிப்படைக் காரணியைச் சுற்றி உருவாக்கப்பட்ட பலமான தீர்வுக்கான மூலோபாயத்தை விருத்தி செய்வதற்கு உதவுதல் 'மாற்றமடையும் கோட்பாடு' செயன்முறையின் நோக்கமாகும்.

### 3. செயற்பாட்டின் கோட்பாடு - Theory of Action

- பிரதான தலையீடு (உங்களது செயல் / நடவடிக்கை), மாற்றுவதற்கான கோட்பாட்டை அமுல்படுத்துவதற்கு உதவும்.

## பிரச்சினையின் கோட்பாடு தொடர்பான உதாரணம்

| தற்போதைய நிலை | இலக்கு நிலை |
|---|---|
| வறுமை மற்றும் ஓரங்கட்டப்பட்ட மாற்றுத் திறனாளி பெண்கள் தற்போதைய நிலமையில் சமூகத்திலிருந்து புறந்தள்ளப்பட்டிருத்தல். அவர்களது உள மற்றும் உடல் நல்லிருப்பு பலவீனமடைகிறது | மாற்றுத் திறனாளி பெண்கள் சமூக மற்றும் பொருளாதார ரீதியில் செயற்படுவதுடன், குடும்ப சுகாதாரம் மற்றும் நல்லிருப்பு சாதகமாக உள்ளது. |

| இந்த பிரச்சினையால் பாதிக்கப்படுவது யார் ? | பிரச்சினையின் அளவு என்ன? | இந்த பிரச்சினை ஏன் நிலவுகிறது ? |
|---|---|---|
| மாற்றுத் திறனாளி பெண்கள் அவர்களது குடும்ப உறுப்பினர்கள் | மாற்றுத் திறனாளி பெண்களின் எண்ணிக்கை அவர்களது குடும்ப மற்றும் தங்கிவாழ்வோர் எண்ணிக்கை | வறுமை மற்றும் குறைந்த வருமான நிலை<br>கல்வி அறிவின்மை<br>தொழில் திறன் இன்மை<br>சமூக மற்றும் கலாச்சார தடைகள் பலவீனமான பொதுச் சேவைகள் அல்லது சேவைகளை அணுக முடியாதிருத்தல். |

## சமூக குறிக்கோளை உருவாக்குதல்

உங்களது மற்றும் சமூக தொழில்முயற்சியின் சமூக நோக்கு என்ன ?

சந்தை மற்றும் ஒட்டுமொத்த சமூகத்தில் தொழில்முயற்சி கையாள வேண்டிய தேவை என்ன ?

இந்த தொழில்முயற்சி எந்த வெற்றிடத்தை நிரப்பும் ?

தொழில்முயற்சி ஊடாக நீங்கள் அடைய வேண்டிய சமூக பெறுபேறு எவை மற்றும் யாருக்காக ?

இவை உங்களது சமூக நோக்கத்துடன் நேரடியாக தொடர்புபடுகிறதா ?


நீங்கள் உங்களது நோக்கத்தை அடைந்துள்ளதாக எவ்வாறு தெரிந்து கொள்வீர்கள் ?

உங்களது வெற்றியை காட்டும் சிறந்த சுட்டிகள் எவை ?

இந்த பெறுபேறுகள் உங்களது அமைப்பின் சமூக செயற்பாட்டுடன் எவ்வாறு தொடர்புபடுகிறது ?

## ஏற்படுத்தவுள்ள மாற்றம் அல்லது மாற்றமடையும் கோட்பாடு Thery of Change

மாற்றமடையும் கோட்பாடு என்பது சமூக தொழில்முயற்சி தொழில்முயற்சியாளர்கள் மத்தியில் சமூகத்தின் எதிர்பார்ப்புகளை சாதகமாக மாற்றுவதற்கு அவர்கள் முன்னெடுக்கும் நடவடிக்கைகளை வரைபடமாக்குவதற்காக பெரும்பாலும் பாவிக்கப்படும் கருவியாகும். இது வீதி வரைபடமாக அல்லது தமக்கு விருப்பமான சமூக பிரச்சினையை தீர்ப்பதற்காக ஏற்றுக்கொள்ளக்கூடிய மற்றும் பேண்தகு தீர்வாக பாவிக்கப்படலாம்.





## தயாராதல்

இந்த கட்டத்தில் நீங்கள் இந்த சமூக தொழில்முயற்சியை ஆரம்பிப்பதற்கான பேரார்வத்துடன் நீங்கள் இருக்கிறீர்களா என்பதனை நீங்கள் தற்போது அடையாளம் கண்டிருப்பீர்கள். சமூக தொழில்முயற்சி என்றால் என்ன என்பது தொடர்பாக உங்களுக்கு ஓரளவு புரிதல் ஏற்பட்டிருக்கும் என்பதுடன், நீங்கள் ஆய்வுக்கு உட்படுத்த வேண்டிய வியாபார கருத்து மனதில் உருவாகியிருக்கும். நீங்கள் மேற்கொண்ட அல்லது கற்றுக்கொண்ட விடயங்களை தொடர்ச்சியாக மீளாய்வுக்கு உட்படுத்துதல் வியாபார அபிவிருத்தி செயன்முறையின் முக்கியமான கோட்பாடாகும். தேவை எனின், எவ்வாறு உங்களது சமூக தொழில்முயற்சியை விருத்தி செய்வது எவ்வாறு என்பதற்கான மதிப்பீட்டையும் நீங்கள் மேற்கொள்ள வேண்டியிருக்கும்.

சமூக தொழில்முயற்சியை இயக்குவதற்கான உங்களது திறன் மற்றும் ஆற்றலை மதிப்பீடு செய்தல் முக்கியமானதாகும். நீங்கள் அல்லது உங்களது அமைப்புக்கு ஏற்படக்கூடிய மாற்றங்கள் தொடர்பில் சிந்திப்பது முக்கியமானதாகும். இடர் தொடர்பான உங்களது மனப்பாங்கு மற்றும் வியாபார அபிவிருத்திக்கான உங்களது நிதி ஏற்பாடுகளை மதிப்பீடு செய்யுங்கள். அதேவேளை உங்களது பங்குதாரர்களை அடையாளம் கண்டு. பகுப்பாய்வு செய்வதும் முக்கியமானதாகும்.

ஒரு நபர் அல்லது அமைப்பு என்ற வகையில் உங்களது தொழில்முயற்சி தயார்நிலையை மதிப்பீடு செய்வதற்காக பின்வரும் வினாக்களை நீங்களே உங்களிடம் கேட்கலாம் என்பதுடன், உங்களது சமூக தொழில்முயற்சியை ஆரம்பிப்பதற்கு தயார் நிலையில் இருக்கிறீர்களா என்பதனை அதன் மூலம் தீர்மானிக்கலாம்.

**“ஆரம்ப தொழில்மயற்சிகள் அனைத்தும் ஒரே வகையிலான, எதிர்வுகூறல் செய்யக்கூடிய வழிமுறைகளை பின்பற்றுவதில்லை. இருப்பினும் அவை சமமான கட்டங்களை அடைய வேண்டும். அதுவே ஆரம்ப தயார்படுத்தல் பரிசோதனை எனப்படுகிறது. ஆரம்ப தயார்படுத்தல் பரிசோதனை தமது தொழில்முயற்சி இயலுமை மற்றும் தொழில்முயற்சி பண்புகளை விமர்சன ரீதியில் பார்ப்பதற்கான வழிகாட்டலை வழங்குகிறது. பல்வேறு கட்டங்கள் மூலம் வெற்றியை நோக்கி தொழில்முயற்சியின் முன்னேற்றத்தை அவதானிக்கலாம்”**

# தொழில்முயற்சியை ஆரம்பிப்பதற்கான தயார்நிலை பரிசோதனை

| | ஆம் | இல்லை | கருத்து இல்லை |
|---|---|---|---|
| வியாபாரத்தை ஆரம்பிக்க தயாராக இருக்கிறீர்களா? | | | |
| உங்களது வியாபாரத்துக்கு உங்களது குடும்ப உறுப்பினர்கள், நண்பர்கள் உதவுவார்களா? | | | |
| நீங்கள் ஆரம்பிக்க உள்ள வியாபாரம் போன்ற வியாபாரத்தில் எப்போதாவது வேலை செய்துள்ளீர்களா? | | | |
| நீங்கள் ஒரு தொழில்முயற்சியாளர் என உங்களை தெரிந்தவர்கள் ஏற்றுக் கொள்கிறார்களா? | | | |
| சிறிய வியாபார பாடநெறி அல்லது கருத்தரங்கில் பங்குபற்றியுள்ளீர்களா? | | | |
| நீங்களே தீர்மானம் மேற்கொள்ள விரும்புகிறீர்களா? | | | |
| தீர்மானம் எடுப்பதற்கு ஏனையோரின் உதவியை விரும்புகிறீர்களா? | | | |
| நீங்கள் போட்டியை விரும்புகிறீர்களா? | | | |
| உங்களிடம் அதிகாரம் மற்றும் சுய ஒழுக்கம் இருக்கிறதா? | | | |
| நீங்கள் ஏதாவது செய்ய முன்னர் திட்டமிடுவீர்களா? | | | |
| உங்களை ஏனையோர் விரும்புகின்றனரா? | | | |
| நீங்கள் ஏனையோருடன் தொடர்புகளைப் பேணுகிறீர்களா? | | | |
| நீங்கள் சமூக நோக்கம் உள்ளவர் என உங்களைத் தெரிந்தவர்கள் சொல்கிறார்களா? | | | |
| உங்களது வியாபாரத்தை முன்னெடுப்பதற்காக ஒரு நாளில் 12 மணிநேரத்துக்கு கூடுதலாகவும், ஞாயிறு மற்றும் விடுமுறை நாட்களில் வேலை செய்ய வேண்டும் என்பது உங்களுக்கு தெரியுமா? | | | |
| வினைத்திறனாக செயற்படுவதற்கான மனத்திடம் உங்களிடம் உள்ளதா? | | | |
| உங்களது வியாபாரம் நிரந்தரமாக நிறுவப்படும் வரை உங்களது அன்றாட செயற்பாடுகளை சிறிது நிறுத்துவதற்கு நீங்கள் தயாரா? | | | |
| உங்களது சேமிப்பின் ஒரு பகுதியை பாவிப்பதற்கு நீங்கள் தயாரா? | | | |
| வெற்றிகரமான வியாபாரத்தை இயக்குவதற்கு தேவையான அடிப்படை திறன்கள் தொடர்பாக உங்களுக்கு தெரியுமா? | | | |
| உங்களிடம் அந்த திறன்கள் உள்ளதா? | | | |
| உங்களுக்கு கணனி அறிவு இருக்கிறதா? | | | |
| நீங்கள் எப்போதாவது முகாமைத்துவ அல்லது மேற்பார்வை சேவையில் ஈடுபட்டுள்ளீர்களா? | | | |
| ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்தல், ஒழுக்கம் மற்றும் கடமைகளை ஒப்படைத்தல் இலகுவானது என கருதுகிறீர்களா? | | | |
| உங்களது வியாபாரத்துக்கு தேவையான அடிப்படைத் திறன்கள் உங்களிடம் இருக்கவில்லை என நீங்கள் அறிந்து கொண்டால், தேவையான திறன்களைப் பெறும் வரை உங்களது திட்டத்தை தாமதப்படுத்த விரும்புவீர்களா? | | | |

# அமைப்பு தொழில்முயற்சியை ஆரம்பிப்பதற்கான தயார்நிலை பரிசோதனை

உங்களது அமைப்பின் அடிப்படை ஒழுக்கநெறி என்ன?

உங்களது அமைப்பின் குறிக்கோள் என்ன?

உங்களது தற்போதைய செயற்பாடுகள் என்ன, அதனை அமுல்படுத்துவதில் நீங்கள் எவ்வளவு வெற்றி பெறுவீர்கள்?

வியாபாரத்தை நடத்துவதற்கு தேவையான நிறுவனம் தொடர்பான ஆற்றல் மற்றும் அனுபவம் உள்ளதா?

உங்களிடம் அபிவிருத்தி மூலோபாயம் உள்ளதா, சமூக தொழில்முயற்சியை அபிவிருத்தி செய்வதில் இது எவ்வாறு பொருந்துகிறது?

உங்களது அமைப்பு மாற்றத்துக்கு எவ்வாறு பிரதிபலிக்கும்?

நீங்கள் தற்போதுள்ள செயற்பாடுகளை மதிப்பீடு செய்தல் மற்றும் புதிய விருத்திக்கான திட்டமிடலை எவ்வாறு செய்வீர்கள்?

சமூக தொழில்முயற்சியாக மாறுவதற்கு தேவையான மாற்றங்களை மேற்கொள்வதற்கு பணிப்பாளர் சபை மற்றும் பிரதான ஆளணியின் உதவி கிடைக்குமா?

சமூக தொழில்முயற்சியாக மாறுவதற்கு உதவுவதற்காக நீங்கள் அபிவிருத்தி செய்ய வேண்டிய மாற்ற வேண்டிய கொள்கைகள், செயல் ஒழுங்குவிதிகள் மற்றும் கட்டமைப்பு தொடர்பான நல்ல புரிதல் இருக்கிறதா?

# பங்குதாரர் பகுப்பாய்வு

உங்களது அமைப்புடன் ஏதாவது தொடர்பு அல்லது தாக்கம் செலுத்தக்கூடிய அனைத்து நபர்கள் மற்றும் அமைப்புக்களை அடையாளம் காணுதல் ‘பங்குதாரர்’ பகுப்பாய்வு என்பதன் கருத்தாகும். உங்களது பங்குதாரர் யார் என்பது உங்களுக்கு தெரிந்திருந்தால், அது உங்களது சமூக தொழில்முயற்சியின் அபிவிருத்தியை திட்டமிடுவதற்கு உதவியாக அமையும். பங்குதாரர்கள் மற்றும் வாடிக்கையாளர்களுடன் இணைவதற்கான சிறந்தமுறைமையை புரிந்து கொள்வதற்கும் அது உதவும். சமூக தொழில்முயற்சியில் பங்குதாரர்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் ஆகிய இரு தரப்பினரும் இருக்க வேண்டும். சில பொருட்கள் இரண்டுக்குமானதாக இருக்கும். ஒவ்வொரு சமூக தொழில்முயற்சியுடன் பல்வேறு வகையிலான தொடர்புகள் இருக்கும். சமூக தொழில்முயற்சி பங்குதாரர்களுடன் நல்ல வியாபார தொடர்புகளை உருவாக்குவதற்கும், நல்ல உற்பத்தி அல்லது சேவை வழங்குவதற்காக அவர்களது வாடிக்கையாளர்கள் யார் என தெரிந்து கொள்வதும் முக்கியமானதாகும்.

மூன்று வகை பங்குதாரர்கள் உள்ளனர் :

1. ஆரம்ப பங்குதாரர்கள்

   தமது அபிலாசைகள் சமூக தொழில்முயற்சியின் மையத்தை உருவாக்குபவர்கள். இந்த குழுக்கள் சில வேளைகளில் இலக்கு குழுக்கள் அல்லது பிரதான பங்குதாரர்கள் என அழைக்கப்படுவார்கள். அவர்கள் சாதாரணமாக உறுப்பினர்கள், சேவை பெறுனர்கள், முக்கியமான வர்த்தக பங்குதாரர்கள் மற்றும் தன்னார்வ ஊழியர்கள்.

2. இரண்டாம் நிலை பங்குதாரர்கள்

   ஆரம்ப பங்குதாரர்களை அணுகுவதற்காக சமூக தொழில்முயற்சியுடன் ஒத்துழைத்து செயற்படும் நபர்களாவர். அவர்கள் சாதாரணமாக வழங்குனர்கள், வங்கிகள், பங்குதாரர்கள், அரச மற்றும் தனியார் துறை அமைப்புகள் மற்றும் போட்டியாளர்கள் ஆவர்.

3. மூன்றாம் நிலை பங்குதாரர்கள்

   சந்தைப் பங்காளர்கள், நிதி நிறுவனங்கள் மற்றும் வெளிவாரி ஆலோசகர்கள் ஆவர். இந்த வகை சிறிய குழுக்களுக்கு பொருந்தாது. இருப்பினும், பாரிய சமூக தொழில்முயற்சிக்கு இது முக்கியமான வகையாக இருக்கலாம்.

பங்குதாரர்கள் பகுப்பாய்வை எவ்வாறு செய்யலாம் என்பது தொடர்பான உதாரணங்கள் கீழே காட்டப்படுகின்றன.

- உங்களது பிரதான பங்குதாரர்களின் முக்கியத்துவத்துக்கு அமைய முன்னுரிமைப்படுத்துங்கள். இதில் வாடிக்கையாளர்கள், நிதி வழங்குவோர், தன்னார்வ ஊழியர்கள், சேவை பெறுனர்கள், உறுப்பினர்கள், ஆளணியினர் போன்றோர் உள்ளடங்கலாம்.
- உங்களது வியாபாரத்தில் உயர்ந்தளவு தாக்கத்தை எற்படுத்த இடமுள்ள தரப்பினரை அடையாளம் காணுங்கள்.
- நீங்கள் பட்டியல்படுத்தியுள்ள தரப்பினரின் கருத்துக்களுடன் நீங்கள் எவ்வாறு தொடர்பு கொள்கிறீர்கள் ?

## பங்குதாரர்களை வரைபடமாக்கல்

தொடர்புகளை வரைபடமாக்கும் முறை உங்களுக்கு தாக்கம் செலுத்தக்கூடிய பிரதான நபர்கள் அல்லது நிறுவனங்களை அடையாளம் காண்பதற்கு இடமளிக்கிறது. உங்களது சேவை பெறுனர்களின் தேவைகள் மற்றும் வெற்றிடங்களை மதிப்பீடு செய்வதற்கு அது உதவும்.



## 6 சமூக தொழில்முயற்சி கருத்துக்களை மக்கள் மயப்படுத்துதல், தெரிவு செய்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்

உண்மையிலேயே, சமூக தொழில்மயற்சி கருத்துக்கள் ‘மூன்று கீழ் கோடு’ (TRIPLE BOTTOM LINE) மாதிரியில் ஆழமாக வேரூன்றியுள்ளது. அது சம்பிரதாய ரீதியான இலாபம், முதலீட்டின் அடிப்படையில் பயன் மற்றும் பங்கு வைத்திருப்போரின் பெறுமதி ஆகிய சம்பிரதாய அளவுகோல்களுக்கு அப்பால் சென்று சுற்றாடல் மற்றும் சமூக பார்வைகள் அடங்கியுள்ளன.

‘மூன்று கீழ் கோடு’ (TRIPLE BOTTOM LINE) என்பது பிரபல தொழில்முயற்சியாளரான துழாெ நுடமைபெ-வழெ என்பவரால் உருவாக்கப்பட்ட எண்ணக்கருவாகும். வியாபார ஐந்தொகையில் டொலர்களுக்கு அப்பால் செல்ல வேண்டும் எனவும், பின்வரும் பிரதான மூன்று பிரிவுகள் தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும் எனவும் அவர் தெரிவிக்கிறார், அதாவது :

- மனிதர்கள் PEOPLE
- உலகம் PLANET
- இலாபம் PROFIT



## கருத்துக்களை மக்கள் மயப்படுத்துதல

பெரும்பாலானோர் மத்தியில் உள்ள அவசரமான 'யுரேக்கா நேரம்' பின்னர் பயம். தவறான கருத்து தான் எமக்கு வியாபார கருத்துகள் வருவதாகவும் இல்லாவிட்டால் பல ஆண்டுகளாக சிந்திப்பதன் மூலம்

சமூக தொழில்முயற்சி கருத்து எந்தவொரு இடத்திலிருந்தும் வரலாம் என்ற போதிலும் சமூக தொழில்முய-ற்சி கருத்துக்கள் உருவாகுவதற்கான இரண்டு பிரதான வழிகள் உள்ளன.

- வர்த்தக ரீதியான செயற்பாட்டு கருத்துகள்
- சமூக பிரச்சினையை அடிப்படையான கருத்துக்களுக்கு தீர்வு

இவை பரஸ்பரமாக பெரும்பாலும் அதற்கு நன்றாக செயற்படுகிறது, உதாரணமாக சமூக தொழில்முயற்சி இலாபத்தை பகிர்வதன் மூலம் சமூக பிரச்சினைகளை தீர்ப்பதற்கு உதவலாம். அதே வேளை அரச நிறுவனத்தினால் இலவசமாக மக்களுக்கு சேவை வழங்குவதற்காக சமூக தொழில்முயற்சியுடன் உடன்படிக்கை செய்து கொள்ளலாம். அத்துடன் அரசால் வர்த்தக சூழல் தொழில்முயற்சியை உருவாக்க உதவலாம்.

அடையாளம் காணப்பட்ட பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக புதிய கருத்துக்களை உருவாக்குதல் தொழில்முயற்சியாளருக்குரிய தனித்துவமான கருமமாகும். ஏதாவது விஷேடமான பிரச்சினையை தீர்ப்பதற்கு சரியான வழி இல்லாத போதிலும், பிரச்சினையை எவ்வாறு புதுமையாக தீர்க்கலாம் என்பது தொடர்பாக முறையாக சிந்தித்தல் மிகவும் முக்கியமானதாகும்.

உங்களது கருத்துக்கள் 'உருவாக்கும்' போது கருத்தில் கொள்ள வேண்டிய சில விடயங்கள் உள்ளன. நீங்கள் உருவாக்கும் கருத்துக்களை எழுதி வைத்தல் முக்கியமானதாகும். நீங்கள் சிந்திக்கும், காணும் விடயங்கள் பாரிய மாற்றத்துக்கான எதிர்கால பிரவேசமாகவும் இருக்கலாம், எனவே இந்த மறைகள் தொடர்பாக ஏதாவது எதிர்கால சிந்தனையை உருவாக்க முயற்சி எடுங்கள் :


- நீங்கள் மேம்படுத்த / மாற்ற வேண்டியது என்ன?
- ஏன் அது மேம்படுத்தப்பட வேண்டும்? – மேம்படுத்துவதன் மூலம் யாருக்கு இலாபம் கிடைக்கும்?
- இந்த வேளையில் அதிலுள்ள தவறு அல்லது குறைபாடு என்ன?
- ஏனையோர் தோல்வி அடையும் போது நீங்கள் வெற்றி பெறுவது ஏன்?
- அதனை மேம்படுத்துவதற்கான உங்களது முன்மொழிவுகள் எவ்வாறானது?
- அதனை மேம்படுத்துவதற்கு தேவையான கருமத்தை மேற்கொள்வதற்கான அறிவு உங்களிடம் உள்ளதா?
- இல்லையெனின், நீங்கள் உதவி பெறும் இயலுமை உள்ளதா? உங்களால் யாருக்கு உதவ முடியும்?
- அதனை ஏனையவற்றுடன் ஒருங்கிணைக்கும் இயலுமை உள்ளதா?
- எம்மால் அதனை சுற்றி பங்குதாரர்களை மேம்படுத்தலாமா?

## கருத்துப் புனல்

கருத்துப் புனல் என்பது கருத்துக்களின் சாத்தியத்துக்காக பரீட்சிக்கக் கூடிய எப்பொழுதும் கருத்துக்களை உருவாக்கும் பொறிமுறையாகும். இயன்றளவு கருத்துக்களை உருவாக்குதல் மற்றும் பின்னர் பெரும்பாலான கருத்துக்களிலிருந்து சில கருத்துக்களை தெரிவு செய்தல் கருத்துப் புனலின் என்பதன் அடிப்படையாகும். மிகவும் நல்ல கருத்துக்கள் இருக்கலாம் என்பதனால், புதிய கருத்துக்களுக்கு முன்னுரிமை வழங்குதல் மற்றும் மிகச் சிறந்த கருத்துக்களை முழுமையாக அபிவிருத்தி செய்வதற்கு அல்லது ஏனைய புத்தாக்கத்தை முன்னெடுக்கலாம் என உறுதிப்படுத்தவதற்கு கருத்துப் புனல் கருவியாகும்.

வியாபார கருத்துக்களின் பொருத்தமான தன்மையை அளவிட்டு பார்க்கும் போது முதலாவது நடவடிக்கையாக பின்வரும் வினாக்களுக்கு பதில் வழங்குவதன் மூலம் வியாபார கருத்துக்கள் அல்லது எண்ணகரு தொடர்பாக சிறந்த புரிதலைப் பெறுவதற்கு உதவும். வினாக்களுக்கு கிடைக்கும் பதில் போதுமானதல்ல எனின், வர்த்தக கருத்துக்கள் அல்லது எண்ணக்கரு தொடர்பாக மேலும் நன்றாக ஆய்வு செய்ய வேண்டும்.

- உங்களது பொருட்கள் / சேவைகளுக்கான உண்மையான தேவை உள்ளதா?
- இலாபமான வியாபாரத்தை நடத்துவதற்கு உங்களது உற்பத்தியின் / சேவையின் தேவை போதுமானதா?
- போட்டியாளர்கள் தற்போது சமமான உற்பத்தி / சேவை வழங்கப்படுகிறதா? ‘ஆம்’ எனின் உங்களது கருத்துக்கள் போட்டியாளருக்கு கிடைக்காத விஷேடமான நன்மை மற்றும் நுகர்வோருக்கான நன்மைகளை வழங்குமா?
- உற்பத்தி / சேவையை இலகுவாக உற்பத்தி செய்யலாமா?
- உற்பத்தி / சேவைகள் சட்டபூர்வமானதா? அது பாதுகாப்பானதா?
- உற்பத்தி / சேவை நீண்ட காலம் இருப்பது எனின், அதற்கு இலகுவாக பாராமரிப்பு சேவை வழங்கலாமா? (அந்த பராமரிப்ப சேவையை செய்வது யார்?)
- உங்களது நிதி யதார்த்தத்தில் உற்பத்தியை நியாயமாக அபிவிருத்தி செய்தல், உற்பத்தி செய்தல் மற்றும் சந்தைப்படுத்தவதற்கு தேவையான முதலீட்டு செலவு உள்ளதா?
- ‘மீள செலுத்தும் காலம்’ நீங்கள் வியாபாரத்தில் தரித்திருக்கும் அளவுக்கு குறுங்காலத்தில் அடைய இயலுமா?
- ஆரம்ப உற்பத்தி வெற்றி அடைந்திருந்தால், உற்பத்தியின் பின்னர் சமமான அல்லது பொருத்தமான பொருள் வரை விரிவாக்கும் இயலுமை உள்ளதா?
- உங்களது காப்புரிமை உரிமம் அல்லது வெளியீட்டு உரித்துடன் உற்பத்தியைப் பாதுகாக்க இயலுமா?
- உற்பத்தி வேறொருவரின் காப்புரிமை அல்லது வெளியீட்டு உரிமையை மீறுகிறதா?




## கருத்துக்களை மதிப்பீடு செய்தல்

கருத்துக்களை உருவாக்கும் கட்டத்தில், சில கருத்துக்களில் இருந்து இரண்டு அல்லது மூன்று கருத்துக்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், தற்போது அதில் ஒரு மிகவும் பொருத்தமான கருத்தை தெரிவு செய்ய வேண்டும். மிகவும் பொருத்தமான கருத்தை தெரிவு செய்யும் போது தெரிவு செய்யப்பட்ட இரண்டு அல்லது மூன்று கருத்துக்கள் விஷேட மதிப்பீட்டுக்கு உட்பட வேண்டும். அதன் பின்னர் தெரிவு செய்யப்பட்ட இறுதிக் கருத்தை சில முறைகளைப் பாவித்து அந்த கருத்துக்களின் சாத்தியத்தை உறுதி செய்யலாம். மிகச் சிறந்த கருத்துக்களின் சாத்தியத்தை மதிப்பீடு செய்வதற்காக பின்வரும் மதிப்பீட்டு கருவியை பாவித்து சில செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டிய தேவை உள்ளது.

வியாபார கருத்துக்களை மதிப்பீடு செய்யும் போது, தேவையான கருத்துக்களை சேகரித்தல் மற்றும் பகுப்பாய்வு செய்வதற்கும், அவற்றை பாவிப்பதன் மூலம் சரியான தீர்மானங்களை எடுப்பதற்கு ஓரளவு காலத்தை எடுக்க வேண்டும். தேவை எனின், இதற்காக வியாபார ஆலோசகர்களின் உதவியை பெறலாம்.

## சமூக மற்றும் பொருளாதார காரணிகளை பகுப்பாய்வு செய்வதன் மூலம் இறுதி கருத்தை தெரிவு செய்தல்

## Final idea selection by analysing social and economic factors

| வியாபார கருத்து | மதிப்பீட்டு சுட்டிகள் | | | | | | | | புள்ளி |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | பொருளாதார காரண | | | | சமூக காரணி | | | | |
| | சந்தை சாத்தியம | வளங்கள் கிடைக்கும் இயலுமை | இலாபம் கிடைக்கும் தன்மை | இடர் முகாமைத்துவ ஆற்றல் | பயனாளிகளின் எண்ணிக்கைி அழ்ளஇனளேுமய ைைடுர்னத | நீண்டகால இருப்பு மள.ஸ்ரீடனஇளும அநதந்யர | தொழில் வாய்ப்ப எண்ணிக்கை | சுற்றாடல் நேயம் | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |

புள்ளி வழங்குதல் : 5 அதி சிறப்பு 4 மிகவும் நன்று 3 நன்று 2 சாதாரணம் 1 பலவீனம்

# பலம், பலவீனம், வாய்ப்புகள் மற்றும் அச்சுறுத்தல் (SWOT) பகுப்பாய்வு

சமகால மற்றும் மாற்றமடையும் சுற்றாடலில் சமூக தொழில்முயற்சி அமுல்படுத்தப்படும் முறையை பரிந்து கொள்ளுதல் வியாபார திட்டமிடல் செயன்முறையின் முக்கியமான நடவடிக்கையாகும். SWOT (பலம், பலவீனம், வாய்ப்புகள் மற்றும் அச்சுறுத்தல்கள்) பகுப்பாய்வின் மூலம் சமூக தொழில்முயற்சிக்கு உரிய பலம், பலவீனம், வாய்ப்புகள் மற்றும் அச்சுறுத்தல்களை அடையாளம் காண்பதற்கு உதவும். பலம் மற்றும் பலீனம் என்பது அமைப்புக்களால் கட்டுப்படக்கூடிய உள்ளக காரணிகளாகும். வாய்ப்புகள் மற்றும் அச்சுறுத்தல் என்பது அமைப்பினால் கட்டுப்படுத்த முடியாத புற காரணியாகும். இந்த புரிதல்களுடன், பலவீனம் மற்றும் சாத்தியங்கள், அச்சுறுத்தல்களை குறைத்து, பலம் மற்றும் வாய்ப்புகளை ஆகக் கூடிய அளவுக்கு அதிகரிப்பதற்கான மூலோபாயத்தை உருவாக்குவதற்கான இயலுமை நன்றாக கிடைக்கும். பகுப்பாய்வை படிப்படியாக மேற்கொள்ளும் முறை கீழே காட்டப்படுகிறது.

## பலம் - Strengths

SWOT பகுப்பாய்வின் முதலாவது அங்கம் பலம் ஆகும். இது தொழில்முயற்சி விஷேடமாக வெற்றி பெறுவதற்கான விடயங்களை அடையாளம் காணுகிறது. இது கம்பனியின் வர்த்தக பெயர்க் குறியீடு, தரம் போன்ற கட்புலனாகாத விடயங்கள் அல்லது விஷேட உற்பத்திகளின் USP போன்ற மிகவும் இலகுவாக பொருள்கோடல் செய்யக்கூடியதாக இருக்கலாம். அது உங்களது ஊழியர்கள், பலமான தலைமைத்துவம் அல்லது சிறப்பான பொறியியல் அணி போன்றவையாகவும் இருக்கலாம்.

- தொழில்முயற்சி மிகவும் நன்றாக மேற்கொள்ளும் விடயங்கள்
- போட்டியாளர்களில் இருந்து தொழில்முயற்சி வேறுபடும் பண்புகள்
- திறமை, அறிவார்ந்த ஆளணி போன்ற உள்ளக வளங்கள்
- புலமைச் சொத்து, மூலதனம், சொந்தமாக உள்ள தொழில்நுட்பம் போன்ற சொத்துக்கள்.

## பலவீனம - Weaknesses

இது வியாபாரத்தை பின்னோக்கி தள்ளுவது என்ன என தெளிவுபடுத்துகிறது. இந்த விடயத்தில் திறமையான நபர்களின் பற்றாக்குறை மற்றும் நிதி அல்லது பாதீட்டு வரையறைகள் போன்ற நிறுவன ரீதியான சவால்கள் உள்ளடங்கலாம். சனச் செறிவான சந்தையில் தெளிவாக வரைவிலக்கணம் செய்யப்பட்ட USP (தனித்துவமான விற்பனை யோசனைகள்) இருக்காமை போன்ற ஒரே பிரிவின் ஏனைய கம்பனிகள் தொடர்பில் பலவீனங்களும் இதில் உள்ளடங்கலாம்.

- தொழில்முயற்சியிடம் இருக்காத
- உங்களது போட்டியாளர்கள் உங்களைச் சுற்றி நன்றாக புரியும் விடயங்கள்
- வளங்களின் வரையறை
- தெளிவற்ற தனித்துவமான விற்பனை யோசனைகள் (USP)
- போட்டியாளரைச் சுற்றி நன்றாக புரியும் ஒன்று

## வாய்ப்புகள் - Opportunities


சந்தைப்படுத்தல் அணியினால் உருவாக்கப்பட்ட சந்தை வாய்ப்புகளை நிறைவேற்ற முடியாத சந்தர்ப்பங்கள், வியாபாரத்துக்கு சந்தையை திறந்துவிடும் புதிய கருத்துகளை விருத்தி செய்து வருகிறது. அது பிறிதொரு சந்தர்ப்பமாகும். சுருக்கமாக சொன்னால் SWOT பகுப்பாய்வு இந்த பிரிவு விற்பனையை மேம்படுத்துவதற்கு, வியாபாரமாக விருத்தி செய்வதற்கு அல்லது வியாபாரத்தின் நடவடிக்கைகளை முன்னெடுக்கக்கூடிய விடயங்கள் அனைத்தும் உள்ளடங்குகின்றன.

- நிச்சயிக்கப்பட்ட உற்பத்திகளுக்கு குறைவான வசதிகள் உள்ள சந்தை
- பிரதேச அல்லது பிரிவின் போட்டியாளர்களின் தன்மை
- உற்பத்தி அல்லது சேவைக்காக உருவாகும் தேவைகள்
- கம்பனியின் ஊடக பிரச்சாரம்

## அச்சுறுத்தல் - Threats

வியாபாரம் அல்லது அதன் வெற்றிக்கு அல்லது வளர்ச்சிக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் அனைத்தும் உரியதாகும். அதில் தோன்றும் போட்டியாளர்கள், முறைப்படுத்தல் சட்டத்தின் வேறுபாடுகள், நிதி அச்சுறுத்தல்கள் மற்றும் வியாபாரத்தின் எதிர்காலத்தை ஆபத்தில் தள்ளக்கூடிய ஏனைய அனைத்து விடயங்களும் உள்ளடங்கலாம்.

- தோன்றும் போட்டியாளர்கள்
- மாற்றமடையும் முறைமைப்படுத்தல் சுற்றாடல்
- பாதகமான ஊடக பிரச்சாரம்
- வியாபாரம் தொடர்பில் நுகர்வோரின் மனப்பாங்கு மாற்றமடைதல்



# PESTEL பகுப்பாய்வு

**PESTEL** சுற்றாடல் என்பது வியாபாரத்தை இயக்கும் புற சுற்றாடலை பரீட்சிக்கும் கருவியாகும். அது பெரும்பாலும் மூலோபாய திட்ட செயன்முறையின் ஒரு பகுதியாக பெரும்பாலும் பாவிக்கப்படும் கருவிகளில் ஒன்றாகும். **PESTEL** என்பது அரசியல், பொருளாதார, சமூக, தொழில்நுட்ப, சுற்றாடல், சட்டம் ஆகிய விடயங்களையே குறிக்கிறது. அது தீர்மானமெடுத்தல் மற்றும் மூலோபாய திட்டமிடலுக்கு உதவுவதற்காக வியாபாரத்தின் சமகால மற்றும் எதிர்காலம் ஆகிய இரண்டிலும் ஏற்படும் சுற்றாடல் தாக்கத்தை கணக்காய்வு செய்யும் சட்டகமாகும். வியாபாரம், கருத்திட்டம் அல்லது நிகழ்ச்சித்திட்டத்துக்கு வெளியிலிருந்து இடம்பெறும் சம்பவங்களின் சூழமைவில் இருந்து உருவாகியுள்ள இடத்தைக் கண்டுபிடிப்பதற்கு பகுப்பாய்வு பயனுள்ள கருவியாகும் என்பதுடன், அதன் காரணமாக உள்ள விடயங்களில் தாக்கம் ஏற்படலாம்.

| ஆராய்ந்து பார்க்கும் காரணி | சாதனமான காரணி | பாதகமான காரணி |
|---|---|---|
| அரசியல் நிலை<br>உள்நாட்டு மற்றும் தேசிய அரசியல் நிலை<br>அண்மைக்கால அரசியல் வேறுபாடுகள்<br>அரசின் தேவைப்பாடுகள் மற்றும் முன்னுரிமை | | |
| பொருளாதார நிலை<br>கிராமிய, நகர மற்றும் தேசிய பொருளாதாரம்<br>மனைப் பொருளாதாரம்<br>நுகர்வோரின் கொள்வனவு ஆற்றல்<br>சந்தை நிலை மற்றும் வேறுபாடுகள் | | |
| சமூக – காலாச்சார நிலை<br>இன முரண்பாடுகள்<br>மத முரண்பாடுகள்<br>வியாபாரம் சமூகத்தில் ஏற்படுத்தும் தாக்கம்<br>சமூக முரண்பாடுகள் | | |
| தொழில்நுட்ப நிலை<br>தொழில்நுட்ப வேறுபாடுகள்<br>தொழில்நுட்பத்தை பெறும் இயலுமை<br>வியாபாரத்துக்கு தொழில்நுட்பத்தை பெறும் இயலுமை<br>சுற்றாடல் நிலை | | |
| வியாபாரத்தில் ஊழலை தடுத்தல்<br>கழிவகற்றல்<br>சக்திவலு முகாமைத்துவம்<br>சுற்றாடல் பாதுகாப்பின் உதவிச் சேவைகள் | | |
| சட்டபூர்வ நிலை<br>வியாபார பதிவு<br>தொழில் சட்டம்<br>சுற்றாடல் சட்டம்<br>குத்தகை மற்றும் ஏனைய சட்ட ரீதியான பிரச்சினைகள் | | |

# கருத்துகளை பரிசீலித்தல் மற்றும் ஆய்வு

கருத்துக்களை பரிசீலித்தல் என்பது சிறந்த வியாபார முன்மொழிவு இருப்பதனை உறுதி செய்வதற்காக அடிப்படை ஆய்வு செய்தல் மற்றும் சில பிரயோக வேலைகளை மேற்கொள்வதாகும். தேவைகள் இனங்காணப்பட்டிருக்கலாம் என்ற போதிலும், அது பொருட்கள் அல்லது சேவைகளுக்காக செலுத்துவதற்கு யாராவது விரும்பினால் மட்டுமே சந்தை உறுதி செய்யப்படும்.

இதன் போது சாத்தியமான சந்தை என்பது கருத்தை பரிசீலிப்பதன் மூலம் நுகர்வோர் யார் என்பதனை அடையாளம் காணலாம். அதற்கு மேலதிகமாக, இந்த பயிற்சி சமத்துவ பண்புக்காக (break-even point) சமூக தொழில்முயற்சிக்கு தேவையான புரள்வு எவ்வளவு என்பதனை அடையாளம் காணலாம்.

இதன்போது ஆராய்ந்து பார்க்க வேண்டிய காரணிகள் :

நுகர்வோர் யார் ?

அவர்கள் பொருட்கள், சேவைகளை கொள்வனவு செய்கின்றனரா ? அப்படி எனின்,
எதற்காக மற்றும் எவ்வளவு அவர்கள் செலுத்த தயாராக உள்ளார்கள் ?

பதிலைக் கண்டு பிடிப்பதற்காக கருத்து தொடர்பான பெரும் அனுபவம் உள்ளவர்களுடன் கதைப்பது முக்கியமானதாகும். இயலுமாயின், தற்போதுள்ள ஒரு வியாபாரம் அல்லது சமூக வியாபாரத்துக்கு கல்விச் சுற்றுலாவை ஏற்பாடு செய்யலாம். சந்தைப் பிரதேசத்தின் அடிப்படை சராசரி சந்தை ஆராய்ச்சி கட்டாயமானதாகும்.

மேற்குறித்த பயிற்சிக்கு மேலதிகமாக அடிப்படை சந்தை ஆராய்ச்சி அல்லது பரந்த சந்தை ஆராய்ச்சியை மேற்கொள்ளலாம். சமூக தொழில்முயற்சியை ஆரம்பித்த பின்னரும் இது தொடர்ச்சியாக இயங்கும்.

## சந்தை ஆராய்ச்சி மேற்கொள்ளுதல்

### ஆரம்ப ஆராய்ச்சி

- போட்டியாளர்கள் அல்லது எதிர்கால வாடிக்கையாளர்களின் சிறுகுழுக்களிடம் விசாரித்தல்
- போட்டியிடுவது என்ன அல்லது எதிர்கால வாடிக்கையாளர்கள் என்ன செய்கிறார்கள் என ஆராய்ந்து பார்த்தல்
- உற்பத்தியை பரீட்சித்தல். இது பெரும்பாலும் மிகச் சிறந்த தரவைப் பெற உதவும்.

### இரண்டாம் நிலை ஆராய்ச்சி

- சந்தை சஞ்சிகைகள் மூலம் பெறும் தகவல்கள்
- அரச அறிக்கைகள் மூலம் பெறும் தகவல்கள்
- சந்தை சஞ்சிகைகள் மற்றும் தரவு மூலங்கள் மூலம் பெறும் தகவல்கள்
- அரச புள்ளிவிபரங்கள் மற்றும் அறிக்கைகள் மூலம் பெறும் தகவல்கள்
- போட்டியாளர்களின் பிரச்சார ஆவணங்கள் மற்றும் விலைப் பட்டியல்கள் மூலம் பெறும் தகவல்கள்
- உங்களது இலக்கு சந்தையை இலக்காக கொண்ட வெளியீடுகள் மற்றும் ஏனைய ஊடகங்கள், இணையத் தளங்கள் மூலம் பயனுள்ள தகவல்களை பெறலாம்.
- ‘கணக்கெடுப்பு’ அல்லது வினாக்கொத்துகளை பாவித்து தகவல் பெறுதல்

வியாபார கருத்துகளை மேலும் ஆய்வு செய்வதற்காக உற்பத்தி / சேவை, நுகர்வோர் விபரம் (customer profile), போட்டி மற்றும் போட்டியாளர்களின் பகுப்பாய்வு (competition and competitor analysis), விலைக் கொள்கை (pricing policy), இடம் (location), மற்றும் சந்தைப்படுத்தல் மூலோபாயம் (marketing strategy), கண்காணித்தல் உள்ளிட்ட ஆழமான சில சந்தை ஆய்வுகளை மேற்கொள்ளுதல் பயனுள்ளதாகும். வியாபார கருத்துக்களை முன்னெடுப்பதற்கு தேவையான வளங்களை அடையாளம் காண்பதற்கும் இது உதவும்.

# போட்டியாளர்கள் தொடர்பான பகுப்பாய்வு

| எமது சமூக தொழில்முயற்சி | எமது சமூக தொழில்முயற்சி |
|---|---|
| எமது உற்பத்திகள் / சேவைகளை யார் கொள்வனவு செய்வார்கள்? | அவர்கள் எம்மை விடவும் எவ்வாறு வேறுபடகிறார்கள்? |
| எமது போட்டியாளர்கள் யார்? | அவர்களது போட்டியாளர்கள் யார்? |
| எமது சந்தைச் சாத்தியம் என்ன? | சந்தையில் போட்டியாளர்கள் எங்கே இருக்கிறார்கள்? நாம் எந்த இடத்துக்கு பொருந்துகிறோம்? |
| எமது வாடிக்கையாளர்களின் தேவைகள் என்ன? நாம் எவ்வாறு அவற்றை நிறைவேற்றுவோம்? | எமது போட்டியாளர்கள் தமது நுகர்வோரின் தேவைகளை எவ்வாறு நிறைவு செய்கின்றனர் |
| எமது நுகர்வோருக்கு வினியோப்பது தொடர்பில் எமக்கு ஏதாவது வரையறைகள் உள்ளதா? | போட்டியாளர்கள் இந்த வரையறைகளை எவ்வாறு வெற்றி கொண்டார்கள்? |
| எமது வியாபாரத்தின் எதிர்கால எதிர்பார்ப்பு என்ன? | எமது போட்டியாளர்கள் எவ்வாறு பெருகி அல்லது பரந்துள்ளனர்? |



## தொழில்முயற்சிக்காக பொருத்தமான இடத்தை தெரிவு செய்தல்.

பெரும்பாலான வியாபாரங்களுக்கு அமைவிடம் அதன் வெற்றியை தீர்மானிக்கும் காரணியாகும். பொருத்தமான இடத்தை தெரிவுசெய்ய முன்னர் வியாபாரத்துக்காக பாவிக்க எதிர்பார்க்கும் இடம் மற்றும் வளாகத்தின் சாதகம் மற்றும் பாதகம் அளவிட்டு பார்க்க வேண்டும். ஆராய்ந்து பார்க்க வேண்டிய சில காரணிகள் :

- வியாபாரம் செய்யும் முறையை தீர்மானியுங்கள்
(உதா : வீட்டிலிருந்து, வர்த்தக வியாபார இடம், நடமாடும் வியாபாரம்)
- வியாபார இடத்தின் கிரயம் நிதி வரைக்குள் இருப்பதனை உறுதி செய்யுங்கள்.
- உங்களது வர்த்தக பெயரை ஆராய்ந்து பாருங்கள்
- விற்பனையாளர்கள் மற்றும் வழங்குனர்கள் தொடர்பாக சிந்தியுங்கள்
- பாதுகாப்பு இடம் இருப்பதனை உறுதி செய்யுங்கள்
- கேள்வி உள்ள இடமா என ஆராய்ந்து பாருங்கள்
- இடம் ஊழியர்களுக்கு வசதியானதா என ஆராய்ந்து பாருங்கள்
- போக்குவரத்து வசதிகள் உள்ள இடத்தை தெரிவு செய்யுங்கள்.

## சமூக தொழில்முயற்சிகளுக்காக பொருத்தமான சட்ட ரீதியான கட்டமைப்பை அடையாளம் காணுதல்.

ஏனைய வியாபாரங்களைப் போன்று சமூக தொழில்முயற்சிகள் ஏனைய வர்த்தகங்கள் மற்றும் சமூக அமைப்புகளை விடவும் வேறுபட்டதல்ல. எனவே, சமூக தொழில்முயற்சிகளுக்கும் பொருத்தமான சட்ட ரீதியான கட்டமைப்பு மற்றும் சட்ட ரீதியான தனித்துவம் இருத்தல் வேண்டும்.

எமது நாட்டின் சமூக தொழில்முயற்சி என்றால் என்ன என்பது தொடர்பாக இதுவரையும் சட்ட ரீதியான வரைவிலக்கணம் இல்லை என்பதனால், நாட்டில் நிலவும் பல்வேறு சட்ட ரீதியான மாதிரிகளில் பொருத்தமான ஒன்றை தெரிவு செய்ய வேண்டியுள்ளது. 'பொருத்தமான' சமூக தொழில்முயற்சிக்கான சட்டபூர்வ கட்டமைப்பு என்றால் என்ன என்பது தொடர்பாக பல கருத்துக்கள் மற்றும் எண்ணங்கள் உள்ளன. இருப்பினும் தொழில்முயற்சிக்கு அதன் சமூக மற்றும் வர்த்தக இலக்குகளுக்கு பொருத்தமான சட்ட ரீதியான மாதிரியை தெரிவு செய்தல் முக்கியமானதாகும். அதன் காரணமாக பின்வரும் விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்து பார்த்தல் சரியான தீர்மானத்தை மேற்கொள்வதற்கு உதவும்.

தனிநபர் அல்லது அமைப்பு சமூக தொழில்முயற்சியாக மாற்றுதல் சட்ட ரீதியான கட்டமைப்பல்ல – அது அங்கே செயற்பாடுகளாகும்.

உங்களது உடனடி மற்றும் எதிர்கால நிதி மற்றும் வருமானம் ஈட்டும் வாய்ப்புகளை தெரிவு செய்யும் சட்ட ரீதியான கட்டமைப்புக்கு பாரிய தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

சமூக தொழில்முயற்சிக்கு சட்ட ரீதியான கட்டமைப்பை பின்பற்றும் போது ஆராய்ந்து பார்க்க வேண்டிய பல காரணிகள் உள்ளன.

இணைந்து கொள்ள திட்டமிடும் பங்குதாரர்களின் தேவை.

மேற்கொள்ள நினைக்கும் செயற்பாடுகளின் வகையின் அடிப்படையிலான தேவைப்பாடு.

வாடிக்கையாளர்கள், நிதி வழங்குவோர், வழங்குனர்கள் மற்றும் ஊழியர்களுடன் நம்பகத்தன்மையை மேம்படுத்துதல்.

சமூக தொழில்முயற்சி தொடர்பாக நபர்களை தனிப்பட்ட பொறுப்பகளிலிருந்து பாதுகாத்தல்.

சமூக தொழில்முயற்சி தமது வியாபாரத்தை பதிவு செய்வதற்காக பாவிக்கக்கூடிய சட்ட ரீதியான கட்டமைப்புகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

1. மாகாண சபை வியாபார பெயர்ப் பதிவின் கீழ் தனியுடைமை அல்லது பங்குடைமை வியாபாரம்
2. 2007 ஆண்டின் 07 இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ்
    - வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி
    - வரையறுக்கப்பட்ட பொது (பட்டியல்படுத்தப்பட்ட) கம்பனி
    - வரையறுக்கப்பட்ட பொது (பட்டியல்படுத்தப்படாத) கம்பனி
    - வரையறுக்கப்பட்ட கம்பனி (பிணையால் வரையறுக்கப்பட்ட)
    - வரையறுக்கப்படாத கம்பனி
    - பொறுப்பு கட்டளைச் சட்டத்தின் கீழான அறக்கட்டளைகள்
    - கூட்டுறவு சங்க சட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள்
    - தன்னார்வ சமூக சேவை அமைப்புகளின் (பதிவு செய்யப்பட்ட மற்றும் மேற்பார்வை) கீழ் தன்னார்வ சங்கம் அல்லது அமைப்பு

சமூக தொழில்முயற்சிக்கு பொருத்தமான சட்ட ரீதியான கட்டமைப்பை தெரிவு செய்வதல் உள்ளிட்ட காரணிகளில் தங்கியுள்ளது.

- தனிப்பட்ட பொறுப்பு
- உரித்து
- குறுங்கால மற்றும் நீண்ட கால நிதியம்
- கட்டுப்பாடு
- இலாபத்தை பகிருதல்

தொழில்முயற்சி ஊடாக அடைய எதிர்பார்க்கும் விடயங்களுக்கு அமைய தொழில்முயற்சியின் கட்டமைப்பு தீர்மானிக்கப்பட வேண்டும். குறுங்கால தேவைகளை நிறைவு செய்வதற்காக கட்டமைப்பை தெரிவு செய்வதன் மூலம் நீண்ட கால தேவைகள் மற்றும் அவற்றுக்கு பாதகமாக தாக்கம் செலுத்தும் பாங்கு தொடர்பாக சிந்தித்தலும் நினைவில் வைத்திருக்க வேண்டிய முக்கியமான விடயமாகும்.

# சமூக வியாபார மாதிரியை உருவாக்குதல் மற்றும் சமூக தாக்க இலக்குளை தயாரித்தல்

**சமூக வியாபார மாதிரி - Social Business Model**

சமூக தொழில்முயற்சி வெறுமனே வர்த்தக ரீதியான வெற்றியை விடவும் கூடுதலான எதையாவது காண்பிக்க வேண்டும். அது சமூக தாக்கத்தை காண்பித்து சமூக மாதிரியின் சாத்தியத்தை உறுதி செய்ய வேண்டும். இருந்த போதிலும், வியாபார மாதிரியின் சாத்தியத்தை இலகுவாக அளவிடக்கூடிய நிதி சுட்டிகள் மூலம் பரீட்சித்து உறுதிசெய்யலாம் என்ற போதிலும், சமூக மாதிரி செயல் மற்றும் காண்பித்தல் மூலம் உறுதி செய்ய வேண்டும். தொழில்முயற்சியின் சமூக தாக்கத்தை (அதாவது தலையீடுகளின் தாக்கம்) அளவிடுவதற்காக மிகவும் பொருத்தமான சுட்டிகளுக்கு வரைவிலக்கணம் செய்வதற்கு இந்த கையேடு உதவும். சமூக தாக்கத்தை அளவிடுவதற்காக பரந்த வீச்செல்லை உத்தேச தீர்வுகள் மற்றும் முறைமைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

வியாபார மாதிரி என்பது சமூக மாதிரி, இலக்கு, மூலோபாய மற்றும் செயற்பாட்டத் திட்டம் ஆகியவற்றை ஒன்றாக்கும் ஒட்டு மொத்த அமைப்பின் ஒருங்கிணைந்த சுட்டியாகும். இந்த இலக்குக்கு செல்லும் பயணத்தின் வெற்றியை அளவிடுவதற்காக உங்களது முறைமையுடன் தெளிவான சமூக அல்லது சுற்றாடல் தாக்க இலக்கை தயாரித்தல், உங்களது சமூக மாதிரியின் வெற்றியை மதிப்பீடு செய்வதற்கான இயலுமை உங்களுக்கு கிடைக்கும். அதன் மூலம் நீங்கள் உங்களது சமூக மாதிரியை அமுல்படுத்துவதாக உறுதி செய்தல் மற்றும் முன்னோடி செயற்திட்டத்தின் கற்றல் அடிப்படையில் மாதிரியை திருத்தம் செய்யலாம்.

**திட்ட மாதிரி**

வியாபாரத்துக்கு நிதி வழங்கும் முறை தொடர்பான திட்டம்.

வாடிக்கையாளர் உள்ளிட்ட அதன் பங்குதாரர்களுக்காக எவ்வாறு

வியாபாரத்தை பெறுமதியாக்குவது என சொல்கிறது.

வியாபாரத்தால் வழங்கப்படுவனவற்றை இறுதி பாவனையாளர்களுக்கு

வழங்கும் போது பிரிவும் முறையை சொல்கிறது.

இந்த செயன்முறை ஊடாக வருமானம் எவ்வாறு வருமானத்தை ஈட்டலாம் என சொல்கிறது.

# சமூகத் தாக்கம்

மிகவும் எளிமையான சொன்னால் 'சமூகத் தாக்கம்' (social impact) என்பது அமைப்பு தனது செயற்பாடுகள் ஊடாக ஏற்படுத்தும் சமூக மாற்றமாகும். அதாவது, அதன் தலையீடுகளின் தாக்கமாகும். தலையீடுகளின் தன்மைக்கு அமைய (மாற்றங்கள் தொடர்பான கோட்பாடு theory of change இல் பொருள்கோடல் செய்யப்பட்டுள்ளது.) அமைப்பின் சமூக தாக்கத்தில் உண்மையான தலையீட்டின் பின்னர் இடம்பெறும் விடயங்கள் அடங்கியிருக்கலாம் மற்றும் / அல்லது தெரிவு செய்யப்பட்ட இலக்காக கொள்ளப்பட்ட மக்களை விடவும் மிகவும் பரந்தளவான நபர்கள் தாக்கத்துக்கு உள்ளாவார்கள்.

இதற்கு மேலதிகமாக, ஐக்கிய நாடுகள் அமைப்பினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை (Sustainable Development Goals) அடைவதற்கு உதவுதல் தொடர்பில் சமூக தொழில்முயற்சியாளர்கள் கவனமெடுக்க வேண்டும். 17 பேண்தகு அபிவிருத்தி இலக்குகள் உருவில் காட்டப்பட்டுள்ளன.



# சமூக வியாபார மாதிரி கன்வஸ் பாவிப்பதன் மூலம் வியாபார மாதிரியை உருவாக்குதல்

வியாபார மாதிரியாக்கல் (Business Modelling) என்பது விஞ்ஞான ரீதியான முறையிலான முகாமைத்துவ முறையாகும். உங்களது கற்பனையில் ஆரம்பிக்கப்பட்டதுடன், நீங்கள் அதன் செயற்பாடுகளை பரிசீலனை செய்து தேவையான சந்தர்ப்பங்களில் திருத்தம் செய்கிறது. இன்று பெரும்பாலானோர் இந்த விதிகளை ஒரே நோக்கத்துக்காக பாவித்த போதிலும், வியாபார மாதிரிகளின் மூலோபாயமாக கருதலாகாது.

சுவிட்சர்லாந்து வியாபார தத்துவாசிரியரும், தொழில்முயற்சியாளருமான அலெக்ஸ் ஒஸ்டர்வோல்டர் அவர்களால் உருவாக்கப்பட்ட வியாபார கென்வஸ் தொழில்முயற்சியாளர்கள் தமது வியாபார மாதிரிகளை பல்வேறு பகுதிகளை வரைபடமாக்குதல் மற்றும் திட்டமிடுவதற்கு பாவித்த முறையாகும். பல்வேறு பல கென்வஸ் வகைகள் உள்ளன. Business Model Canvas மற்றும் Lean Canvas (மென்மையான கென்வஸ்) பெரும்பாலும் பாவிக்கப்படுகிறது. சமூக வியாபார மாதிரி கென்வஸ் சமூக குறிக்கோள் வியாபாரத்துக்கு பாவிக்கப்படுகிறது. சித்திர கென்வஸ் மற்றும் டிஜிற்றல் இசைவாக்கமடைதலுக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்ட வன் பிரதி கென்வஸூம் பெரிதும் பாவிக்கப்படுகிறது.

சமூக வியாபார மாதிரி கென்வஸின் பெரும்பாலான பகுதிகள் வியாபார மாதிரி கென்வஸ் மற்றும் மென்மையான மாதிரி கென்வஸ் பாவிப்பதற்கு சமமானதாகும். Tandemic நிறுவனத்தினால் விருத்தி செய்யப்பட்ட சில வேறுபாடுகள், சமூக தொழில்முயற்சி வியாபாரத்துக்கு உரிய துறைகள் தொடர்பாக கவனம் செலுத்துகிறது.

உதாரணமாக புதிய துறைகளில் நீங்கள் மீண்டும் வழங்கும் அல்லது எந்த முறையில் விருத்தி செய்வதில் எவ்வாறான சமூக தாக்கம் என்பதும், இலாபம் அல்லது மிகையை மீண்டும் முதலீடு செய்வதற்கு கருதும் இடம் மற்றும் அதற்காக அளவீடு, பயனாளிகளின் அளவீடு மற்றும் சமூக மற்றும் நுகர்வு பெறுமதி முன்மொழிவுகளும் அடங்கும். உதாரணமாக பார்த்தால், ஏதாவது சமூக தொழில்முயற்சி சுற்றாடல் நோக்கத்தை அடிப்படையாக கொண்டு நடுகை செய்யப்பட்ட மரங்களின் எண்ணிக்கை, தங்குமிடம் வழங்கப்பட்ட அகதி மக்களின் எண்ணிக்கை, தொழில் வாய்ப்பை உருவாக்குதல் அல்லது செய்யப்பட்ட முதலீடுகளை அளவீடாக கொள்ளலாம். சமூக தாக்க கீழ் கோடுகளைத் (bottom line) தாண்டி அமைப்பின் சமூக பணி தொடர்பாக பார்க்கப்படுகிறது. சமூக தொழில்முயற்சியாளர்கள் மத்தியில் அளவீடுகள் வேறுபடலாம். இருப்பினும், கென்வஸூக்கு அமைய தாக்க அளவீடு தாக்கம் தாக்கத்தை எண்ணிக்கை அடிப்படையில் அளவிடுவதற்கு மேற்கொண்ட முயற்சியாகும்.

# சமூக தொழில்முயற்சி மாதிரி கென்வஸ்

# SOCIAL BUSINESS MODEL CANVAS

## பிரதான வளங்கள்

உங்களது செயற்பாட்டை மேற்கொள்வதற்கு தேவையான வளங்கள் எவை?

## பிரதான செயற்பாடுகள்

உங்களால் மேற்கொள்ளப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் அல்லாத செயற்பாடுகள்

## தலையீட்டு வகை

உங்களது தலையிட்டு மாதிரி என்ன? உற்பத்தியா, சேவையா?

## குழுக்களின் வகை / வகுதிகள்

யனாளி

உங்களது தலையீட்டினால் பயன் பெறுவோர்

## மையக்கருத்தின் பெறுமானங்கள்

பயனர் மையக்கருத்து பெறுமானங்கள்

### தாக்கத்தை அளவிடுதல்

நீங்கள் சமூக தாக்கத்தை ஏற்படுத்துவதாக எவ்வாறு காட்டுவது?

### நுகர்வோர் மையக்கருத்து பெறுமானங்கள்

உங்களது வாடிக்கையாளர்கள் உங்களிடமிருந்து எதனை பெற வேண்டியுள்ளது?

## பங்குதாரர்கள் + அக்கறையுடைய தரப்பினர்

இன்றியமையாக குழுக்கள் எவை? உங்களுக்கு விசேட வேகம் அல்லது அனுமதி தேவையா?

## செல்வழி (அணுகுமுறைகள்)

நீங்கள் உங்களது பயனர்கள் மற்றும் வாடிக்கையாளர்களை எவ்வாறு அணுகுகிறீர்கள்?

## வாடிக்கையாளர்கள்

உங்களது வாடிக்கையாளர்கள் யார்?

## கிரய கட்டமைப்புகள்

உங்களது பாரிய செலவுகள் எவை? உங்களது கொள்ளளவு உயரும் போதுஅவை எவ்வாறு மாற்றமடைகின்றன?

## மிகை

உங்களது இலாபத்தை முதலீடு செய்வதற்கு எங்கே திட்டமிடுகிறீர்கள்?

## வருமானம்

உங்களது வருமான வழிகளை விகிதாசாரமாக காட்டுங்கள்



## 7 சமூக தொழில்முயற்சியை நிறுவுவதற்கு திட்டமிடுதல்.

சமூக தொழில்முயற்சியை நிறுவும் போது வியாபார திட்டமிடல் பிரதான தேவைப்பாடாகும். வியாபார திட்டமிடல் அவ்வளவு முக்கியமானதல்ல என்பதுடன், அது இன்றிக் கூட வியாபாரத்தை ஆரம்பிக்கலாம் என சிலர் வாதிடுகின்றனர். இருப்பினும், நீங்கள் சமூக வியாபாரத்தை ஆரம்பிப்பது எனின், ஆகக்குறைந்தது எளிமையான வியாபார திட்டத்தை தயாரித்தல் உகந்ததாகும். ஆதன்போது நீங்கள் எதிர்காலத்தில் முகங்கொடுக்கக்கூடிய பாதகமான தாக்கங்களைக் குறைத்துக் கொள்ளலாம்.

நீங்கள் அனைத்து தயார்படுத்தல் செயற்பாடுகளையும் முன்னரே மேற்கொண்டிருந்தால், மிகச்சிறந்த வியாபார திட்டத்தைத் தயாரித்தல் அவ்வளவு சிரமமானதல்ல. முகாமைத்துவம் செய்யக்கூடிய நடவடிக்கைகளைத் தயாரிப்பதன் மூலம் திட்டமிடலில் உள்ளடக்க வேண்டியவற்றைத் தீர்மானிப்பதற்கு அது உதவும். எனவே, நீங்கள் சேகரித்த அனைத்து தகவல்களையும் பரிசீலித்து மீளாய்வு செய்தல் மற்றும் எழுதுதலை மட்டும் செய்ய வேண்டும். வியாபாரத் திட்டத்தை தயாரிப்பதற்கு பல முறைகள் உள்ளன. நாம் இங்கே சமர்ப்பிக்கும் தயாரிப்பு முறை அதில் ஒன்று மட்டுமே. உங்களுக்கு மிகவும் பொருத்தமான மாதிரியை நீங்கள் பாவியுங்கள். பெரும்பாலான வங்களுக்கு அவர்களுக்கே உரிய திட்டம் இருப்பதனால் உங்களுக்கான திட்டத்தை தயாரிக்க மன்னர் அவற்றை ஆய்வு செய்யுங்கள். வியாபார திட்டத்தை எழுதுவதற்கு முன்னர் ஆராய்ந்து பார்க்க வேண்டிய சில முக்கியமான விடயங்கள் கீழே காட்டப்படுகின்றன.

**“தொழில்முயற்சியை திட்டமிடுதல் தொழில்முயற்சிக்கான மிகவும் முக்கியமான தந்திரோபாயமாகும். சிறந்த தொழில்முயற்சி திட்டம் தொழில்முயற்சியாளர்கள் வியாபார கருத்துக்களை அடைவதற்காக தேவையான நிச்சயிக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பில் கவனம் செலுத்துவதற்கு மட்டுமன்றி, குறுங்கால மற்றும் நீண்டகால குறிக்கோளை அடைவதற்கும் உதவும்”.**

# தீர்மானிக்கும் வெற்றிகரமான காரணிகள்

எளிமையாக சொல்வதெனின், தீர்மானிக்கும் வெற்றிகரமான காரணிகள் (Critical Success Factors) என்பது எந்தவொரு தொழில்முயற்சி வெற்றியடைவதில் தாக்கம் செலுத்தும் காரணிகளாகும்.சமூக வியாபாரத்தில் பின்வரும் விடயங்கள் முக்கியமானதாக அமையலாம்.

- பலமான தலைமைத்துவம்
- தெளிவான மற்றும் அடையக்கூடிய சமூக மற்றும் வியாபார நோக்கங்கள்
- தொழில்முயற்சியுடன் தொடர்புடைய அனைவரினதும் (சேவைகள் அடங்கலாக) பேரார்வம் மற்றும் அர்ப்பணிப்பு
- வினைத்திறனான மற்றும் சாதகமான சட்டபூர்வ / முறைமைப்படுத்தல் சூழமைவு
- நவீன எண்ணக்கருவின் கவரும் தன்மை மற்றும் தெளிவு
- முகாமைத்துவ ஆற்றல்
- மிகவும் சிறந்த மற்றும் மனித நேய சேவைகளை வழங்குவதற்கு அர்ப்பணித்தல் மற்றும் விரும்புதல் போன்ற தனிப்பட்ட பண்புகள்
- சமூக மூலதனத்துடனான வினைத்திறனான ஒத்துழைப்பு
- சமுதாய பங்கேற்பு
- சரியான நிதி அறிக்கைகளைப் பேணுதல் மற்றும் தேவையான தரப்பினருடன் பகிர்ந்து கொள்ளுதல்.

## சமூக தொழில்முயற்சிக்கு சிறந்த நல்லாட்சி நிர்வாக முறை இருக்கவேண்டியதன் முக்கியத்துவம்.

சிறந்த நல்லாட்சி முறை என்பது தொழில்முயற்சியின் (விஷேடமாக சில நபர்களைக் கொண்ட அமைப்பு) விருப்பு, உற்பத்தித்திறன், மேற்பார்வை மற்றும் பொறுப்புக்களை உறுதி செய்யும் கட்டமைப்பு மற்றும் செயன்முறையாகும். ஏனைய தொழில்முயற்சிகளைப் போலன்றி, சமூக தொழில்முயற்சிகள் வருமானம் உழைப்பதனை மட்டுமன்றி எதிர்பார்க்கும் சமூக தாக்கம் மற்றும் விளைவுகள் தொடர்பாக கவனம் எடுத்தல் வேண்டும். இவ்வாறான பின்னணியில் சமூக தொழில்முயற்சியின் வெற்றி சிறந்த நிர்வாக முறையிலேயே தங்கியுள்ளது. பெரும்பாலான சமூக தொழில்முயற்சிகள் நிர்வாக பொறிமுறையின் தேவையை உணர்ந்துள்ள போதிலும், அதனை சிறப்பாக இயக்கும் போது தெரிந்தோ, தெரியாமலோ சில தவறுகள் இடம்பெறுகின்றன. நிர்வாக பொறிமுறை தமது முகாமைத்துவ கட்டமைப்புக்கு தேவையற்ற தாக்கத்தை உருவாக்குகிறது எனும் தேவையற்ற பயம் ஏற்படுவதன் கரணமாகவே அவ்வாறு இடம்பெறுகிறது.

நிர்வாக பொறிமுறை என்பது சமூக தொழில்முயற்சி தொடர்பாக பொறுப்பேற்கக் கூடிய சில நபர்களை உள்ளடக்கிய சட்டரீதியான செல்லுபடியாகும் தன்மை கொண்ட நிர்வாக சபையாகும். அதன் மூலம் சமூக தொழில்முயற்சியின் தலைமைத்துவம் மற்றும் முகாமைத்துவம் பலமடைகிறது. ஆதன் நோக்கத்தை அடைவதற்காக சில முறைகளில் பங்களிப்பு செய்கிறது.

- மூலோபாய உதவி மற்றும் விஷேட அறிவு
- சமூக தொழில்முயற்சிக்கு பயனுள்ள வெளி நபர்கள் மற்றும் வலையமைப்புடனான தொடர்பு (உதா : நிதிப் பாய்ச்சல், சட்ட ரீதியான, அறிவு மற்றும் ஆற்றல்)
- நோக்கு மற்றும் எதிர்கால இருப்பை உறுதி செய்தல்.
- நம்பகத்தன்மையை ஏற்படத்துதல் மற்றும் உறுதி செய்தல்.

சமூக தொழில்முயற்சியின் தன்மை, குறிக்கோள் மற்றும் கருமங்களுக்கு பொருத்தமான வகையில் நிர்வாக சபை கட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டும். நிர்வாக சபையின் கருமங்கள் அவ்வப்போது மீளாய்வு செய்யப்பட்டு, சமூக தொழில்முயற்சியின் தேவைகளுக்கு ஏற்ப தேவையான மாற்றங்கள் செய்யப்பட வேண்டும்.



## நிர்வாக சபையின் கட்டமைப்பு மற்றும் கருமங்கள்

- நோக்கு மற்றும் குறிக்கோளை உருவாக்குதல்
- வியாபார திட்டமிடலை தயாரிப்பதற்கு உதவுதல் மற்றும் அதனை அங்கீகரித்தல்
- வெளி தரப்பினரின் ஆலோசனைகளைப் பெறுதல்
- முன்னேற்ற சுட்டிகளைத் தீர்மானித்தல்
- தொழில்முயற்சியின் வெளிப்படைத்தன்மையை அதிகரித்தல்
- தரக் கட்டுப்பாடு
- தேவையான வளங்களை ஏற்பாடு செய்தல்
- வெளித் தொடர்புகளை உருவாக்குதல்
- மாற்றீட்டுத் திட்டமிடல்
- புதிய வியாபார வாய்ப்புகளை அடையாளம் காணுதல்
- நிறுவன ரீதியான மாற்றங்களில் தேவைப்பாட்டை உறுதி செய்தல்
- சமூக தாக்கம் மற்றும் பெறுபேற்றை மதிப்பிடு செய்தல்.

# சந்தைப்படுத்தல்

சந்தைப்படுத்தல் என்பது வாடிக்கையாளர்களை கண்டுபிடித்தல், வெற்றி கொள்ளுதல், நுகர்வோர் திருப்தி மற்றும் இலாபத்தை பேணுவதற்கு வியாபாரம் செய்ய வேண்டிய விஷேட கருமங்களாகும். ஆராய்ந்த பார்க்க வேண்டிய பல முக்கியமான விடயங்கள் உள்ளன.


- விலை (Price) – நுகர்வோரால் பொருள் அல்லது சேவை மீது கொண்டுள்ள பெறுமதியை வெளிப்படுத்துகிறது.
- உற்பத்தி (Product) - சேவைகள் மற்றும் பௌதீக ரீதியான உற்பத்திகளையும் கருதலாம். அதில் தொட்டுணரக்கூடிய மற்றும் கட்புலனாகாத பண்புகள் அடங்கும். அதில் நபர்கள் மற்றும் வர்த்தகப் பெயர் தொடர்பான பெறுமதியும் அடங்கும்.
- இடம் (Place) - பொருள் அல்லது சேவை, நுகர்வோருக்கு தேவையான இடத்தில், அவர்களுக்கு தேவையான சந்தர்ப்பத்தில்
- மேம்படுத்தல் (Promotion) - பிரச்சாரம், நேரடித் தபால், பொது மக்கள் தொடர்பு, நேரடி அழைப்புகள், வர்த்தக கண்காட்சிகள், 'வாய்ச் சொல்' போன்றவை அடங்கும்.
- நபர்கள் (People) - வழங்கக்கூடிய விஷேட திறன்கள் மற்றும் அனுபவம்.
- செயன்முறை (Process) – நபர்களில் முதலீடு, சமமான வாய்ப்புகள் அல்லது சுற்றாடல் தராதரங்கள் போன்ற மேம்படுத்தக்கூடிய தராதரப் பண்புகள்
- குறிக்கோள் (Purpose) - சமூக குறிக்கோள், சந்தையில் தனித்துவமான இடம் என்ன? சமூக தொழில்முயற்சி 'சமூக குறிக்கோள்' அடிப்படையில் அதனைச் சந்தைப்படுத்தவதற்கு தேவை எனின், அதன் மூலம் மேற்கொள்ளப்படும் தாக்கத்தை நிரூபித்துக் காட்ட முடியுமா?

# சமூக தொழில்முயற்சிக்கான பல்வேறு சந்தை வாய்ப்புகள் மற்றும் அணுகுமுறைகள்

ஏனைய தொழில்முயற்சிகளைப் போன்றே சமூக தொழில்முயற்சியும் ஒரே சந்தையில் போட்டியிட வேண்டியிருக்கும். ஏனைய தொழில்முயற்சிகளை விடவும் சமூக தொழில்முயற்சிக்கு இருக்கும் ஒரேயொரு சாதகம் என்னவென்றால், பொருட்கள் அல்லது சேவைகளை கொள்வனவு செய்வதற்காக நுகர்வோரைக் கவர்வதற்காக தமது சமூககுறிக்கோள் மற்றும் தாக்கத்தை சொல்லுவதற்கான வாய்ப்பு கிடைப்பதாகும். இது புலனுணர்வு சந்தைப்படுத்தல் என அழைக்கப்படும். எனவே, சமூக தொழில்முயற்சி அதன் உண்மைப் பெறுமானத்தை (value proposition) இலக்கு குழுக்களுக்கு தொடர்பாடல் செய்வதற்கு எவ்வாறு திட்டமிடலாம் என்பது சந்தைப்படுத்தல் மூலோபாயத்தினால் வரைவிலக்கணம் செய்யப்பட வேண்டும். மூன்று சந்தைப்படுத்தல் மூலோபாய பிரிவுகள் தொடர்பாக கவனம் செலுத்தலாம்.

- வர்த்தகப் பெயர் அடையாளம் (Brand Identity) - சமூக தொழில்முயற்சி அதன் உண்மையான பெறுமானம் ∴ சந்தைக்கு வழங்கும் விடயங்களை தொடர்பாடல் செய்யும் முறை
- சந்தையில் கிடைத்துள்ள இடம் - சமூக தொழில்முயற்சியின் உண்மையான பெறுமானம், அதன் போட்டியாளர்கள் தொடர்பாக எவ்வாறு சொல்வது?
- சந்தை பிரவேசம் - சமூக தொழில்முயற்சி அதன் உண்மையான பெறுமானத்துடன் இலக்குக்குரிய குழுவினரை எவ்வாறு அடையலாம்?

**சமூக தொழில்முயற்சி வர்த்தக பெயர் தனித்தவத்துக்கான உதாரணம்.**



# நிதித் திட்டமிடல்

வியாபார நடவடிக்கையில் முக்கியமான பகுதியாகும். தொழில்முயற்சிக்கு முன்னரே திட்டமிட்ட நிதியை விடவும் கூடுதலான நிதி தேவை என சொல்லப்படுவதனால் நிதி எதிர்வுகூறலை ஆழமாக தெரிந்து கொள்ளுதல் முக்கிமானதாகும். எதிர்வுகூறல், நிதி சேகரித்தலை இலகுவாக்கும். விஷேடமாக வங்கிகள் அல்லது நிதி வழங்கும் அமைப்புகளுடன் தொடர்பு கொள்ளும் போது அதன் தேவைப்பாடு தோன்றுகிறது. வங்கி அல்லது வியாபார ஆலோசகர்கள் மூலம் உங்களது நிதி எதிர்வுகூறல் தொடர்பான இரண்டாவது கருத்தை பெறுதல் பயனுள்ளதாக அமையும்.

பொதுவாக திட்டமிடப்பட்ட மற்றும் நிதிச் செயற்பாடுகள் தொடர்பாக சிறந்த புரிதல் உள்ள வியாபாரம் மிகவும் வெற்றிகரமான வியாபாரமாகும். தமது பாதீட்டை புத்திக்கூர்மையுடன் நிர்வகிப்பதன் காரணமாக அவர்களுக்கு தேவையான நேரத்தில் போதுமான அளவான நிதி கிடைக்கும். இது வியாபார திட்டமிடல் செயன்முறையின் முக்கியமான பிரிவாகும். செயற்பாட்டு பாதீடு அல்லது நிதிப் பாய்ச்சல் எதிர்வுகூறலை எவ்வாறு செய்யலாம் என்பதனை ஒரு தொழில்முயற்சியாளர் புரிந்துகொள்ளவில்லை எனின், அது தொடர்பாக ஏதாவது பயிற்சி அல்லது நிதி நிறுவனத்தின் ஆலோசனையைப் பெற வேண்டியிருக்கலாம்.

பலவீனமான நிதிப் பாய்ச்சல் முகாமைத்துவம் வியாபாரம் தோல்வியடைவதற்கு மிகவும் பொதுவான விடயமாகும். வினைத்திறனான நிதி பாய்ச்சல் முகாமைத்துவம் மூலம் கூடுதலான அல்லது எதிர்பாராத செலவுகளுக்கு மேலதிக நிதி தேவையான சந்தர்ப்பங்களில் திட்டமிடுதலுக்கான இயலுமை கிடைக்கிறது. மூலதன பொருட்களை கொள்வனவு செய்தலைத் திட்டமிடுதல் மற்றும் வளங்களை உயர்ந்த மட்டத்தில் பாவித்தல் மற்றும் கிரயத்தை குறைத்தல் போன்றவற்றுக்கு அது உதவும். அனைத்து எதிர்வுகூறல்களும் மதிப்பீடுகள் ஆகும். இதன் போது இயன்றளவு யாதார்த்தமாக இருப்பதற்கு முயற்சிக்க வேண்டும் என்ப-துடன், எதிர்பாரா செலவுகள் அல்லது அவசர நிலமைகளுக்காக ஏதாவது அவசர வாய்ப்புகளை உருவா-க்க வேண்டும். பாதீடு செய்தல் என்பது நிதிப் பாய்ச்சல் எதிர்வுகூறல் வரையுள்ள எதிர்பார்ப்புகளுடன் உண்மையான செயலாற்றுகையை ஒப்பிடுவதற்கு உதவும் திட்டமிடல் கருவியாகும்.

## காசுப் பாய்ச்சல் எதிர்வுகூறல்

காசுப் பாய்ச்சல் எதிர்வுகூறல் என்பது ஏதாவது காலப்பகுதியில் உங்களது வியாபாரத்திலும், அதன் வெளியே வரும் நிதிப் பாய்ச்சலை மதிப்பீடு செய்யும் முறையாகும். நிதி பாய்ச்சல் எதிர்வுகூறல் உங்களது திட்டமிடப்பட்ட காசு வருமானம் மற்றும் செலவின் அடிப்படையில் காட்டப்படுவதுடன், நிதி, மூலதன செலவு மற்றும் முதலீடு போன்ற செயற்பாடுகள் தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ளும் போது அது முக்கியமான கருவியாகும். நிதி எதிர்வுகூறல் கால வரையறைகளுக்காக மேற்கொள்ளப்படலாம். குறுங்கால நிதி எதிர்வுகூறல் அடுத்துவரும் 30 நாட்களை உள்ளடக்கியதாக இருக்கலாம் என்பதுடன், எந்தவொரு உடனடி, சமகால நிதி தேவைகள் அல்லது மிகை பணத்தை அடையாளம் காண்பதற்காக அதனை பாவிக்கலாம். இடைக்கால காசுப் பாய்ச்சல் எதிர்வுகூறல் அடுத்துவரும் மாதம் மற்றும் ஆண்டுகளை உள்ளடக்கலாம் என்பதுடன், நீண்டகால எதிர்வுகூறல் எதிர்கால விற்பனை மற்றும் கொள்வனவு தொடர்பில் விமர்சன ரீதியில் ஆராய்ந்து பார்ப்பதற்கு பாவிக்கலாம். எதிர்வுகூறல் சாதாரணமாக எப்போதும் இற்றைப்படுத்தப்படும். ஒவ்வொரு மாதமும் அல்லது ஒவ்வோர் ஆண்டும் சமகால யாதார்த்தத்தின் அடிப்படையில் வியாபாரத்தில் இடம்பெறலாம் என எதிர்பார்க்கப்படும் விடயங்கள் தொடர்பாக இற்றைப்டுத்தப்பட்ட கருத்தை வழங்குகிறது.

# முதலீட்டு நிதி

ஏனைய வியாபரங்களைப் போன்றே சமூக தொழில்முயற்சிக்கும் முதலீட்டு நிதி தேவையாகும். தேவைப்படிக்கூடிய முதலீட்டு நிதி வகையில் பல்வேறு காரணிகள் தாக்கம் செலுத்தும். அதாவது, சமூக குறிக்கோள், சந்தை, சமூக தொழில்முயற்சியை நடத்திய அனுபவம், நிதி ஒதுக்குகள், உள்ளக வளங்கள், ஆற்றல், வியாபார கருத்து போன்ற காரணிகளே அவையாகும்.

சமூக தொழில்முயற்சிகளுக்கான சில நிதி மூலங்கள் :

- கடன் நிதி (Debt finance)
- பங்கு நிதி (Equity finance)
- வழங்கல் சங்கிலி நிதி (Supply chain finance)
- சமூக முதலீடு (Social investment)
- சமூக தாக்கத்தின் அடிப்படையிலான முதலீடு (Impact investment)
- வியாபார மூலதனம் (Venture capital)
- வியாபார தேவதைகள (Business Angels)
- நிறுத்தி வைத்துள்ள இலாபத்தை மீள முதலீடு செய்தல் (Reinvestment of retained profit)
- உறுப்பினர் / பங்குதாரர் முதலீடு (Member or Stakeholder investment)
- குழும நிதியம் (Crowdfunding)

# வியாபார திட்டம்

சமூக தொழில்முயற்சி வியாபாரத் திட்டம், சமூக தொழில்முயற்சியின் அடிப்படையை விபரிக்கிறது. வியாபார திட்டம் என்பது உங்களது தொழில்முயற்சிக்கு தேவையான சமூக மற்றும் பொருளாதார செயற்பாடுகள் தொடர்பான விபரமாகும். சமூக தொழில்முயற்சியில் பெரும்பாலும் பங்குதார தரப்பினர் இருப்பதுடன், வியாபார திட்டம் நிதி சேகரித்தல், வாடிக்கையாளர்களைக் கண்டுபிடித்தல், உதவி புரிவோர் மற்றும் பங்குதாரர்களுடன் தொர்பை ஏற்படுத்துவதற்கு, சிறந்த சந்தைப்படுத்தலுக்கு தேவையான ஆவணமாகும்.

வியாபாரத் திட்டத்தில் நீங்கள் தெளிவாக வெளிப்படுத்த வேண்டிய சில விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

- சமூக தொழில்முயற்சியின் தொலைநோக்கு
- குறிக்கோள் மற்றும் குறிக்கோளை அடைவதற்கான தெளிவான செயற்பாடுகளின் உத்தேச குறிப்பு
- செயலாற்றுகையை திட்டமிடுதல், அளவிடுதல் மற்றும் மேம்படுத்துவதற்கான இலக்கை தீர்மானிப்பதற்கு தேவையான வளங்கள், செலவு மற்றும் வருமான குறிப்பு

# வியாபார திட்டமிடல் கட்டமைப்பு

**நிறைவேற்று சாராம்சம்**

சமூக தொழில்முயற்சியாக எதனை செய்வது, தற்போதுள்ள இடம், அதற்காக எந்த இடத்துக்கு செல்ல வேண்டும், எவ்வாறு அங்கே செல்வது என்பது தொடர்பான சுருக்கமான கூற்று.

**வியாபாரம் தொடர்பான தகவல்கள்**

அடிப்படை விபரங்கள், பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல், இணையத்தளம் போன்றவை, வியாபார கருத்துக்கள், சமூக குறிக்கோள், சட்ட ரீதியான நிலைமை, கட்டமைப்பு

**சமூக தொழில்முயற்சி நிறுவப்பட்ட அமைப்பின் தகவல்கள் (பொருத்தமானது எனின்)**

அமைப்பின் பின்னணி, அமைப்பின் பணிக்கூற்று / இலக்கு, சட்ட ரீதியான கட்டமைப்பு, முகாமைத்துவ கட்டமைப்பு போன்ற மேலே குறிப்பிடப்பட்ட அடிப்படை விபரங்கள்.

**சமூக குறிக்கோள்**

யாருக்கு பயன் கிடைக்கும், சமூக தொழில்முயற்சி ஏன் தேவைப்படுகிறது? சமூக தொழில்முயற்சியை தேண வேண்டியதன் தேவையை எவ'வாறு நிறைவேற்றுவது? அது எந்த வகையான சமூக தொழில்முயற்சி? (உதா : சமூக நிறுவனம்) வெளிதரப்பினர்களின் கருத்துக்கள் எவை?

**சமூக தாக்கம்**

நீங்கள் உங்களது சமூக தாக்கத்தை எவ்வாறு அளவிடுவீர்கள்? அதனை செய்வதற்கு உங்களுக்கு உதவக்கூடிய கருவிகள் எவை? நிதி வழங்குனர்கள் மற்றும் நிதி வழங்குனர்களுக்கு தேவையான தாக்கம் தொடர்பான சான்றுகள் எவை? தாக்கத்தை அளவிடும் கிரயம் எவ்வளவு? உங்களது சமூக தாக்கத்தை அளவிடுவதற்கு உங்களுக்கு உதவும் விடயங்கள் எவை?

**வெளி தொடர்புகள்**

தொழில்வாண்மை மற்றும் சட்ட பிரதிநிதிகள், நிதி வழங்கும் அமைப்புகள், நீதிமன்ற கட்டமைப்பு, வரத்தக சங்கங்கள், வலையமைப்புகள் போன்றவற்றுடனான தொடர்புகள்.

**சந்தை**

பொருட்கள் / சேவைகளை கொள்வனவு செய்வது யார்? நுகர்வோர் உங்களிடமிருந்து கொள்வனவு செய்வது எதற்காக (USP)? வயது குழுக்களின் வேறுபாடுகள், புலம்பெயர்ந்த நபர்கள், சுற்றாடல் இயக்கத்தின் பருவகால தாக்கங்கள் பொன்ற விஷேட அம்சங்கள் போன்ற போக்குகள் அடங்கலாக சந்தை ஆய்வு, போட்டி, சந்தை பரிசோதனை, சமமான சமூக தொழில்முயற்சிகள்.

**வியாபார சூழல்**

வியாபாரத்துக்கு தாக்கம் செலுத்தக்கூடிய வியாபார சூழலில் உள்ள பிரதான பிரச்சினைகள் கைத்தொழில் பகுப்பாய்வு, அமுல்படுத்த எதிர்பார்க்கும் கைத்தொழிலில் தாக்கம் செலுத்தும் பிரதான பிரச்சினைகளில் தீர்மானமெடுத்தலின் வெற்றிக்கான காரணிகள், வியாபார அபிவிருத்திக்காக பிரதான வெற்றிக்கா காரணிகள், தீர்மானம் மிக்க காரணிகளை நீங்கள் நிறைவேற்றுதல் தொடர்பான தந்திரோபாயம்.

**புரழ்வு மற்றும் பேண்தகு தன்மை**

ஏதிர்பார்க்கும் பரழ்வு, எதிர்பார்க்கும் வர்த்தகம் சாராத வருமானம், எதிர்பார்க்கும் இலாபம், பேண்தகு தன்மையை அடைவதற்கு எவ்வளவு காலம் எடுக்கும்? எதிர்பார்க்கும் புரழ்வு, வர்த்தகம் சாராத வருமானம் மற்றும் பேண்தகுதன்மையை பெறுவது எவ்வாறு ? வாய்ப்புகளை திட்டமிடுதல்.

**சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனை**

சந்தைப்படுத்தல் தந்திரோபாயம் என்ன? விலை தீர்மானிக்கும் தந்திரோபாயம் என்ன? விலையிடல் தந்திரோபாயம் என்ன மேம்படுத்தல் கலவை என்ன ? நுகர்வோர் உபசரணை கொள்கை என்ன? நுகர்வொர் மீளூட்டம் பெறுவது எவ்வாறு ?சந்தைப்படுத்தலுடன் தொடர்புபடுவோர் யார்? சந்தைப்படுத்தல் வரவுசெலவு திட்டம் எது? விநியோக தந்திரோபாயம் / சென்முறை எது? ஈ - வர்த்தக தந்திரோபாயம் எது?

**இடம் மற்றும் சொத்துக்களின் விபரம்**

கிரயம் மற்றும் முன்மொழியப்பட்ட நிதி முறை (கொள்வனவு / வாடகை / குத்தகை வழங்கல்), திட்டமிடல், சுகாதார மற்றும் பாதுகாப்பு பிரச்சினை, கட்டிடங்கள், மறுசீரமைப்பு அல்லது ஏற்புடையதாக்கல் கிரயம், காப்புறுதி.

**வழங்குனர்கள்**

பிரதான வழங்குனர்கள் யார்? வழங்கல் சங்கிலியில் இருப்போர் யார்? பதிலீடு உள்ளதா? இந்த வழங்குனர்களை பாவிப்பதன் சாதகங்கள்.

**உற்பத்தி மற்றும் / அல்லது செயற்பாடு**

பிரதான வழங்குனர்கள் யார் ? வழங்கல் சங்கிலியில் இருப்போர் யார்? பதிலீடு உள்ளதா? இந்த வழங்குனர்களை பாவிப்பதன் சாதகங்கள்.

**உபகரணங்கள்**

பிரதான வழங்குனர்கள் யார் ? வழங்கல் சங்கிலியில் இருப்போர் யார் ? பதிலீடு உள்ளதா ? இந்த வழங்குனர்களை பாவிப்பதன் சாதகங்கள்.

**செயற்திட்டம்**

பிரதான திருப்புமுனைகள் / நேர அட்டவணை மற்றும் சார்ந்த செயற்பாடுகள், கிரயம் மற்றும் நபர்களின் தேவைகள்

**நிதி பகுப்பாய்வு**

வரவுசெலவு திட்ட கருதுகோள் (திட்டமிடப்பட்ட வருமானம் மற்றும் செலவு) யதார்த்தமான காசுப் பாய்ச்சல் எதிர்வுகூறல், ஐந்தொகை / இலாபம் மற்றும் நட்டம், தேவையான நிதி மற்றும் நிதி சேகரிக்கும் முறை, நிதி பாதுகாப்பு, முற்பணம் அல்லது பாரிய அளவான நிதி, பாதுகாப்பாக உள்ள சொத்துக்கள், நிதி பதிலீட்டு முறைகள் நிதி முகாமைத்துவ கட்டமைப்பு மற்றும் வளங்கள், கடன் நிதி தொடர்பான முன் அனுபவங்கள்.



## சமூகத தொழில்முயற்சியை ஆரம்பித்தல்

தயாராதல் மற்றும் திட்டமிடல் கட்டங்கள் நிறைவடைந்த பின்னர், அடுத்ததாக சமூக தொழில்முயற்சி ஆரம்பிக்கப்பட வேண்டும். ஏற்கனவே தேவையான அனைத்து செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டு அது ஆரப்பிப்பதற்கு தயாராக இருத்தல் வேண்டும். ஆரம்பத்துக்கான செயன்முறைகள் இடம்பெற்றுள்ளதா என்பதனை உறுதி செய்வதற்கான வழிகாட்டல் அல்லது பரீட்சிக்கும் பட்டியல் கீழே காட்டப்படுகிறது.

சமூக தொழில்முயற்சிக்கு தலைமைத்துவம் வழங்கும் நபர் சமூக குறிக்கோளை அடைவதற்காக போதுமான வர்த்தக அனுபவங்கள் மற்றும் வியாபார ஆற்றல்கள், சரியான மனப்பாங்கு மற்றும் பெறுமானம் இருப்பதனை உறுதி செய்யுங்கள்.

தனி நபர்களுக்கு தேவையான அனைத்து திறன்களும் இருக்கும் என எதிர்பார்க்க முடியாது. எனவே அவர்களது நிபுணத்துவம் தொடர்பாக கவனம் செலுத்தக்கூடிய பலமான குழுவாக இருப்பதனை உறுதி செய்ய வேண்டும். சந்தைப்படுத்தல், வியாபார அபிவிருத்தி, நிதி முகாமைத்துவம், உற்பத்தி அபிவிருத்தி, நடவடிக்கை மற்றும் மனித வள அனுபவங்களைக் கொண்ட குழுவை உருவாக்குங்கள். கூட்டான நோக்கு மற்றும் பெறுமானம் உள்ள குழுவை உருவாக்குங்கள்.

சமூக தொழில்முயற்சி வரையறுக்கப்பட்ட வளங்களால் அமுல்படுத்தலாம் என்பதனால் ஏற்படக்கூடிய பிரச்சினைகளை தீர்ப்பதற்கு உரிய திறன்கள் மற்றும் மனப்பாங்கு இருத்தல் வேண்டும்.

சில திட்டமிடப்பட்ட விடயங்கள் மாற்றமடையலாம் என்பதனால் தொழில்முயற்சியாளர் குறித்த நிலைமைக்கு அமைய, திட்டத்தை மீளாய்வு செய்தல் மற்றும் மாற்றுவதற்கு தயாராக இருத்தல் வேண்டும்.

நல்ல குழு தொடர்பாடல் கட்டாய தேவையாகும். நல்ல பயிற்சியுடன் ஆரம்பித்தால் அமைப்பு விருத்தி அடையும் போது நல்ல பெறுபேறு கிடைக்கும்.

முகாமைத்துவத்தின் அனைத்து உறுப்பினர்கள் மற்றும் ஆளணியுடன் நம்பிக்கையை கட்டியெழுப்புதல் மற்றும் அன்றாட கருமங்களுக்காக பொறுப்புகளை ஒப்படைத்தல் முக்கியமானதாகும்.

சந்தை தொடர்பாக நன்றாக கவனம் செலுத்துதல் விஷேடமாக விற்பனை தொடர்பில் நுகர்வோரை மகிழ்ச்சியாக வைத்திருத்தல் மிகவும் முக்கியமானதாகும்.

பொறுமை மேலுமொரு முக்கியமான விடயமாகும். புதிய வியாபாரத்தை சாத்தியமான மட்டத்தை நோக்கி பயணிப்பதற்கு சாதாரணமாக மூன்று, நான்கு ஆண்டுகள் செல்லும்.

ஆசை மற்றும் அர்ப்பணிப்பை மறக்கலாகாது. மனிதர்களிலும் எமது சமூகத்திலும் நீங்கள் செய்ய வேண்டிய மாற்றம் அல்லது மாற்றத்தை தொடர்ச்சியாக பேணுதல் முக்கியமானதாகும்.



## 8 சமூக தாக்கம் என்றால் என்ன, நீங்கள் எதிர்பார்த்த தாக்கத்தை நீங்கள் அடைந்துள்ளீர்களா என்பதனை எவ்வாறு அறிந்து கொள்வது?

'சமூக தாக்கம்' என்பது அமைப்பு தனது செயற்பாட்டின் மூலம் ஏற்படுத்தும் சமூக மாற்றம் அதாவது அந்த தலையீடுகளில் (interventions) தெளிவான சமூக அல்லது சுற்றாடல் உருவாக்கல் இந்த இலக்கின் வெற்றியை அளவிடும் முறையுடன் தாக்க இலக்கு சமூக மாதிரியின் வெற்றியை மதிப்பீடு செய்யலாம். இது தெரிவு செய்யப்பட்ட சமூக மாதிரி செயற்படுவதாக நிரூபித்தல் மற்றும் முன்னோடி செயன்முறை மூலம் பெற்ற அறிவின் அடிப்படையில் மாதிரி தொடர்ந்தும் மேம்படுத்தப்பட உதவும்.

மாற்றமடையும் கோட்பாட்டில் வரைவிலக்கணம் செய்யப்பட்டுள்ள வகையிலும், சமூக தொழில்முயற்சியின் தலையீடுகளின் தன்மைக்கு அமைய, சமூக தாக்க இலக்குகளுக்கு உண்மையான தலையீடுகளின் பின்னர் இடம்பெறும் விடயங்கள் மற்றும் / அல்லது தெரிவு செய்யப்பட்ட இலக்கு மக்களாக மிகவும் பரந்த நபர்களில் தாக்கம் செலுத்தும் விடயங்களை உள்ளடக்கலாம்.

சமூக தாக்க சுட்டி (ளழஉயைட ஐஅியஉவ ைெனைஉயவழசள) என்பது கண்காணிப்பதற்காக திட்டமிடப்பட்ட நிச்சயிக்கப்பட்ட, அளவிடக்கூடிய விடயங்களாகும் என்பதுடன், தலையீடுகளின் விளைவை (தாக்கம்) மதிப்பீடு செய்வதற்கு இடமளிக்கிறது. நிச்சயிக்கப்பட்ட அமைப்புக்காக வரைவிலக்கணம் செய்யப்பட்டுள்ள சுட்டிகள் சில தகவல்களை சேகரிப்பதற்கான பிரவேசம் / இயலுமை மற்றும் இந்த சுட்டி தொடர்பாடல் செய்யப்பட வேண்டிய நபர்களில் தங்கியுள்ளது.

எளிமையாக சொல்வதாயின் தாக்கத்தை அளவிடுதல் என்பது பின்வரும் வினாக்களுக்கு பதில் வழங்குவதற்கு நிறுவனங்களுக்கு உதவும் தொடர்ச்சியான செயன்முறையாகும் :

1. இன்று எமது கருமங்களால் நேரடி பயனாளிகள் / நுகர்வோருக்கு பயன் கிடைக்கும் என உணர்கிறீர்களா?
2. நீண்ட கால தாக்கத்தை உறுதி செய்வதற்காக சமூக தொழில்முயற்சி சரியான நடவடிக்கைகளை எடுப்பதாக இரண்டாம் நிலை பங்குதாரர்கள் நம்பகின்றனரா?
3. சமூக தொழில்முயற்சி மேற்கொள்ளும் கருமம் நீண்ட கால தாககத்தை ஏற்படுத்தும் என்பது பங்குதாரர்களுக்கு தெரியுமா?

**சமூக தொழில்முயற்சியின் சமூக தாக்கத்தை அளவிடும் அடிப்படை கோட்பாடுகள**

- தொலைநோக்கை வரைவிலக்கணம் செய்தல்
- செயற்பாடுகளை வரைபடமாக்குதல் மற்றும் தாக்கத்தை அளவிடுதல்.
- பயனாளிகளின் பங்கேற்பு
- விளைவுகளை பாவித்தல்
- தொடர்பாடல்

சமூக தொழில்முயற்சி அல்லது ஏதாவது இலாபமீட்டாத அல்லது இலாபம் பெறும் அமைப்பின் சமூக தாக்கத்தை அளவிடும் பல முறைகள் உள்ளன. முதலீட்டின் அடிப்படையில் சமூக நன்மை (ளுசுழுஐ) என்பது சமூக, பொருளாதார மற்றும் சுற்றாடல் காரணிகள் உள்ளிட்ட நிதி கூற்றுகளில் சம்பிரதாயமாக வெளிப்படுத்தப்படாத பெறுமானங்களை அளவிடும் முறையாகும். சமுதாயத்துக்காக பெறுமானத்தை உருவாக்குவதற்காக வியாபாரம் அதன் மூலதன மற்றும் ஏனைய வளங்கள் எவ்வளவு தூரம் பயனுள்ளதாக பாவிக்கப்படுகிறது என்பதனை அவர்கள் அடையாளம் காணலாம்.

"சமூக தொழில்முயற்சியாளரின் அர்ப்பணிப்பினால் ஊட்டம் பெறும் போது சில சிறந்தவை மிகவும் சிறந்தவையாக மாறலாம்"

– பெப் ஸ்கோல்,ஸ்கோல் மன்றத்தின் ஸ்தாபகர் மற்றும் தலைவர்

# சமூக தொழில்முயற்சியாளர்களுக்கான மேலதிக மற்றும் கற்றல் மூலங்கள்

சமூக தொழில்முயற்சிக்காக தகவல் மூலங்கள் பெருமளவில் உள்ள போதிலும், அவற்றில் பெரும்பாலானவை நிகழ்நிலையில் உள்ளன. தெரிவு செய்யப்பட்ட சில கற்றல் மூலங்கள் கீழே காட்டப்படுகின்றன.

**British Council – Social Enterprise**
https://www.britishcouncil.org/society/social-enterprise

பிரிட்டிஷ் கவுன்சில் சமூக மற்றும் சுற்றாடல் பிரச்சினைகளை தீர்க்கும் ஊடகமாக சமூக தொழில்முயற்சி அபிவிருத்தியை மேம்படுத்துவதுடன் சமுதாயங்கள் மற்றும் சமூகங்களுக்கு சாதகமான மாற்றத்தை வழங்குகிறது. அது சமூக தொழில்முயற்சியாளர்களை பயிற்றுவித்தல், ஆலோசனை மற்றும் நிதி வாய்ப்புகளை வழங்குதல், பாடசாலை மற்றும் பல்கலைக்கழக சமூக தொழில்முயற்சி கல்வியை மேம்படுத்துதல், கொள்கை விவாதங்களை ஏற்பாடு செய்தல், ஆராய்ச்சி நடத்துதல் மற்றும் கல்விச் சுற்றுலா ஏற்பாடு செய்வதற்கான அறிவு மற்றும் மிகச்சிறந்த பிரயோகங்களுக்காக சர்வதேச அபிவிருத்திக்கு வினைத்திறனான சுற்றாடலை உருவாக்குவதற்கான பிரவேசத்தை வழங்குகிறது.

**Social Enterprise UK - Practical Guides**

சமூக தொழில்முயற்சி UK இல் இணையத் தளத்தில் சமூக தொழில்முயற்சிகளை ஆரம்பித்தல் மற்றும் இயக்குதல் தொடர்பாக பல தகவல்கள் மற்றும் பிரயோக ரீதியான வழிகாட்டல் புத்தகங்கள் உள்ளன. இவை வியாபார வாழ்கை சக்கரத்தின் அனைத்து கட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் மிகவும் பயனுள்ள ஆலோசனைகள் மற்றும் அறிவுரைகள் வழங்கப்படுகின்றன.

https://www.socialenterprise.org.uk/practical-guides/

**UnLtd**

ஐக்கிய இராச்சியத்தின் சமூக தொழில்முயற்சியாளர்களுக்கு முன்னணி சேவை வழங்குனராக இருக்கிறது. அது உலகின் பாரிய அவ்வாறா சேவை வழங்கும் இணையத் தளமாகும்.

http://unltd.org.uk/

**Global Social Benefit Institute (GSBI)**

வறுமைக்கு நவீன தீர்வுகளை அபிவிருத்தி செய்யும் சமூக தொழில்முயற்சியாளர்களுக்கு உதவுகிறது. மதியுரை, மிகச்சிறந்த வியாபார நடைமுறைகள் தொடர்பான ஆலோசனைகளை வழங்குதல் மற்றும் முதலீட்டாளர்களை இணைத்தல் மூலம் இது தொழில்முயற்சியாளர்களின் வாழ்க்கைச் சக்கரத்தில் அனைத்து கட்டங்களிலும் உதவுகிறது.

http://www.scu.edu/socialbenefit/entrepreneurship/gsbi/

## இலங்கையில் சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முயற்சியாளர்கள் மற்றும் சமூக தொழில்முயற்சிகளுக்கான வியாபார உதவிச் சேவை வழங்குனர்கள்.

அரச சட்டங்கள் மற்றும் முறைமைப்படுத்தல் நிறுவனங்கள்

**கம்பனி பதிவாளர் திணைக்களம்** http://www.drc.gov.lk
வியாபார பதிவு செய்தல், மேற்பார்வை மற்றும் மூடிவிடுதல் தொடர்பாக பொறுப்பு வகிக்கிறது. 2007 ஆண்டின் 07 இலக்க கம்பனிச் சட்டம் சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முயற்சியாளர்களை கூட்டமைப்பு செய்தல் தொடர்பான சட்டங்கள் மற்றும் ஏற்பாடுகளை கட்டுப்படுத்துகிறது. தற்போதைய சட்ட ரீதியான ஏற்பாடுகளின் கீழ், சமூக தொழில்முயற்சி வரையறுக்கப்பட்ட தனியார், வரையறுக்கப்பட்ட பொது அல்லது பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனியாக பதிவு செய்யலாம்.

**நுகர்வோர் விவகார அதிகாரசபை** http://www.caa.gov.lk
நுகர்வோர் தேவைகளைப் பாதுகாத்தல் மற்றும் இலங்கையில் நியாயமான சந்தை போட்டியை உறுதி செய்வதற்கு CAA கட்டாயமானதாகும். பொருட்கள் மற்றும் சேவை வழங்குனர்கள் ஆகியோருக்கிடையில் பயனுள்ள போட்டியை பேணி, நுகர்வோரின் அபிலாசைகளை பாதுகாப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை CAA மேற்கொள்கிறது.

**உள்நாட்டு இறைவரித் திணைக்களம்** http://www.ird.gov.lk
தனிநபர் மற்றும் வர்த்தகங்களின் வரி மதிப்பீடு செய்தல் மற்றும் சேகரித்த பிரதான கருமமாகும். 500 மில்லியனுக்கு குறைவான புரழ்வு உள்ள வியாபாரம் SMEs என கருதப்படுவதுடன். அனைத்து SMEs களுக்கும் 14 % வரி விகிதம் உரிமை கோரப்படுகிறது. அரசு அவ்வாறான வசதிகளை பிரகடனப்படுத்தும் போதும், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்களுக்கு வரிச் சலுகை மற்றும் சலுகைகளை வழங்குகிறது.

**இலங்கைச் சுங்கம்** https://www.customs.gov.lk
வருமானம் சேகரித்தல், வருமான சேகரித்தலில் கசிவு மற்றும் ஏனைய மோசடிகளை தடுத்தல், சட்ட ரீதியான வர்த்தகத்துக்கு வசதிகளை வழங்குதல், புள்ளிவிபரங்களை வழங்குவதற்காக இறக்குமதி மற்றும் ஏற்றுமதி தரவுகளை சேகரித்தல் போன்றவை பிரதான கருமங்களாகும். இறக்குமதி மற்றும் எற்றுமதி தொடர்பான அனைத்து செயற்பாடுகளும் சுங்கத்தினால் மேற்கொள்ளப்படுகிறது.

**மத்திய சுற்றாடல் அதிகாரசபை** (CEA) https://www.cea.lk
சூழல் மாசடைதலைத் தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்துதல் மூலம் சுற்றாடலின் தரத்தை முறைமைப்படுத்துதல், பராமரித்தல் மற்றும் கட்டுப்படுத்துவதற்காக தற்போதுள்ள பிரதான நிறுவனமாகும். சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் வழங்குதல், சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு (EIA) கருவி, சுற்றாடல் விதந்துரைகள், தகவல் மற்றும் ஆய்வுகூட சேவைகள், கழிவு முகாமைத்துவ உரிமம் வழங்குதல், GIR / RS சேவை வழங்கலும் பிரதான சேவைகளில் உள்ளடங்குகிறது.

**கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்** http://coop.gov.lk
மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் ஒவ்வொரு மாகாணத்திலும் கூட்டுறவு துறையின் அபிவிருத்திக்கு பொறுப்பாக இருக்கிறது. அனைத்து கூட்டுறவுச் சங்கங்களையும் பதிவு செய்தல், நிர்வாகம் மற்றும் மேற்பார்வை, கூட்டுறவு சங்கங்களின் பயிப்பாளர் சபை, முகாமையாளர்கள், ஊழியர்கள் மற்றும் உறுப்பினர்களுக்கான நிதி உதவி, பயிற்சி மற்றும் கல்வி வழங்குதல் பிரதான செயற்பாடுகளாகும்.

**மாநகர சபைகள், நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகள்** http://www.lgpc.gov.lk
உள்நாட்டு வரி நோக்கங்களுக்காக வியாபார பதிவு செய்தல் மற்றும் பொது சுகாதார சட்டங்களை அமுல்படுத்துதல்.

## தொழில்முயற்சி உதவி மற்றும் நிதிச் சேவைகள்

**தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை** https://www.neda.gov.lk
அமைச்சுக்கள், மாகாண சபைகள் மற்றும் ஏனைய சேவை வழங்குனர்கள் மத்தியில் தொழில்முயற்சி அபிவிருத்தி செயற்பாடுகளை ஒருங்கிணைப்பு செய்கிறது. அதற்கு மேலதிகமாக NEDA இனால் வியாபார ஆலோசனைகள், பயிற்சி, சந்தை தொடர்புகள் மற்றும் நிதியை அணுகும் வசதிகள் மற்றும் தொழில்நுட்ப உதவிகளுக்கு S&T நிறுவனத்துடன் ஒருங்கிணைப்பு செய்கிறது. அரசின் கவனம் மற்றும் ஒத்துழைப்பு கிடைக்க வேண்டிய முக்கியமான பிரிவுகளாக சமூக தொழில்முயற்சிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

**சிறு தொழில்முயற்சி அபிவிருத்தி பணியகம்** http://www.sed.gov.lk/
பொருளாதார அபிவிருத்திக்கான சாத்தியம் உள்ள பிரிவகளில் சிறு தொழில்முயற்சிக்கு உதவுவதுடன், தற்போதுள்ள சிறிய தொழில்முயற்சிகளை அபிவிருத்தி செய்ய உதவுதல். அது வடக்கு, கிழக்கு மாகாணங்கள் அடங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் அலுவலகங்களை இயக்குவதுடன், பொதுமக்கள் தமது சேவைகளைப் பெறக்கூடிய வகையில் இந்த அலவலகங்கள் மாவட்ட செயலக வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை** https://www.srilankabusiness.com
ஏற்றுமதியாளர்கள் மற்றும் கைத்தொழில்கள் தமது தொழில்முயற்சிகளை விரிவாக்க உதவுதல் மற்றும் வாய்ப்புகளை உருவாக்குதல், அதன் மூலம் பிராந்தியத்தில் ஏற்றுமதி விற்பனை மற்றும் தொழில் எதிர்பார்ப்புகளை அதிகரித்தல். இந்த குறிக்கோளை அடைவதற்காக ஏற்றுமதி அபிவிருத்தி சபையால் இலங்கை முழுவதும் அமைந்துள்ள சிறிய மற்றும் நடுத்தர அளவான வியாபாரங்களுக்கு ஆலோசனை சேவை வழங்குவதுடன், பிராந்தி ஏற்றுமதியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களுக்காக உருவாக்கப்பட்டுள்ள கல்விசார் மாநாடுகள் மற்றும் பயிற்சிகளுக்கு அனுசரணை வழங்குகிறது.

**கைத்தொழில் அபிவிருத்திச் சபை** https://www.idb.gov.lk
இலங்கையின் கைத்தொழில் பிரிவின் அபிவிருத்திக்கான பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ள பிரதான அரச நிறுவனமாகும். நாடு முழுவதும் அமைந்துள்ள அலுவலகங்கள் ஊடாக நாட்டின் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சியாளர்களுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குகிறது.

**கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம்** (ITI) http://iti.lk
ITI என்பது கைத்தொழில், சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முயற்சி பிரிவுகளுக்கு தொழில்நுட்ப ஆலோசனை மற்றும் மதியுரை சேவைகளை வழங்குதல், கைத்தொழிலை அடிப்படையாக கொண்ட ஒத்துழைப்பு ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுதல், சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முயற்சியாளர்களுக்கு தொழில்நுட்ப தகவல் பகிர்வு மற்றும் பயிற்சி வசதிகளுக்காக நிறுவப்பட்டுள்ள அரச நிறுவனமாகும்.

**இலங்கை கட்டளைகள் நிறுவனம்** (SLSI) http://slsi.lk
SLSI என்பது தேசிய தரங்களைத் தயாரித்தல் மற்றும் அமுல்படுத்துதல், பொருளாதாரத்தின் அனைத்து பிரிவுகளினதும் தரத்தைச் சான்றுபடுத்துதல், செல்லுபடியாகும் அளவை முறைகளை பிரபலப்படுத்துதல் மற்றும் வினியோகித்தல், தரப்படுத்தல் மற்றும் தரம் தொடர்பான எண்ணக்கரு, பிரயோகங்கள் மற்றும் நுட்பங்கள், முகாமைத்துவம் தொடர்பாக கைத்தொழில் சேவை வழங்கும் நபர்களை பயிற்றுவிப்பதற்கு பொறுப்பான அரச நிறுவனமாகும்.

**விதாத்தா நிலையம்** https://www.mostr.gov.lk
விதாத்தா செயற்திட்டம் 2004 ஆண்டில் தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சின் ஆரம்பிக்கப்பட்டதாகும். ''கிராமிய பொருளாதாரத்தை உயர்த்துதல் மற்றும் தேசிய பொருளாதார அபிவிருத்திக்கு அதன் பங்களிப்பை அதிகரிக்கும் நோக்கத்துடன்'' விஞ்ஞானிகளின் விஞ்ஞான அறிவு

மற்றும் ஆராய்ச்சி, புத்தாக்க அறிவை சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முயற்சியாளர்களுக்கு வழங்குதல் விதாத்தா முன்னெடுப்பின் குறிக்கோளாகும். நாடு தழுவிய விதாத்தா வள நிலைய வலையமைப்பு VRC ஊடாக அடிமட்டத்தில் சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முயற்சிகளுக்கு (MSME) சேவை வழங்கப்படுகிறது.

**விவசாய திணைக்களம்** (DoA) https://doa.gov.lk

விவசாய தொழில்முயற்சிகள் மற்றும் வர்த்தக கமத்தொழில் மேம்படுத்தல் மற்றும் உதவி வழங்குவதற்காக விவசாய திணைக்களம் DoA கட்டாயமானதாகும். அது கமக்காரர் அமைப்புகள், சமூக பண்ணை இயக்கங்கள், வர்த்தக ரீதியான பண்ணைகள் மற்றும் நடுகைப் பொருட்களின் வர்த்த ரீதியான வழங்குனர்கள், கொள்வனவாளர்கள் மற்றும் பண்ணை உற்பத்தி வழங்குனர்களை உருவாக்குவதற்கும், உதவுவதற்கும் விஷேட செயற்திட்டங்களை அமுல்படுத்துகிறது. சமூக தொழில்முயற்சியாக கருதப்படக்கூடிய உருவாக்கப்பட்ட மற்றும் உதவி வழங்கப்படும் விவசாய அடிப்படை அமைப்புகள் விவசாய திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

**இலங்கை மத்திய வங்கி மற்றும் அரச, வர்த்தக வங்கி கட்டமைப்பு**

இலங்கை மத்திய வங்கி நாட்டின் சமநிலை மற்றும் அனைத்தையும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சிக்காக அபிவிருத்தியின் முக்கியத்துவத்தை வழங்குகிறது. சௌபாக்கியா கடன் திட்டம், சிறிய மற்றும் நடுத்தர அளவான தொழில்முயற்சியாளர்களுக்கான கடன் பிணைமுறித் திட்டம், சௌபாக்யா COVID - 19 புத்தெழுச்சி வசதிகளின் கட்டம் I, COVID - 19 புத்தெழுச்சி வசதிகளின் கட்டம் II, வட்டி மானியம் மற்றும் கடன் சான்றிதழ் திட்டம் (Phaarantee Scheme) ஆகிய பிரதானமான ஐந்து திட்டங்களுக்காக இலங்கை மத்திய வங்கி (CBSL) தொடர்ச்சியாக நிதி வழங்குகிறது. SEPI கடன் திட்டம், SMILE III மற்றும் SMEs மற்றும் SAPP-IFAD கடன் திட்டங்கள் தற்பொது அமுல்படுத்தப்படும் தொழில்முயற்சி கடன் திட்டங்களாகும்.

## மாகாண சபைகளின் கீழ் அமுல்படுத்தப்படும் அபிவிருத்தி மற்றும் உதவிச் சேவைகள்

http://www.isb.lk http://www.redacpgov.com http://ida.wp.gov.lk https://www.cm.spgov.lk
மாகாண சபைகள் அனைத்து வகையான MSMEs மற்றும் சமுதாய அடிப்படை அமைப்புகள் மற்றும் வியாபார நிறுவனங்களுக்கு உதவிச் சேவைகளை வழங்கும் அவர்களது வியாபார உதவி முகவர் நிறுவனங்களை செயற்படுத்துகின்றன.

**சிறிய கைத்தொழில்கள் தொடர்பான மாகாண திணைக்களம் - அனைத்து மாகாண சபைகள்**
பாரம்பரிய கலைஞர்கள் மற்றும் கலைஞர்களுக்கு தேவையான வளங்கள், பயிற்சி, ஆலோசனைகள் மற்றும் சந்தை வாய்ப்புகளை வழங்குதல் சிறு கைத்தொழில் திணைக்களத்தின் பிரதான பொறுப்பாகும்.

**சமூர்த்தி அபிவிருத்தி திணைக்களம்** https://www.samurdhi.gov.lk
சமூக பாதுகாப்பு, சமூக நலன்பரி, மனித மூலதன அபிவிருத்தி, வாழ்வாதார அபிவிருத்தி செயற்பாடுகளை மேம்படுத்துதல், நுண்நிதி வழங்கல் மற்றும் சுற்றாடலைப் பாதுகாத்தல், போசாக்கு வழங்குவதற்காக குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்குவதன் மூலம் வறுமை, குறைந்த வருமானம் பெறுவோர் மற்றும் ஏனைய சமுதாயங்களை வலுவூட்டுதல், விரைவுபடுத்துதல், தேசிய அபிவிருத்தி மற்றும் உணவு பாதுகாப்பு, வறுமையற்ற சமூக நியாயத்தை உறுதி செய்த, சுபீட்சமான நாட்டை உருவாக்குதல்.

**இலங்கை வர்த்தக சம்மேளனம்** (CCC) http://www.chamber.lk
இலங்கையின் மிகப்புராதனமான வியாபார உறுப்பினர்களின் நிறுவனமாகும். அதன் நிறுவன ரீதியான மற்றும் சிறிய, நடுத்தர அளவான 500 தொழில்முயற்சியாளர்கள் இருப்பதுடன், வர்த்தக 20 க்கு மேற்பட்ட வர்த்தக சபைகளுக்கு வசதிகளை வழங்குகிறது. CCC இனால் நன்கொடையாளர்களின் நிதியத்துடன் இணைந்து SME உதவி திட்டங்கள் பல அமுல்படுத்தப்படுகின்றன.

**இலங்கை வர்த்தக மற்றும் கைத்தொழில் சபை சம்மேளனம்** (FCCISL) **மற்றும் பிராந்திய மற்றும் மாவட்ட வர்த்தக சம்மேளனங்கள்** http://www.fccisl.lk
FCCISL என்பது பிராந்திய மற்றும் மாவட்ட வர்த்தக சம்மேளனங்களின் அதியுயர் நிறுவனமாகும். அது தேசிய மற்றும் பிரதேச மட்டத்தில் சிறிய மற்றும் நடுத்தர அளவான வியாபாரம் சார்ந்த செயற்பாடுகள் ஒருங்கிணைப்பு மற்றும் வசதிகள் வழங்கப்படுகிறது.

**சர்வோதய சிரமதான இயக்கம்** https://www.sarvodaya.org/seeds
இலங்கையின் மிகப் பழைய அரச சார்பற்ற அமைப்பாகும். வரையறுக்கப்பட்ட சர்வோதய பொருளாதார அபிவிருத்தி சேவை தேசிய அடிமட்டத்தில் முன்னோடி "சமூக தொழில்முயற்சி முன்னெடுப்புகள்" மேற்கொள்ளப்படுகின்றன.

**UN Citra Lab** https://citralab.lk
Citra Lab என்பது இலங்கையின் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சு, கல்வி அமைச்சு மற்றும் UNDP ஆகியவற்றின் முன்னெடுப்பாக 2014 ஆண்டில் நிறுவப்பட்ட சமூக புத்தாக்க ஆய்வுகூடமாகும். இலங்கையில் சமூக புத்தாக்கத்தை ஊக்குவித்தல் அதன் குறிக்கோளாகும். பல்வேறு பாங்கில் பிரச்சினைகளை ஆராய்ந்து பார்த்தல், பேண்தகு அபிவிருத்தி தீர்வுகளை வழங்குவதற்கான சூழலை உருவாக்குவதற்காக செயற்படுகிறது.

## சமூக தொழில்முயற்சியாளர்களுக்கு தொழில்முயற்சி ஆலோசனைகள், பயிற்சி, சந்தை மற்றும் முதலிட்டு வாய்ப்புகளை வழங்குதல்

**லங்கா சோஷல் வென்சர்ஸ்** (LSV) http://www.lankasocialvenyures.com
புதிய மற்றும் தற்போதுள்ள சமூக தொழில்முயற்சிகளை மேம்படுத்துதல் மற்றும் உதவிகளை வழங்குகிறது. சமூக தொழில்முயற்சி தனிநபர் அபிவிருத்தி தேவைகளுக்கு அமைய சமூக தொழில்முயற்சிகளுக்காக தயாரிக்கப்பட்ட உதவி செயற்திட்டத்தை அமுல்படுத்துகிறது. தனித்தனியாகவும், குழு அடிப்படையிலும் அவர்களுக்கு வசதியான வேளைகளில் பயிற்சி வழங்குவதன் மூலம் பெரும்பாலான வியாபார உதவிச் சேவைகள் வழங்கப்படுகின்றன. பயிற்சிகள் மற்றும் ஆலோசனைச் சேவைகளை வழங்குவதற்காக சாதகமான பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் போதனாசிரியர்கள் ஈடுபடுத்தப்படுகின்றனர். அதற்கு மேலதிகமாக சமூக தொழில்முயற்சிகள் தொடர்பாக மக்களைத் தெளிவூட்டுவதற்காக கொள்கை ரீதியான விவாதங்கள், மாநாடுகள் மற்றும் கருத்தரங்குகள் நடத்தப்படுகின்றன.

**குட் மார்கட்** (Good Market) https://www.goodmarket.global
ஆகக்குறைந்த தராதரத்தை நிறைவு செய்யும் துறைகள் மற்றும் மனிதர்களுக்கு சிறந்த மற்றும் புவிக்கு ஊறு விளைவிக்காத சமூக தொழில்முயற்சிகள் மற்றும் பொறுப்பான வியாபாரத்துக்கான திறந்த மேடையாகும். அது சனிக்கிழமைகளில் கொழும்பு குதிரைப் பந்தயத்திடல் வாகனத் தரிப்பிடத்தில் திறந்தவெளிச் சந்தையாக நடத்தப்படுகிறது. மனிதர்களுக்கும் சுற்றாடலுக்கும் நேயமான உற்பத்திகளுக்கு ஊக்கமளிக்கும் ஆயிரக்கணக்கான நிரந்தர நுகர்வோரை ஈர்த்துள்ளது. Good Market தனக்கு சொந்தமான சுப்பர் மார்க்கட் மற்றும் உணவகத்தை நடத்துகிறது. தற்போது Good Market இல் நிகழ்நிலை அரங்கில் பதிவு செய்யப்பட்டுள்ள நாடு பூராவும் உள்ள 100 க்கு அதிகமான வர்த்தகர்கள் உள்ளனர். விற்பனையாளர்கள் தமது உற்பத்திகளின் தரம் மற்றும் பண்புகளை மேம்படுத்த உதவும் பல்வேறு தலைப்புகளில் பயிற்சி மற்றும் ஆலோசனை வழங்கும் நிறுவனமாகும்.

**Lanka Impact Investing Network (LIIN)** http://www.liin.lk
சாதகமான மாற்றத்தை உருவாக்குவதற்காக சமூக தாக்க முதலீட்டாளர்கள் மற்றும் சமூக தொழில்முயற்சியாளர்களை ஒருங்கிணைக்கும் குறிக்கோளுடன் இலங்கையில் சமூக தாக்க முதலீட்டாளர்கள் முன்னோடியாக LIIN உள்ளது. LIIN , சோஷல் என்டர்பிரைஸஸ் லங்கா மற்றும் ஹட்டன் நெஷனல் வங்கியுடன் இணைந்து "எத் பவுர" தொலைக்காட்சி ரியாலிட்டி நிகழ்ச்சி முதற்தடவையாக இலங்கையில் முன்னெடுக்கப்பட்டது.

**சமூக தொழில்முயற்சி இங்குபேஷன் ஆய்வுகூடம், பேராதனைப் பல்கலைக்கழகம் (SEIL)**
**சமூக தொழில்முயற்சி இங்குபேஷன் ஆய்வுகூடம், ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம் (SEIC)**
மத்திய மாகாணத்தில் சமூக தொழில்முயற்சி தொடர்பான நிறுவனங்களுக்கு முறையான வழிப்படுத்தல், மதியுரை, பயிற்சி மற்றும் ஒருங்கிணைப்பை வழங்குவதற்காக இரண்டு சமூக தொழில்முயற்சி இங்குப்பேஷன் செவைகள் நிறுவப்பட்டுள்ளன.

**Social Enterprise Lanka (SEL) http://socialenterprise.lk**
பங்குதாரர்களை ஒன்று சேர்த்து, தமது கூட்டு நோக்குக்காக அவர்களது முயற்சிகளை நிரற்படுத்தும் வலையமைப்பு மைய சேவை lrhs SEL என்பது சமூக தொழில்முயற்சிகளுக்கான "அத் பவுர" தொலைக்காட்சி ரியலிட்டி நிகழ்ச்சியின் ஒரு பிரதான பங்குதாரர் நிறுவனம் ஆகும்.

## ஏனைய நிதி மற்றும் வியாபார உதவிச் சேவை

**கிறவுன்ற்ஸ்லன்ற் (Crowdisland) https://crowdisland.lk**
ஆரம்ப நிதியை வழங்கும் இந்த அரங்கு இலங்கையின் தொழில்நுட்ப ஆரம்பிப்பாளர்கள் தமது கருத்துக்களுக்கு, தமது வியாபாரத்துக்கு உலகம் முழுவதும் நிதி சேகரிப்பதற்கான வாய்ப்பை வழங்குகிறது.

**Lanka Angel Network http://www.lankanangelnetwork.com**
ஆரம்பிப்பாளர்களுக்கான வளங்கள், அறிவு மற்றும் இங்குப்பேஷனுக்கான நிதி வழங்கும் செயற்திட்டம் ஆகும். உயர் வளர்ச்சியின் ஆரம்ப கட்டத்தில் உள்ளவை, தனியான முதலீட்டாளர்கள், வியாபார தனவந்தர்கள் மற்றும் தேவதை முதலீட்டாளர்களைக் கொண்டதாகும். அடிப்படையாக இது இலங்கையின் ஆரம்ப முதலீட்டாளர்கள், இங்குப்பேற்றர் மற்றும் ஆலோசகர்களை உள்ளடக்கிய சமூகமாகும்.

**யூத் பிஸ்னஸ் ஸ்ரீலங்க**ா (**YBSL**) http://www.ybsl.lk
இளம் தொழில்முயற்சியாளர்கள் பல்வேறு வகையில் முன்னேறுவதற்கு உதவும் தேசிய அமைப்பாகும். பயிற்சி, ஆலோசனை, நிதி வழங்கல் மற்றும் இம்குப்பேஷன் வாய்ப்புகள் அவற்றில் அடங்குகின்றன. இந்த அமைப்பு இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் ஒரு பகுதியாக பேரார்வம் கொண்ட தொழில்முயற்சியாளர்களை ஊக்குவிப்பதற்காக அனைத்து ஆண்டுகளிலும் நிகழ்ச்சிகள் மற்றும் செயற்திட்டங்களை ஏற்பாடு செய்கிறது.

**Good Life X https://goodlifex.com**
அறிவுமிக்க தொழில்முயற்சி, பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தியை மேம்படுத்துகிறது. ஆசியாவின் புதுப்பிக்கத்தக்க மற்றும் மீள்கட்டமைப்பு கருத்திட்டத்தை உருவாக்குவதுடன், அவர்களது உற்பத்திகள் மற்றும் சேவைகளை உலக சந்தைக்கு கொண்டு செல்வதற்காக ஆரம்ப நிலையிலுள்ள மற்றும் சிறிய, நடுத்தர அளவான தொழில்முயற்சியாளர்களுடன் இணைந்து செயற்படுகிறது.

**இந்த கையேட்டை தயாரிக்கும் போது பின்வரும் மூலங்கள் பாவிக்கப்பட்டன.**


- லங்கா சோஷல் வென்சர்ஸ் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட பயிற்சி மற்றும் பாடநெறி ஆலோசனை குறிப்புகள், கற்றல் பொருட்கள் மற்றும் வழிகாட்டல்கள்
- A Business Planning Guide to Developing a Social Enterprise, The Royal Bank of Scotland & NatWest
- Putting the pieces together: A business planning guide for social enterprises, Social Ventures Australia
- How to Measure and Report Social Impact: A Guide for investees, The Social Invest-ment Business Group
- The State of Social Enterprise Sector in Sri Lanka, British Council
- Startup and Change the World: Guide for Young Social Entrepreneurs, Youth SocialEnterprise Initiative, Thailand
- Start Your Social Enterprise, The Social Enterprise Guide, Social Enterprise UK


**Photo credit:**

- creativecommons.org
- biolite.com
- earthbound.lk
- Lanka Social Venture

Find out more about our work to empower women and girls, support the growth of social enterprise, and foster a more inclusive, sustainable and prosperous world.

www.britishcouncil.org/society

Follow our social enterprise programme on Twitter:

@SocEntGlobal

© British Council 2022

The British Council is the United Kingdom's international organisation for cultural relations and educational organisation.

9 786245 548118